விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper In Srilanka

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Valampurii

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 20 சனிக்கிழமை (06.10.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 291

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறு வெளியீடு

யாழ்., சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை தேசிய ரீதியில் முதலிடம்

புள்ளிகள்: 198
எம்.திகழொளிபவன்
யா/இந்து ஆரம்ப பாடசாலை

புள்ளிகள்: 198
நவஸ்கன் நதி
சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றவர்கள்

கிளிநொச்சி	முல்லைத்தீவு	வவுனியா	மன்னார்
புள்ளிகள்: 196 க.தேனுசன் கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்	புள்ளிகள்: 195 துஷ்சாதனா மு/நெடுங்கேணி மாமடு, பழம்பாசி அ.த.க பாடசாலை	புள்ளிகள்: 197 ஹரித்திக்ஹன்சுஜா வவு/அ.த.க வித்தியாலயம்	புள்ளிகள்: 187 தி.திருக்குமரன் மன்/கருங்கண்டல் RCTMS பாடசாலை

(யாழ்ப்பாணம்)

2018 ஆம் ஆண்டுக்கான 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் தமிழ் மொழி மூலம் தேசிய ரீதியில் முதல் மூன்று இடங்களை வடக்கை சேர்ந்த 3 தமிழ் மாணவர்கள் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவனான எம்.திகழொளிபவன், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவியான நவஸ்கன் நதி ஆகியோர் 198 புள்ளிகளை பெற்று தமிழ் மொழிமூலம் தேசிய ரீதியில் முதல் நிலையிலும், வவுனியா சிவபுரம் ஆரம்ப பாடசாலையை சேர்ந்த பாலக்குமார் ஹரித்திக் ஹனுசுஜா 197 புள்ளிகளை பெற்று இரண்டாம் நிலையிலும் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட மாணவியான ஜெயந்தன் கிருஜனா, தெல்லிப்பழை மகாஜன கல்லூரியை சேர்ந்த சாருகா சிவனேஸ்வரன் ஆகியோர் 196 புள்ளிகளை பெற்று நான்காம் நிலையிலும் உள்ளார்கள்.

நடைபெற்று முடிந்த 2018 ஆம் ஆண்டுக்கான 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று காலை இணையத் தளத்தில் வெளியாகியிருந்தன.

இதில் முதலாம் இடத்தை பிலியந்தல சோமவீர சந்ரசிறி வித்தியாலயத்தைச் சேர்ந்த புமித் மெத்துனுல் விதானகேயும். 23

அரசியல் கைதிகள் என நாட்டில் எவருமில்லை!

நீதி அமைச்சர் தலதா அத்துகோரள

(கொழும்பு)

அரசியல் கைதிகள் என்று யாரும் நாட்டில் இல்லை. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு வழக்குத் தாக்கல் 24

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்று சிங்கள இளைஞர்கள் போராட்டம்

(அநுராதபுரம்)

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியா அமைப்புக்களுடன் சிங்கள இளைஞர்களும் இணைந்து அநுராதபுரத்தில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான 23

குமரப்பா, புலேந்திரன் நினைவுத் தூபி அமைக்கும் இடத்தில் பெரும் மோதல்

07

புதிய அரசியல் யாப்பின்மூலம் அதிகார பகிர்வு தரப்பட வேண்டும்

பிரி.அமைச்சரிடம் சம்பந்தன் எடுத்துரைப்பு

(கொழும்பு) தமிழ் மக்களின் நீண்ட கால அதிகாரப் பகிர்வு கோரிக்கையானது புதிய அரசியல் யாப்பினூடாக தீர்க்கப்பட வேண்டும் என பிரித்தானியாவின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்கான அமைச்சர் மார்க் பீல்ட்டிடம், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எடுத்துரைத்துள்ளார். (23-ம் பக்கம்...)

பொஸ்கோவில் அதிகளவான மாணவர் சித்தி

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த 2018 ஆம் ஆண்டுக்கான 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று காலை இணையத் தளத்தில் வெளியாகியிருந்தன.

வடக்கு மாகாணத்தில் சித்தியடைந்த எண்ணிக்கையில் யாழ் சென் பொஸ்கோ வித்தியாலயத்தில் அதிகளவான மாணவர் 24

அரசியல் தீர்மானத்தின் மூலம் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

இரா.சம்பந்தனிடம் அரசியல் கைதிகள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒரணியில் ஜனாதிபதியை சந்தித்து அரசியல் தீர்மானம் ஒன்றின் மூலம் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தனிடம் தமிழ் அரசியல் கைதிகள் வேண்டுகோள் 23

ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்

மாவை சேனாதிராசா எச்சரிக்கை

(பனிக்கன்குளம்)

ஜனாதிபதிக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்போவதாக தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்காக ஐ.நா சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக ஜனாதிபதி உள்நாட்டிலயே தீர்வு காணுவதாக குறிப்பிட்டுள்ளமை இந்த 23

யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)



அறிவித்தல்

வீதி பாதுகாப்பு தொடர்பாக யாழ் மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய த்தில் மாதாந்தம் நடைபெறும் கூட்டத்தில், யாழ்-பட்டினப் பகுதியில் சங்க பதிவு அனுமதி இல்லாது அத்துமீறி செயற்படும் ஓட்டோ உரிமையாளார்களைக் கட்டுப் படுத்த எமது சங்கம் முன்வைத்த விண்ணப்பம் தொடர்பாக பொலிஸ் அத்திய ட்சகர் காரியாலயமும் யாழ் மாநகர சபையும் மேற்கொண்ட நடவடிக் கையின் பிரகாரம் 05-10-2018 ல் யாழ் ஆஸ்பத்திரிவீதியில் உள்ள மூன்று ஓட்டோ தரிப்பிடங்களுக்கு ஓட்டோ இலக்கம் பொறிக்க ப்பட்ட தரிப்பிட போட் நாட்டப்பட்டது.

எனவே எமது சங்கப்பதிவுள்ள ஓட்டோ உரிமையாளர்கள் கட்டுப் பாடாக பயணிகளுக்கு சேவை செய்ய வேண்டும் என அறியத்தருவ தோடு இவ்வாறு ஓட்டோ சேவையை எமது சங்கம் கட்டுப்பாடாக மேற் கொள்ள போட் நாட்டி பேருதவி புரிந்த யாழ்-மாவட்ட பொலிஸ் அத்திய ட்சகர், சகபொலிஸ் உத்தியோகத்தர்,யாழ் மாநகரசபை முதல்வர், ஆணையாளர், பொறியியலாளர், பணியாளர் மற்றும் ஊழியர்க்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கி ன்றோம்.

நன்றி

நிர்வாகம்

இல.40, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்

தரம் 4 மாணவர்களுக்கான புலமைப்பரிசில்-2019

புதிய வகுப்பு ஆரம்பம்

07.10.2018

ஞாயிறு பி.பகல் 4.00 மணி

- அனுமதி பெறும் பிள்ளைகள் பெற்றோருடன் வருகை தரவும்.
- ஒரு பிரிவில் 40 மாணவர்கள் மட்டும்.
- வாரத்தில் 5 நாட்கள் வகுப்பு
- ஞாயிறு தோறும் மாதிரிப் பரீட்சை.
- யாழ்.பிரபல ஆசிரியர்களின் கற்பித்தல்.

தொடர்பு:

புதிய நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

தொ.பே:-0774598440

(5934)

வேலைவாய்ப்புகள்

சர்வதேச கம்பனி ஒன்றிற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களில் O/L படித்தவர்களுக்கான பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு.
- வயதெல்லை 18-28

தொடர்புகளுக்கு:-

0766668385,

0778485328

(A-5936)

வலம்புரி

021 221 7603,

விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532

மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

Dr.P.ஆறுமுகம்

T.P :- 0777 569 205

09.10.2018-14.10.2018 வரை
6 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=

மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தை கிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய் களுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

தொடர்பு கொண்டு வரவை உறுதிப்படுத்துங்கள்

இவை அனைத்துக்கும் மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

இப்போது நாம் புதிய முகவரியில்

விதுனா லொச்

ஜும்மா பள்ளிவாசல் பின் பக்கம் யாழ்ப்பாணம்.
(அருமை உணவகத்துக்கு அருகில்) தொ.பே: 021 722 3409

(A-4064)

"வாழ்க வளமுடன்"

பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிருபதாஸ் நிவேதிகன்

யா/ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் கல்வி கற்று 2018ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி 171 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த எமது செல்வப் புதல்வன் நிவேதிகன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு இன்னும் பல கலைகளில் சித்தியடைந்து பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

✷ இவரைக் கற்பித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:-அப்பா, அம்மா, அக்காமார்-ஷாருஜா, கபிஷாளினி

(5926)

Best Wishes

ரூபி நகைமாடம்
பலாலி வீதி,
திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி

மரண அறிவித்தல்

LION **தம்பையா கைலாசநாதன்**

(LION, ஓய்வு பெற்ற Radio grapher)

இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் இணுவில் K.K.S வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கைலாசநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (4.10.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமேஸ்வரி கைலாசநாதன் (ஓய்வுபெற்ற அதிபர், யா/இராமநாதன் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான தம்பையா-கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகேசு-கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கைலாசர் (ஓய்வுபெற்ற RMP), இராசரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) மற்றும் மகாலட்சுமி, திருஞானசம்பந்தர் (ஓய்வுபெற்ற மருந்தாளர்) கலைவாணி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற செல்லத்துரை, சோமசேகரம், சுந்தரராசா மற்றும் விஸ்வநாதன் (ஓய்வுபெற்றமின் அத்தியட்சகர்) சோமாஸ்கந்தமூர்த்தி (GERMANY), ரேணுகா (LONDON), தாமரைவாசினி, கலாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை), நடராசா(ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் விவே கானந்தன் (LONDON), இராசபூபதி (ஓய்வுபெற்ற ஆசிரியை) றஜினி, சறோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகோதயம்,
K.K.S **வீதி, இணுவில்**

தகவல்:-
குடும்பத்தினர்

(5929)

ஊடகத்துறைச் சான்றிதழ் பயிற்சிநெறி

இலங்கை ஊடகவியல் கல்லூரியின் சான்றிதழ்

- வெகுசன ஊடகத்துறையில் பிரகாசிக்க
- வானொலி, தொலைக்காட்சியில் தொகுப்பாளராக அறிவிப்பாளராக வலம் வர
- ஊடகவியலாளராக வலம் வர
- குறும்பட இயக்குனராவதற்கு
- நவீன ஊடகத்துறையில் மிளிர்வதற்கு

வீடியோ, ஒடியோ எடிட்டிங், டிசைன் & லேஅவுட், வீடியோ, டிஜிட்டல் கமராக்களை நீங்களே கையாளலாம்.

- ஆங்கிலம், சிங்களம் கற்கலாம்
- 100% தொழில்சார் களப்பணிப் பயிற்சிகள்

விரிவுரைகள், பயிற்சிகள்:
வார. வார இறுதி நாட்களில்

விண்ணப்ப முடிவுத் திகதி
10-10-2018

அனுமதிகளுக்கு முந்துங்கள்

info@slcj.lk
jaffnamediastudies27@gmail.com

MRI SRI LANKA COLLEGE OF JOURNALISM
Media and Research Institute Jaffna

27, புகையிரத நிலைய வீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம்
தொலைபேசி: 077 488 9228

96, கிருல வீதி, கொழும்பு 05
தொலைபேசி: 071 764 0015

(C-4074)

'வைத்தியராகி சேவை செய்வதே இலட்சியம்'

பாடசாலைக் கல்வியை ஆர்வத்துடன் கற்றதால் என்னால் சாதிக்க முடிந்தது

தமிழ்மொழி மூலம் முதலாம் இடத்தைப்பெற்ற மாணவன் திகழொளிபவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக் கல்வியை மட்டும் ஆர்வத்துடன் கற்றதனால் தான் என்னால் சாதிக்க முடிந்தது என்பதுடன் எதிர்காலத்தில் வைத்தியராகி சேவை செய்வதே எனது இலட்சியம் என 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 198 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தையும் தமிழ்மொழி மூலம் முதலாம் இடத்தையும் பெற்ற யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் மனோகரன் திகழொளிபவன் தெரிவித்துள்ளார்.

மாணவன் மேலும் தெரிவிக்கையில் ,

தமிழ்மொழி மூலம் முதலாம் இடத்தினைப் பெற்றமைக்கு மகிழ்ச்சியடைகிறேன். தரம்1,2 இல் திருமதி நிர்மலாதேவி ஆசிரியையும், தரம் 3,4,5 இல் திருமதி சுபாசினி ஆசிரியையும் எனக்குக் கற்பித்தார்கள். இவர்களின் முயற்சியால் நான் சித்தியடைந்துள்ளேன்.

எனது பெற்றோர் எனக்கு உதவியாக இருந்தார்கள். வகுப்பில் படிக்கும் போது, தேசிய ரீதியில் வெற்றி பெற்றுத் தருவேன் என ஆசிரியருக்கு நான் கூறியதை ஞாபகத்தில் வைத்துப் படித்தேன்.

எந்தவொரு தனியார் நிறுவனத்துக்கும் செல்லவில்லை. ஆசிரியர் கொடுக்கும்

வேலையை வீட்டில் தினம் தினம் படித்து இந்த நிலைக்கு வந்துள்ளேன். வைத்தியராவது எனது இலட்சியம். என்னுடன் கல்வி கற்ற அனைவரையும் வாழ்த்துகின்றேன் என மாணவன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9-101)

வைத்தியராக வந்து சமூகத்திற்கு சேவை செய்வதே எனது இலட்சியம்

தேசிய ரீதியில் இரண்டாமிடம் வந்த மாணவி நதி உறுதி

(யாழ்ப்பாணம்)

எனது பாடசாலையிலே உயர் கல்வியைத் தொடர்ந்து எதிர்காலத்தில் வைத்தியராக வந்து எனது சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டும் என்பதே எனது இலட்சியம் என 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 198 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் இரண்டாமிடத்தையும் மாவட்ட ரீதியில் முதலாமிடத்தையும் பெற்று சாதனை படைத்த சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி நவாஸ்கன் நதி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது அப்பா வடக்கு மாகாணசபையில் சாரதியாகவும் அம்மா சரசாலை வடக்கு கிராம உத்தியோகத்தராகவும் கடமையாற்றி வருகின்றனர். எனது கல்விக்கு குடும்பத்தினர் மற்றும் பாடசாலை ஆசிரியர் தவயோகராசா ஆகியோர் உதவி புரிந்துள்ளனர். குறிப்பாக எனது பாடசாலை சமூகத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவர்களின் ஆதரவே 198 புள்ளிகள் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தது. தேசிய மட்டத்தில் சாதனை படைப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது.

எனக்கு எழும் சந்தேகங்களை பாடசாலை ஆசிரியரான தவயோகராசா ஆசிரியரிடம் கேட்டுத் தீர்த்துக் கொள்வேன்.

நான் எதிர்காலத்தில் வைத்தியராக வந்து எனது சமூகத்திற்குச் சேவை செய்ய ஆசைப்படுகிறேன். எனது உயர் கல்வியை சாவகச்சேரி

இந்துக் கல்லூரியில் தொடரவுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை குறித்த மாணவி சிறந்த பெறுபேற்றைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கு பெருமையைத் தேடித் தருவார் என்ற நம்பிக்கை தமக்கு இருந்ததாக பாடசாலை அதிபர் தெரிவித்தார். (இ-9-30)

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அதிகாரத்தைப் பயன்படுத்துங்கள்

ஜனாதிபதியிடம் கோரிக்கை

(ஏறாவூர்)

நீண்டகாலமாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கே உள்ளது. எனவே, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜனாதிபதி முன்வர வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்யக்கோரி மட்டக்களப்பில் நேற்று வெள்ளிக்கிழமை பாரிய கவனயீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றது.

இதன்போதே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மணிக்கூடு கோபுரத்திற்கு அருகிலிருந்து பேருந்து நிலையம் வரை பேரணியாகச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள், அதனைத் தொடர்ந்து காந்திபூங்கா முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, 'இனத்துக்காக போராடியவர்கள் குற்றவாளிகளா?', 'நல்லாட்சி அரசே அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்', 'பொதுமன்னிப்பு வழங்குவதில் காலதாமதம் ஏன்?' போன்ற வாசங்கள் அடங்கிய பதாகைகளுடன் பலரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துக் கொண்டனர்.

முற்போக்கு தமிழர் அமைப்பின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், பிரதேச சபையின் தவிசாளர்கள், பிரதேச சபை, மாநகரசபை உறுப்பினர்கள், இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பெருந்திரளானோர் கலந்துகொண்டனர். (இ-7)

மதுபானசாலையை அகற்றக்கோரி பருத்தித்துறையில் நேற்றுப் பேரணி

பருத்தித்துறை நகரில் சிவன் கோவிலுக்கு அருகாமையாக இருக்கும் மதுபான சாலையை அகற்றக்கோரி கவனயீர்ப்புப் போராட்டப் பேரணி பருத்தித்துறையில் இடம்பெற்றுள்ளது. நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.15 மணியளவில் பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து ஆரம்பமாகி பிரதேச செயலகம் வரை சென்று மகஜர் கையளிக்கப்பட்டது. இதில் 14 அமைப்புக்களின் பெயர்கள் இடப்பட்டுள்ளன. இதேவேளை பேரணிக்கு ஆதரவு தெரிவித்து பருத்தித்துறை வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடியும் ஆட்டோ உரிமையாளர்களும் பங்கேற்றிருந்தனர். இதேவேளை நூற்றுக்கணக்கான பெண்கள் உட்பட பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். அதுமட்டுமன்றி பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் தமது பாட சாலை முன்பாக பதாகைகளை ஏந்தி தமது எதிர்ப்பினையும் வெளியிட்டனர். (இ-30-60)

மரண அறிவித்தல்

மலர்வு
07
-
12
-
1959

உதிர்வு
05
-
10
-
2018

தணிகாசலம் ஜெயமலர்

வீரணாந்தோட்டம், கரணவாய் தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தணிகாசலம் ஜெயமலர் நேற்று (05-10-2018) வெள்ளிக்கிழமையன்று அமரத்துவம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - இராசமுத்து ஆகியோரின் அன்பு மகளும் மாணிக்கம்-தணிகாசலம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற சந்திரதாஸ், தேவதாஸ் (சவுதி அரேபியா) அகிலதாஸ் (மாகாண சபை உறுப்பினர் - வட மாகாணம், உரிமையாளர் நெல்லை சில்க் நெல்லியடி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஸ்ரீதேவி, கிருபா ஆகியோரின் மைத்துனியும் உஷா, அர்ஜின், அமலன், றொசானி, கீர்த்தனன், சர்மினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அஸ்மிதா, அபிநயா ஆகியோரின் அன்பு பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-10-2018) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் பூவரசம் திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-4071)

க.வீராணந்தோட்டம்,
கரணவாய்,
கரவெட்டி.

தகவல்:- சி.அகிலதாஸ்
(மாகாண சபை உறுப்பினர் - வட மாகாணம்)
தொ.பே. 077 651 1262

கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின்

அஞ்சலிகள்

எமது வித்தியாலயத்தின் ஆசிரியர்
திருமதி டெவினா டிலோஜனா சுதர்சன்
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி ஜெபமணி கிருபைராஜா

அவர்கள் கடந்த 05.09.2018ஆம் ஆண்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

நலன்புரிச் சங்கம்
கிளி/கிளிநொச்சி மத்திய
(5925) **மகா வித்தியாலயம். கிளிநொச்சி.**

பாராட்டி வாழ்த்துகின்றோம்

மகாலிங்கம் கஜன்

யா/பிளவத்தை அ.மி.த.க பாடசாலையில் கல்வி கற்று 2018ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி 165 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த செல்வன் கஜன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல சித்திகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அம்மம்மா, மாமாமார்,
அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார்.

(C-5927)

மரண அறிவித்தல்

திருமதி அன்னலட்சுமி நவரத்தினம் (காரைநகர்)

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது பயிரிக் கூடலில் வசித்தவருமான நவரத்தினம் அன்னலட்சுமி நேற்று (05.10.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகோத ரியும் காலஞ்சென்ற முருகேசு நவரத்தினத்தின் அன்பு மனைவியும் ருக்மணிதேவி, நவகிருஸ்ணராசா (முகாமையாளர் - வட இலங்கை வங்கி வட்டுக்கோட்டை), ஆகி யோரின் அன்புத் தாயாரும் ரவிச்சந்திரன் (உரிமையாளர் - ரவிச்சந்திரன் பல்பொருள் வாணிபம் - திருநெல்வேலி), ஜசிந்தா (பிரதேச செயலகம் - காரைநகர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தங்கராஜா - பராசக்தி, K.K.இராமநாதன் - பாலாம்பிகை ஆகி யோரின் சம்பந்தியும் விதுஷன், லோஜன், டனுஷன், கஜலக்ஷிகன், ஜதுர்சா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பயிரிக்கூடல்,
காரைநகர்.

(C-4072)

தகவல்:- ந.நவகிருஸ்ணராஜா
மகன் - 077 923 1610

பாராட்டி வாழ்த்துகின்றோம்

(C-4069)

திரு. வே.அன்பழகன்

05.10.2018 அன்று தேசிய மட்டத்தில் கௌரவிக்கப்பட்ட "குரு பிரதீபா பிரபா" விருதினைப் பெற்ற எமது பாடசாலையின் புகழ்பூத்த ஆசான் திரு.வே.அன்பழகன் அவர்களை மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்
யா/செட்டித்தெரு மெ.மி.த.க.பாடசாலை

துயர் பகிர்கின்றோம்

இணுவில் லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவர்

அமரர் லயன் தம்பையா கைலாசநாதன்

அவர்களின் பிரிவால் எமது கழகம் துயருறுவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவரும்
உறுப்பினர்களும்
இணுவில் லயன்ஸ்
(C-4075) **கழகம்**

தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்-2018

யாழ். மாவட்டம்

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

எம்.திகிழொளிவன்-198, ஜே.ஜெய பெதூபன்-190, டபிள்யூ.கோபி ராஜ்-189, எஸ்.விதுர்ஷன்-189, என்.சாதனா-189, எஸ். சஸ்வினி-189, ரி.வைஸ்ணவி-188, வி.பிர வீன்-188, பி.மயூரன்-188, எம்.சிவ கஜனி-186, பி.பவிசா-185, கே.ரிஷி கேசன்-184, அ.ஆதித்யா-184, வி.லஷினி-184, எஸ்.தரணியா-184, சி.ஹரிராம்-183, ரி.ஜஸ் வினி-183, என்.சங்கீர்த்தனன்-183, பி.அஹரன்-183, ஜே.அக்ச யன்- 183, கே.மிருன்திகா-182, எஸ். துஷான்- 182, ஜே.அபிசேக்-181, கே.சுப்ரவி-181, கே.கோவிலி யன்-180, கே.கோவிலியன்-180, ஆர்.பிரஸ்னா- 180, எஸ்.சிவசங் கர்-179, ரி.கரிணிகா-179, ஏ.பவித் ரன்-179, கே.யனோஜன்-179, ஆர். மதுரிகா-179, ஜே.தரணிகா-179, பி.ஜினுசன்-178, எஸ்.துவார கன்-178, ஆர். டர்சனா- 178, எஸ்.ஜாகலன்-177, எம்.தக்சணன்-177, யு. நிசாராம்- 177, ஆர்.தேனுஜா-177, ஜே.காவியன்-176, டி.சாருசா-176, எஸ்.அபிலாஸ்-175, எஸ்.சாயி லாஸ்-175, வி.விசாலி-175, ஏ.தர் மிலன்-175, எஸ்.சுபர்ணா-175, எஸ்.விகாசினி- 175, எஸ்.நிக்சிகா-175, கி.பிருத்வி-174, எஸ். திவ்யலக் சன்- 174, எஸ்.கீஸ்னா- 174, ரி.கேனு சாந்-173, எஸ்.அச்சுதன்-173, ஜீ.கஜலக்ஷன்-173, எல்.நீரஜன்-173, பி.ஹரிணி-173, என். நிஜந் திரி-173, ஆர்.திருவாகன்-172, ஜீ.சஞ்சய்-172, எம்.மதுசன்-172, ப.நிசானி-172, யு.வைஸ்ணவி-172, எஸ்.சயந்த்-171, ஆர்.மஞ்சு ஜன்-171, எஸ்.சௌமியா-171, எஸ். தருணன்-171, வை.வர்வன்ஜன்-171, என். அக்சனா-171, வி.ரூபலக் ஸ்மிதா-171, வி.தேனுகா-171, எல். கரிணி-171, கே.அஸ்னிகா-171, எஸ்.திசாயினி-171, எல்.கிரு திகா-170, எஸ். நர்த்தவி- 170, கே.ஹரீ ஸ்மி- 170, எஸ்.அத்மன்-169, எஸ்.லதுஷனா-169, என்.தருண்-169, ரி.தேனுஜன்- 169, எல்.மேனு சன்-169, ஜ.நிலாவினி-169, ஆர்.இந் துஷா-168, எஸ்.இசைவாணன்-168, ஜே.பாவனன்-168, பி.கோபி சன்-168, என்.கீதாகரன்-168, ஜே. அபிசன்- 168, ரி.அக்சயா- 168, கே.விஷ்ணுயா- 168, எம்.சயனு ஜன்-167, என்.பிரசாந்தினி-166, கே.சகீசன்- 166, எஸ்.கிருஷிகா-165, ஜெ.தருன்சிகா-165, எஸ். மகீஸ்னா- 165, எஸ். ஆரணி-165, ஆர்.பிரியதர்சன்- 165, எல். திபிசா-165, எஸ்.ரஜிராம்-164, ரி.ரிசிகன்-164, ரி.தர்சிகா- 164,

யாழ்.நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை

ரி.சாய்பிரியன்- 188, கே.கவி னன்- 184, பி.நித்தீலன்- 183, யு.தருண்- 182, எஸ்.அக்ஷரா-178, கே.சாய்ரா- 177, ஆர்.அப ரிதா-177, எஸ். பபீஷனன்-176, பி.பவிஷன்- 173, ஜே.ஹரிணி-173, ஜே.அக்ஷனா-172, வ.ம்கோபிகா-172, எஸ். ஷாருஜன்- 171, ஆர்.சாய் உமே ஷன்- 170, எஸ்.திவ்வியன்-170, ரி.நிஷிதன்- 170, ஏ.தேனமு தன்- 169, வி.அக்ஷயா-169, ரி.அபி ஷேக்- 168, எஸ். அக்ஷயா- 168, பி.அக்ஷயா- 168, கே.சாருஜா-167, பி.ஜெனுர்சயன்- 166, என். அக்ஷயன்- 165, பி.ஹரிணி- 165.

அருணோதயக் கல்லூரி, அளவெட்டி

க.கஜாகரன்-188, ம.அபிசயன்-185, கு.கஜானா-183, கா.கிருசா யினி-181, ர.குயிந்தன்-180, ச.கீர்த் திகா-180, சே.கயூரிக்கா-180, சு.ஆத்மகாரணி-180, யே.சகிதா-177, ஆ.அனுதர்சி-177, து.வினுசா-176, ஓ.கீகன்-176, அ.எழில்வத னன்-175, வி.பவித்திரன்-174, வை.யனுமி-174, சி.ஜானுசன்-173, சி.துசானி-173, சி.கோகீசன்-171, சோ.கிசானு-171, சு.சங்கவி-171, தி.மபின்சன்-170, இ.சுபதா சன்-169, கோ.கருண்யா-167, மு.சஷ்மிதா-167, ம.கேமதன்-166, ச.தமிழின்பன்-166, ட.வருஷா-166, வ.சரண்-165.

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை

ந.நதி-198, சு.அஸ்வினியா-190, ஸ்ரீ.தஸ்வின்-186, பா.யாப வன்-186, கா.கதுரிகா-185, ர.ஜெய ரத்ன-184, ம.சுயனிகா -182, ர.லக்சன் -178, சு.கதிர்வானன்-178, அ.அக்சயா -178, ந.கார்த் திகன் -176, த.மகிசன்-176, சி. சிவபிரிந்தன்-174, சி.சுவேனிகா -173, செ.நவாளன்-171, செ.தீபிகா-171, சி.யதுர்சனன்-170, நி. ஹரிட ர்சன்-170, தி. அபிஷன்-170, ஸ்ரீ.கம்சிகா-169, பா.சாருஜன்-168, வி.பிருந்துபிகா-168, ம.துபா னிகா-168, கி. கிருஷன்-168, வி.விஜ யகாந்த்-168, ர.மதுசனா-165, க.அஜி சன்-165, ச.கீர்த்தனி -164.

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் 121 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி 104 மாணவர் கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற் றுக்கொண்டுள்ளனர். 28 மாண வர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

உடுவில் மகளிர் கல்லூரி

டி.மேரி சௌமியா- 190, எஸ். சிவவராகி-189, ரி.சப்தமன்-186, ரி.சுவர்மன்-184, என்.நதுர்சன்-183, ஜே.கிருஸ்ரிகா- 182, ஜே. நோவா நகுல்- 181, எஸ்.யக்சனா-181, எஸ்.சுயாதனா- 181, ஜே.சஞ் ஜீத்-179, ஜே.கீர்திசா- 178, எஸ்.அபி சரன்-178, கே.கோலமைலோன்-178, கே.பிறக்மன்- 177, ஜி.மாதுரி-177, பிதீதாரம்- 177, எஸ்.சேயோன்-176, பிஜஸ்மினி- 176, எஸ்.ரேசன்-174, ஈ.எட்வின் அனோரிசான்-174, எஸ்.சகனுஜா- 174, எஸ். அபிராம்- 174, டி.அபிசாந்-172, என். இசானி- 172, எஸ்.கேசிகன்-172, பி.குருசரணா-171, என். புவிசாளினி- 171, எஸ்.ஆரபி-170, எம். பஸ்மியா- 169, பி.கார்த்திகே யன்- 168, எஸ்.விசானுகா-168, ரி.அபிநயன்- 168, கே.ஆரவி-168, எஸ். ரவிவர்மன்- 168, ஏ.பரன் குன்றன்- 167, ஜி. அக்சயா- 167, ஏ.ஜனார்த்தனி- 166, பி.ரக்சிகா-165, ஆர்.பிரணீஸ்- 165, ரி.யாதவி-164, எஸ்.பரணிகா- 164, ஆர்.அஸ் வினி- 164, என். அஸ்விகா- 164.

யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

வா.லக்சினி- 193, ச.லிவிந்-193, க.நித்தீஸ் - 192, ஜீ.நிருஷா-192, சு.அக்ஷயன்- 192, சி.மேனுசா-191, ர.அஸ்விதா- 189, ஜெ.கஜானி-189, த.யாகுலன்- 189, அ.அதிச யன்- 188, ஏ.ஷெறோன்கபிரியோ-188, ப.அபினா- 188, செ.ஸ்ரீசுவஸ் திகன்- 188, மு.மேருஷன்- 187, கி.விசால்- 187, கி.லக்ஷிகா- 187, றா.ஆதீஸ்- 186, ல.அத்மிகா-186, ஜெதருணிக்கா- 186, ஜெயதுஷா-185, சு.லதுசன்- 185, கா.பவிசான்-184, ஜீ.கவிநயா- 184, றெ.மஷ் மிதா- 184, சு.தரியம்பகன்- 183, சு.ஹரீஸ்- 183, ஜெ.மெல்வின்றெ கான்- 183, ஹ.பவதீசன்- 182, ஈ.அபிநயா- 182, கி.லிவ்யோன் ஜெரூசன்- 181, தி.பரணிகா- 181, சு.தரன்ஷியா- 181, ச.சயனிகா-180, மோ.அக்ஷனா- 180, விவ்ஷா-180, ச.சஹானா- 180, அ.அஸ் வினி- 180, மு.சாறுக்ஷன்- 180, ரா.குந்தவி- 179, நி.மேரி அஷானா-179, பி.ஆர்த்திகன்- 179, கௌமதனா-179, அ.தக்ஷியா- 179, ம.ஜதுர்சி-179, ற.சுருதிகா- 178, ச.நிதுஷன்-178, மோ.தர்ணிகா- 178, ச.மதீச ணன்-178, அ.அபிஷா-178, க.கஜானி-177, செ.அபிராம்- 177, சோ.பவி தரன்-177, நா.அபிநயா-177, த.திவி யன்- 176, ம.கேஷியன்- 176, சி.அபினாஷ்- 176, கு.தரணிஷன்-176, லோ.கவீனா- 175, கு.துவர்ஷன் -175, கி.லித்திகா- 175, க.டிசான்-174, அ.தீபீசன்- 174, ரை.துஷிஸ்-173, க.தேனகா- 173, ச.தேனுசா ந்த்-173, பா.அஸ்வினா-173, கி.ஜெயந் தனா- 172, நா.அங்கவி- 172, ஜோ.ஜெயலக்சன்- 171, பிரவைனி-171, கி.நிவேதிகன்- 171, ம.சகானா-171, ஜெ.ஸ்வாதி- 171, இ.மெர்வின் ஜோதினி- 171, கே.பிருந்தாபன்-171, சு.அர்ஜனன்- 170, யூ.யூலியஸ் ஜென்சன்- 170, ஸ.விதுஷகான்-170, க.அகிலாஸ்- 170, ச.ஹரித் ரன்- 170, பி.ஆரபி- 170, வெ.விஜீ ஸ்மன்- 170, பி.ஜெரன்சிக்கா-169, ஸ்.கஜானன்- 169, ஸ்ரீ.சந் தோஷ்- 169, ம.சௌனா அங்கலின்-168, ம.தரணிகா- 168, ஜெ.கிரு ஷிகா- 168, றொ.றெனீபா- 168, ம.ரிபாங்கன்னி- 168, ஜெ.கிரு ஷிகா- 168, தொ.ஜெனிபர்- 168, ஜெ.அனந்தவைகரி- 168, த.உக் ஷியா- 167, தே.காரூரன்- 167, வ.கபிஷாந்- 167, ஜெ. நிஷாஸ்-167, சி.ஜனனி- 167, ஜ.கானவி-167, எ.தர்சனன்- 167, த.திவானி-167, கே.அஸ்விகா- 166, ம.பிர காஷா- 166, பி.மயூரி- 166, ந.திவ்யரதன்-166, கி.அபிஸ்ணவி-166, றெ.ஜெக்ஸ்ரிபோன்- 165, அ.ஜறிணி- 165, அ.பிரவின் - 165, தி.நந்திகா- 164, எ.மேரிஎ வோலின்- 164, பா.ஜஸ்மிதன்-164,

யாழ். மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை

சி.சாருகா-196, சு.கனிவிழி-195, வி.மிதுனாளன்-192, மு. ஜஸ்வர்யா-185, சுகீர்த்தனா-180, வ.ரிசபன்-179, ம.டீனா-176, ஜெபிரணவன்-175, சகிரி சாந்-175, கிருஜிதா- 171, பி.விதுஷா-170, மு.டிலக்சன்-170, ச.கஜானா-169, சி.சாரிகா-169, பா.ததுவர்த்தனி-169, ஈ.தாசன்-168, மோஜஸ்மிதா-165, ஜெராகவி-164. (இ-7-9-30-60-105)

10 ஆம் ஆண்டு நினைவதனில்

மண் மகிழ

1953

02

05

கண் நெகிழ

2008

09

25

அமரர் சண்முகம் பத்மநாதன்

(திதி:- துவாதசி)

ஆண்டுகள் பத்து அழுது விட்டோம் எம் உயிரே
ஆறாத் துயர் சுமந்து அகத்தினில் உமைப் பிரிந்து ஈரவிழி
நீர் சுமந்து மீண்டும் உங்கள் முகம் பார்ப்போமா இப்புவியில்
மீளாத்துயரில் நெடிதுறங்கி விட்டவரே
ஆறாத் துயரமதில் மனைவி மக்கள் நாம்
இங்கு பரிதவித்து நிற்கின்றோம்.

(கி - 4067)

எழுதுமட்டுவாழ் தெற்கு,
சிவன் கோயிலடி.

குடும்பத்தினர்.

இராசி பலன்

06.10.2018
புரட்டாதி 20, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 06.03 மணிக்கு
துவாதசி பிற்பகல் 3.12 மணிவரை
மகம் பிற்பகல் 4.34 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
இலங்கை ஆசிரியர் தினம்,
சனிப் பிரதோச விரதம்

வளவன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
திருவோணம், அவிட்டம்

ராகு
செவ், கேது
சனி
சுக், புத
சூரி

மீனம்

உறவு-பகை பாராமல் ஒற்று மையாக இருக்கும் நாள், உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள் ளும் வாய்ப்புண்டு.

மேடம்

பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தொழிலை விருத்தி செய் யும் எண்ணம் உருவாகும்.

இடபம்

காலை நேரத்திலேயே கல கலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், விருந்தினர் களின் வருகை இடம்பெற லாம்.

மிதுனம்

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், இழுபறியாக இருந்த காரி யங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

கும்பம்

மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சந்தித்தவர்க ளால் சந்தோசம் கிடைக்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

மகரம்

சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

தனுசு

குடும்பத்தில் ஏற்பட்ட கரு த்து வேறுபாடுகள் அகலும், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், சுணங்கிய காரியங்க ளில் முன்னேற்றம் ஏற்பட லாம்.

விருச்சிகம்

பயணங்களால் பலனுண்டு, மதிப்பும், மரியாதையும் உய ரும் நாள், தொட்ட காரி யங்களில் வெற்றி பெறு வீர்கள், பெரிய மனிதர்க ளின் சந்திப்பு இடம்பெறலாம்.

துலாம்

விரதம், வழிபாடுகளில் நம் பிக்கை கூடும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங் கள் இடம்பெறலாம்.

கடகம்

குடும்பத்தினர் பெருமைப் படும் வகையில் சில நிகழ் வுகள் நடக்கலாம், நன்மை கள் நடைபெறும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

சிம்மம்

நண்பர்கள் ஒளிவு மறை வின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், குடும் பச்சுமை கூடும் நாள்.

கன்னி

அலைச்சல்கள் காணப்பட டாலும் ஆதாயமும் பெறுவீர் கள், வழிபாட்டால் மகத்து வம் காண வேண்டிய நாள், ரோக பயமுண்டு, சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

மாகாண சபை கட்டமைப்பு அழிந்து போய்விடும் நிலை

வடக்கு சபையில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

இனிவரும் காலங்களில் மாகாண சபை என்ற கட்டமைப்பு அழிந்து போய் விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது என தெரிவித்த வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், மாகாண சபை தேர்தல் விரைவில் நடைபெற வேண்டும் என தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 133 ஆவது அமர்வு நேற்று முன்தினம் கைதடியில் அமைந்துள்ள மாகாணசபை சபா மண்டபத்தில் இடம் பெற்றது. அதன்போது உறுப்பினர் தர்மபால, மாகாண சபை காலம் முடிவடையும் நிலையில் அடுத்து மாகாண சபை தேர்தல் வரும் வரை மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக பேசுவதற்கு பிரதிநிதிகளுக்கு சந்தர்ப்பம் இல்லை. எனவே மாகாண சபை தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என அனைத்து உறுப்பினர்களும் வலியுறுத்த வேண்டும் என கருத்து தெரிவித்தார்.

இதன்போது பதிலளித்த அவைத்தலைவர், கிழக்கு மாகாண சபை ஆட்சிக் காலம் நிறைவடைந்து ஒரு வருடம் ஆகிவிட்டது. எமது ஆட்சிக்காலம் முடிந்ததும் இவ்வாறு பல வருடங்கள் என்மை இழுத்துவிடுமாகாண சபை என்ற ஒரு கட்டமைப்பு இல்லாமல் போய்விடும் என்ற நிலைப்பாடு ஏற்படுத்தப்படுமோ? என அச்சம் உள்ளது. தேர்தல் விரைவில் நடப்பது அவசியம் அது நடக்க வேண்டும் என தெரிவித்தார்.

அப்போது கருத்து தெரிவித்த உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், எமக்கு வழங்கப்பட்ட அதிகாரப்பகிர்வின் லட்சணம் தான் இது. அடுத்த தேர்தல் வரும் வரை அவைத்தலைவர் பேரவை நடவடிக்கைகளை பார்ப்பதற்கு மேலாக வேறு எதுவும் எமக்கு இல்லை.

அடுத்த அவை வரும் வரை ஆளுநர் ஜனாதிபதியின் பிரதிநிதியாக இருந்து செயற்படுவார். அவர் சரியாக இல்லை என்றால் பிரச்சினை அதிகரிக்கும். எமது ஆளுநர் இப்போதே இராணுவத்தின் இரத்தம் எமது இரத்தம் என தெரிவிக்கிறார். அது தொடர்பில் அமைதியாக ஆய்வு செய்ய வேண்டும்.

இந்த ஆயுட்காலம் முடிவதற்கு முன்னர் எமக்கான பிரச்சினையை தீர்க்கவில்லை என்றால் இனி ஒரு சிங்கள தலைமையினை தமிழ் மக்கள் நம்ப மாட்டார்கள். எமது தலைவிதியை நோக்கி நாமே செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த உறுப்பினர் த.குருகுலராஜா, இது ஒரு சூழ்ச்சி. சபை ஆட்சி காலம் முடிவடைந்ததும் அடுத்த தேர்தல் நடத்தாமல் அரசு தனது கட்சி பலத்தை ஓங்குவதற்காக செயற்படவுள்ளது.

அண்மையில் ஆளுநர் வெளிநாட்டுக்கு செல்லவுள்ளதாகவும் அங்குள்ள எமது தமிழ் உறவுகள் ஆளுநர் பல விடயங்களை செய்யவுள்ளார். நீங்களும் வாருங்கள் என கேட்கிறார்கள். நிலைமை எவ்வாறு சென்றுள்ளது.

இதில்நம்கவனமாக செயற்பட வேண்டும். பல விடயங்களில் பகிரங்கப்படுத்த தவறி விட்டோம். இது எமக்கு ஒரு எச்சரிக்கை எனத் தெரிவித்தார். அதற்கு பதிலளித்த அவைத் தலைவர் நாம் விழித்து இருக்கிறோம் எனத் தெரிவித்தார். (இ-9)

அனர்த்தங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்க யாழ்ப்பாணம் வணிகர் கழகம் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

அடுத்த சில தினங்களுக்கு கடின மழையுடன் கூடிய மின்னல் தாக்கம் ஏற்படும் அறிகுறிகள் வடகிழக்கு உட்பட நாட்டின் சில பகுதிகளில் எதிர்பார்க்கப்படுவதாக வளி மண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளதோடு அனர்த்தங்களிலிருந்து பொது மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பின்வரும் அறிவுரைகளை பின்பற்றுமாறு அறியத்தந்துள்ளார்கள்.

இவ் அறிவுரைகளை பின்பற்றுவதனால் அனர்த்தத்தில் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

01.மழை, மின்னல் ஏற்படும் நேரங்களில் வீடுகளைப் பூட்டி வைத்தல்.

02.வாகனங்களை மரங்களுக்கு கீழ் நிறுத்துவதை தவிர்த்தல்.

03.பரந்தவெளியில் நடமாடுதல், வயல்வெளிகளில் நடமாடுதல், குளங்கள் அருகில் நிற்பவை போன்றவற்றை தவிர்த்தல்.

04.மின்னல், இடி ஏற்படும் வேளைகளில் தொலைபேசி இணைப்புக்களை துண்டித்தல், தொலைபேசி பாவனையைத் தவிர்த்தல், மின்சார இணைப்புக்களைத் துண்டித்தல்.

05.உழவு இயந்திரம், கூடாரம் அமைக்கப்படாத வாகனம், வள்ளம் போன்ற வற்றில் பயணம் செய்தலை முழுந்தவரை தவிர்த்தல்.

06.பரந்த பெரிய மரத்தின் கீழே நிற்பதனையும் உயர் அழுத்த மின்சார வயர்களுக்கு கீழே நிற்பதனையும் தவிர்த்தல்.

07.ஏதாவது அனர்த்தம் நேர்ந்தால் அவசரமாக அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தின் தொலைபேசி இலக்கமான 117 உடன் தொடர்பு கொள்ளவும் என யாழ்.வணிகர் கழகச் செயலாளர் சி.கேசவன் அறிவித்துள்ளார். (இ)

அடிப்படை வசதிகளின்றி இயங்கும் சந்தை

வடமராட்சி தெற்கு-மேற்குப் பிரதேச சபைக்குரிய சந்தைப் பகுதியில் மழை நீர் தேங்கியிருப்பதனாலும் அடிப்படை சுகாதார வசதிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாததாலும் சந்தைக்கு வரும் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் சந்தைக்காக புதிதாக அமைக்கப்பட்ட கட்டடம் இதுவரை பாவனைக்கு விடப்படவில்லை என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (இ-60)

வடக்கில் அரசியல் தலையீடுகள் இன்றி ஆளணி வெற்றிடங்களை நிரப்ப வேண்டும்

மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள மத்திய மற்றும் மாகாண அரச திணைக்களங்களில் காணப்படும் ஆளணி வெற்றிடங்களுக்கு அரசியல் தலையீடுகளற்ற வகையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தகுதியானவர்களையே உள்வாங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 133 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலக சபா மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் உறுப்பினர் ஆர்.ஜெயசேகரம் மேற்குறித்த விடயம் தொடர்பில் பிரேரணை ஒன்றை முன்மொழிந்தார்.

இதில் வட மாகாணத்தில் இயங்கும் மத்திய மற்றும் மாகாண அரச திணைக்களங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு ஆயிரக் கணக்கில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இதற்கு வட மாகாணத்தைச் சேர்ந்த தமிழில் கடமையாற்றக்கூடிய தகுதியானவர்களை நியமனம் செய்ய மத்திய அரசாங்கம் வெகு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் இலங்கையின் அரச சேவையில் தற்போதைய நிலையில் தமிழ் மக்களுடைய பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறைந்துள்ளது.

ஆகையால் எதிர்காலத்தில் அரச சேவையில் தமிழ் மக்களுக்குரிய பங்கினை உறுதி செய்யுமாறும் அரசியல் தலையீடுகளற்ற வகையில் தகுதியானவர்களுக்கு நியமனம் வழங்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேரினார். இப் பிரேரணை சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (இ-9)

வடமராட்சிக்கிழக்கு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபை பேருந்து நேற்று முன்தினம் காலை இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக மருதங்கேணி பாலத்திற்கும் மாசார் கல்லடி வைரவர் கோயிலுக்குமிடையில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. இருப்பினும் சாரதியின் முயற்சியால் பாரிய விபத்திலிருந்து பேருந்து பாதுகாக்கப்பட்டது. (படம்:-பொற்பதி செய்தியாளர்)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்தும் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் பண்டத்தரிப்பில் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. (படங்கள்:-கே.விஜயகாந்தன்)

உழவியந்திரம்-மோ.சைக்கிள் விபத்தில் இளைஞன் காயம்

(சாவகச்சேரி)

கடந்தவெள்ளிழமைமாலை ஏ-32 நாவற்குழி வீதி ஊடாக மோட்டார் சைக்கிளில் பூநகரி நோக்கிச் சென்ற இளைஞன் உழவியந்திரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளார்.

மோட்டார் சைக்கிள் உழவியந்திரத்துடன் பின்புறமாக மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கறுக்காய்த் தீவு பூநகரியைச் சேர்ந்த ம.மயூரதன் (வயது-24) என்ற இளைஞனே காலில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (இ-30)

தொழிற்றுறையை தெரிவு செய்ய கருத்தமர்வும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

உயர்கல்விக்கற்கும் மாணவர்கள் தமக்குப் பொருத்தமான துறையைத் தேர்ந்தெடுத்து சிறந்த தொழிற்றுறையைத் தெரிவு செய்வதற்கான கருத்தமர்வும் கலந்துரையாடலும் நாளை 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம்இல200,சிவன்பண்ணை வீதியில் அமைந்துள்ள IIS CITY CAMPUS இல் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கருத்துரை வழங்குவார்.

ஆர்வமுடையவர்கள் பங்குபற்றி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு 071 777 5666, 077 757 0038 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளவும். (இ)

சரஸ்வதி சனசமூக நிலைய 62வது ஆண்டுவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

சரஸ்வதிசனசமூகநிலைய 62ஆவது ஆண்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு ஞானவைரவர் விளையாட்டுமைதானத்தில் தலைவர் கு.ஜெகநாதன் தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்வார். (இ-7)

குமரப்பா, புலேந்திரன் நினைவுத்தூபி அமைக்கும் இடத்தில் பெரும் குழப்பம்

துரத்திச் சென்று நீதிமன்ற உத்தரவை வாசித்த பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை தீரு வில் பகுதியில் குமரப்பா, புலேந்திரனின் நினைவுத் தூபி அமைப்பதற்கான அடி க்கல் நாட்டுவதற்கு நேற்றுக் காலை ஏற்பாடுகள் மேற் கொள் ளப் பட் டிருந் தன. இதனை எதிர்த்துப் போரா ட்டங்கள் முன்னெடுக்கப்ப ட்ட நிலையில் அப் பகுதியில் பெரும் குழப்ப நிலை ஏற் பட்டிருந்தது.

இதன் போது புலிகளு க்குத் தூபி அமைக்கப்ப டுவதாக நீதிமன்றின் கவ னத்திற்கு இந்த விடயத்தை பொலிஸாரும் கொண்டு சென்றனர். இதற்கமைய இந் நிகழ்வை நிறுத்தி நீதிமன்றுக்கு வருமாறு அழைப்புக் கட்டளை விடு க்கப்பட்டிருந்தது. இதற்க மைய அடிக்கல் நாட்ட முடி யாது என்று பொலிஸார் கூறி யிருந்தனர்.

இருந்த போதிலும் நிக ழ்வு ஏற்பாட்டாளர்கள் அத னைப் பெறவில்லை. இத னையடுத்து நீதிமன்ற அறி வித்தலை பொலிஸார் வாசி த்துக் காட்டினர். அதன் போது மாகாண சபை உறு ப்பினர் எம்.கே. சிவாஜிலிங் கம் மற்றும் தவிசாளர் ஆகி யோர் காதைப் பொத்திக் கொண்டு அந்த இடத்தை

விட்டுச் சென்றனர்.

அப்போது பொலிஸார் துரத்திச்சென்று நீதிமன்ற அறிவிப்பை வாசித்துக் காட் டினர்.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தள பதிகளான குமரப்பா,புலே ந்திரனின் நினைவுத் தூபியை அமைப்பதற்கு பொலிஸாரால் தடை விதி க்கப்பட்டுள்ளது. (இ-9-60)

கையில் அதிகாரம் இருந்தும் பிரதமர் ரணில் என்ன செய்தார்

அமைச்சர் சமரசிங்க கேள்வி

(கொழும்பு)

தேசிய பொருளாதார சபையின் மூல மாக என்ன செய்கின்றனர் என ஜக்கிய தேசி யக் கட்சி கேள்வி எழுப்புகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளில் பொருளாதார அதிகா ரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கையில் இருந்தும் அவர் என்ன செய்தார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் மகிந்த சமரசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

தேசிய பொருளாதார சபையின் மூல மாக நெருக்கடிகளை சமாளிக்க ஜனாதிபதி முயற்சிக்கின்றார் எனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரி விக்கும் போதே அவர் இதனைத் தெரி வித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நிகழ்கால பொருளாதார நெருக்கடிகள் குறித்து ஜனாதிபதி - பிரதமர் - நிதி அமைச்சர், மத்திய வங்கி ஆளுநர் மற்றும் அதிகாரிகள், அமைச்சர்கள் கூடி கடந்த வாரம் கலந்துரையாடியிருந்தோம்.

தற்போது ரூபாவின் விலை வீழ்ச்சி கண்டுள்ள நிலை யில் அதனை எவ் வாறு கையாள்வது. பொருளாதார நெரு க்கடியில் இருந்து எவ்வாறு மீள்வது என்பது குறித்து ஆரா யப்பட்டது. குறிப்பாக அமெரிக்க அரசி யல் திட்டத்தின் தாக்கமே இலங்கை க்கும் பாதிப்பை ஏற் படுத்தியுள்ளது.

அமெரிக்க அர சாங்கம் வட்டி வீத த்தை அதிகரித்து ள்ள நிலையில் இல ங்கையில் முதலீடு களை செய்யவி ருந்த அமெரிக்க நிறுவனங்கள் பல தமது முடிவினை கைவிட்டு மீண்டும் அமெரிக்காவிற்கே சென்றுவிட்டனர். இது இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

ஆசிரியர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(பொற்பதி)

பொற்பதி மக்க ளும் புலம்பெயர்ந்த உறவுகளும் இணை ந்து நடத்தும் ஆசிரி யர் தினமும் பரிசளி ப்பு விழாவும் இன்று சனிக்கிழமை யாழ். குடத்தனை கரை யூர் றோமன் கத் தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை கலையரங்கில் இடம் பெறும். (இ-64)

வீடு விற்பனைக்கு

மன்னார் வீதி (A32) நாவற்குழியில் புகை யிரத நிலையம், மாகாண சபை அலுவலகம் வைத்தியசாலைகள், கடைகள் ஆகியவை அமைந்துள்ள A9 வீதிக்கு அருகே வருமானத் துடன் உடனடியாக வீடு வாடகைக்கு உண்டு. (உத்தியோகத்தர்கள்) விரும்பத்தக்கது.

T.P: 021 205 0955, 076 228 3482 (5888)

பெயர் மாற்றம்

நாவலடி அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தவராசா ஆகிய எனது பெயர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் தவறுதலாகப் பதியப்பட்டுள்ளது.

எனவே இன்றுமுதல் கந்தையா தவராசா எனும் பெயரையே என் சார்ந்த சகல ஆவணங்க ளிலும் பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
கந்தையா தவராசா (5923)

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை	இவர்களுக்கு மணமகன் தேவை
பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: மகம் கி.பா: செவ் 7 இல் உயரம்: 5'11" தகைமை/தொழில்:MBBS தொ.இ: B/8936	பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: பரணி கி.பா: செவ் 12 இல் உயரம்: 5'3" தகைமை/தொழில்: பட்டதாரி அவுஸ்ரேலியா எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும் தொ.இ: G/8960
பிறப்பு: 1979 இந்து நட்சத்திரம்: மூலம் கி.பா: செவ் 8 இல் உயரம்: 5'5" தகைமை/தொழில்:O/L/சுவீடன் எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும் தொ.இ: B/8938	பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: உத்தராடம் கி.பா: 31 உயரம்: 5'3" தகைமை/தொழில்:ACCA/ கணக்காளர் தொ.இ: G/8964
பிறப்பு: 1977 இந்து நட்சத்திரம்: பூசம் உயரம்: 5'3" தகைமை/தொழில்: பட்டதாரி/ சுவிஸ் PR தொ.இ: B/8939	பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: சதயம் கி.பா: 17 செவ் 8 இல் உயரம்: 5'4" தகைமை/தொழில்:BA/ஆசிரியர் தொ.இ: G/8970
பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: விசாகம் கி.பா: செவ் 2 இல் உயரம்: 5'6" தகைமை/தொழில்:BBA/வியாபாரம் தொ.இ: B/8940	பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: ரோகினி கி.பா: 41 உயரம்: 5'4" தகைமை/தொழில்:BSc, SLEAS/ அரசதொழில் தொ.இ: G/7651

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

திருத்தம்
பெறுகை அறிவித்தல்
பருத்தித்துறை நகர சபை

2018.10.05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலின் பந்தி 7 இல் "பெறுகைப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2018.10.19 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணியுடன் நிறுத்தப்படுகின்றது என்ற விடயம் 2018.10.22 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள் ளப்பட்டு உடன் திறக்கப்படும்" என திருத்தம் செய்யப்படுகின்றது. (5875)

தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக் குழு,
பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை. 06.10.2018

ஆசிரியர் தினம்-2018

திரு.
செ.சந்திரராஜா

ஆசிரியராய், அதிபராய், கல்விப் பணிப்பாளராய் உயர்ந்து நிற்கும் வலிகாமம் வலய கல்விப் பணிபாளர் திரு.செ.சந்திரராஜா அவர்களை வாழ்த்துகின்றோம்.

தடைகளைத் தகர்த்தெறிந்த சாதனையாளன் எங்கள் சந்திரராஜா என்னும் தகைமையே வாழி! வாழி!

சந்திரராஜா என்னும் பல்துறைப் புலமையாளன்
எந்திரமாகவே தான் வலயத்திற்குழைத்து நிற்றோன்
மந்திரச் சொற்கள் போலே உதிர்த்திடும் வார்த்தை கண்டோம்
வந்தனம் கூறி என்றும் உங்களை வாழ்த்துகின்றோம்.

இருபதோடைந்து ஆண்டு கல்வி நிர்வாகம் செய்து
பெருமையால் எங்கள வலயம் உயரவே உழைத்தீர் என்றும்
தருவினைப் போலுயர்ந்து சட்டமும் கற்றுத் தேர்ந்த
அருமை சேர் உரவோர் நீங்கள் என்றுமே வாழி வாழி.

தடைகளைத் தகர்த் தெறிந்த சாதனையாளன் என்றும்
படையதன் பலம் போல் எங்கள் பள்ளிக்காய்த் துணைபுரிந்த
தகையுறும் பண்பே நீங்கள் இன்னும் பல்லாண்டு காலம்
வகையுறும் வண்ணம் வாழ இன்று நாம் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு, யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, சுன்னாகம். (5875)

திறன்களை வளர்த்துக்கொள்வதன் மூலம் வெற்றி இலக்கை அடைய முடியும்

முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்ற மாணவி துஷ்சாதனா தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

ஆசிரியரின் அறிவுரையைக் கேட்டு விடாமுயற்சியுடன் கற்றலில் ஈடுபட்டமையினால் இந்த நிலையை அடைந்தேன். தந்தையைப் பிரிந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் எனக்கு அதிபரின் ஊக்கமும் வகுப்பாசிரியரின் அறிவுரையும் அயராத உழைப்புமே நான் வெற்றி கொள்ள வித்திட்டது என தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 195 புள்ளிகளைப் பெற்று முல்லைத்தீவு மாவட்ட ரீதியில் முதலிடத்தைப்பெற்ற மு/நெடுங்கேணி மாமடு, பழம்பாசி, அ.த.க. பாடசாலை மாணவி துஷ்சாதனா தனது வெற்றி குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் இது தொடர்பில் விபரிக்கையில்,

இறைவனுக்கு முதல் கண் நான் நன்றி செலுத்துகின்றேன். பாடசாலையில் கற்றவற்றை மீட்டுப் பார்ப்பதுடன் மீண்டும் பயிற்சிகள் செய்வதன் மூலமாகவும் திறன்களை வளர்த்துக் கொள்வதன் மூலம் வெற்றி இலக்கை அடையமுடியும் என்றும் கூறினார். (2-281)

தன்னம்பிக்கை, விடாமுயற்சி வெற்றியைப் பெற்றுத்தரும்

கிளிநொச்சி மாவட்டத்தில் 196 புள்ளிகளைப்பெற்று முதலாமிடத்தைப் பெற்ற மாணவன் தேனுசன்

(கிளிநொச்சி)

எதிர்காலத்தில் ஒரு பொறியியலாளராக வந்து சேவையாற்றுவதேனதுகுறிக்கோள் என தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 196 புள்ளிகளைப் பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன் கனகலிங்கம் தேனுசன் தெரிவித்துள்ளார்.

தேனுசன் தனது வெற்றி குறித்து விபரிக்கையில்,

தனியார் வகுப்புக்களில் பங்கெடுக்காது பாடசாலை கல்வியை மட்டுமே நம்பியிருந்து அதிபர், ஆசிரியர், பெற்றோரின் அயராத அர்ப்பணிப் பிலேயே எனது வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

நான் படித்த பாடங்களைத் திரும்பத்திரும்ப மீட் டு பயிற்சி புத்தகங்களை எனது சிறந்த நண்பனாகத் தெரிவு செய்து படித்தேன். இதே ஊக்கத்துடன் பயின்று எதிர்காலத்தில் ஒரு பொறியியலாளராக வருவேன்.

தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் வெற்றியைப் பெற்றுத் தரும் என்று கூறினார். (2-271-312-315)

மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமைப் பேரவை ஐ.நா.பிரதிநிதிகளுக்கிடையில் சந்திப்பு

(பனிக்கன்குளம்)

மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமைப் பேரவை உறுப்பினர்களுக்கும் - ஐ.நாவின் இலங்கைக்கான சிரேஷ்ட மனித உரிமை ஆலோசகருக்கிடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு நேற்று காலை 9.45 மணிக்கு முல்லைத்தீவில் மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமைப் பேரவையினருக்கும் ஐ.நாவின் இலங்கைக்கான சிரேஷ்ட மனித உரிமை ஆலோசகர் **Juan Fernandez jardon** மற்றும் ஐ.நாவின் நிலை மாறு கால நீதிக்கான ஆலோசகர் **Estelle askew Ren aut** க்கும் இடையில் 1 1/2 மணித்தியாலங்கள் நடைபெற்றுள்ளது.

இதில் மகாவலி தொடர்பாகவும், தொல்பொருள் திணைக்களம், வனவள திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் போன்ற திணைக்களங்களின், அதிகார சபைகளின் நில அபகரிப்பு தொடர்பாக விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து அவர்கள் இது தொடர்பாக அரசிற்கு அழுத்தம் கொடுப்பதாக உறுதி அளித்ததாக தெரிவிக்கப்படுகிறது. (2-281)

வைத்தியராகி மக்களுக்கு சேவை செய்வதே விருப்பம்

கிளிநொச்சி மாவட்டத்தில் 195 புள்ளிகளைப்பெற்று இரண்டாமிடத்தைப் பெற்ற மாணவன் கதிர்நிலவன்

(கிளிநொச்சி)

எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக வந்து ஏழைகளுக்கு இலவசமாக வைத்திய சேவையை வழங்குவதே எனது விருப்பம் என தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 195 புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய மாணவன் கேதீஸ்வரன் கதிர் நிலவன் தெரிவித்துள்ளார். கதிர் நிலவன் தனது வெற்றி குறித்து விபரிக்கையில்,

இந்தப் பரீட்சை ஒரு சாதாரணமான பரீட்சைதான் இதில் சித்தி அடைந்து விட்டோம் என்பதற்காக ஏனைய பரீட்சைகளில் கவனம் செலுத்தாமல் இருக்க முடியாது.

இதேவேளை சித்தியடையத் தவறியவர்களும் அடுத்த பரீட்சையில் கவனம் செலுத்த வேண்டும். நூற்றுக்கு மேற்பட்ட வினாத்தாள் பயிற்சிகளைச் செய்ய வேண்டும்.

இதேவேளை எனது வெற்றிக்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் கூடிய கவனம் செலுத்தியிருந்தனர். அனைவருக்கும் நன்றியைக் கூறுகின்றேன் என தெரிவித்தார். (2-271)

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்-2018

முல்லைத்தீவு

மு/தேராவில் தமிழ் வித்தியாலயம்

சி.சுவர்ணன்-182, தே.ரிசானா-169, தீ.நிசாந்-163.

மு/சிவநகர் தமிழ் வித்தியாலயம்

றோ.டனோஜன்-163

மு/நெத்தலியாறு தமிழ் வித்தியாலயம்

சி.சாரூஜன்-180, த.தர்சன்-186, சி.இசைவிழி-165, ர.மாறன்-178.

மு/வள்ளிபுனம் மகா வித்தியாலயம்

ம.யாழினியன்-174, ச.சாலினி-174, சா.தமிழினியன்-163, கோ.பிரகலாதன்-167, ர.திவ்யா-171.

மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை

ஞா.கௌசிகா-191, டி.டினோஜன்-190, பா.காபிரியேல்-190, கி.அருண்-189, ந.தர்சனா-187, ச.சானுகா-186, கை.சாருதி-186, ஜெ.மிதுரன்-186, க.அபிசேகன்-185, பூ.விதுசாளினி-185, க.தனஞ்சன்-184, செ.கதிரவன்-184, வி.துவாரகன்-184, ஜீ.இசைநிலா-182, ப.தனஞ்சனா-182, தி.நங்கை-181, த.தனுசியன்-181, ப.சாகித்தியா-180, யோ.கயல்விழி-179, ச.சோலையா-179, செ.தளிர்- 178, கி.மிதுனன்-175, ச.கானதி-175, சி.ஜோய்சன்-172, செ.கனிவிழி-171, சி.யாழினி-168, ஜெ.குணாளினி-167, த.தர்சாந்-167, சி.சிறீபிரியா-166, ஜெ.கீர்த்திகன்-165, ம.மகிழினி-165, ம.யாயினி-165, ஜெ.கீர்த்திகா-164, இ.சர்மிலன்-163

மு/கைவேலி கணேசா வித்தியாலயம்

க.இசைக்குயிலி-165, ர.கனிக்கா-164.

மு/கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தியாலயம்

க.தமிழரசன்-193, ல.பவிஷன்-185, பா.நவக்குமரன் 177, கு.புரட்சிநிலா-177, சி.டினோஜிகா-174, செ.தினகர்-170, நோ.அபினா-169, பி.இசையரசன்-169, ரா.தான்சியா-166, சு.ஆரணி-164.

மு/புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை

த.சாருஜன்-191, செ.நேருஜன்-189, லி.நீரஜா-188, ச.சாமீரா-186, சு.சொலமன்-185, சு.யுசாந்-185, ல.டதுர்சிகா-184, கு.கதிர்விழி-181, ச.சுடர்னா-180, ச.கோவர்த்தனன்-178, ஜெ.தமிழிசை-178, நி.ஆரணி-178, ஜீ.அக்சயா-178, செ.கில்ஸ்ரொயிட்-176, கு.சிவானுகா-174, ந.கேதுசன்-172, வி.சபீனா-172, ஜெ.எழினிகா-172, ஆ.சுகிர்தன்-171, நி.ஆராதனா-170, சி.தமிழ்நிலா-170, அ.நிவிதா-169, ச.பகீரதி-168, இ.கர்னி-168, சு.அனுராகவன்-168, ஜெ.கலையகன்-167, மே.பவிர்சன்-166, இ.பவானந்தன்-166, செ.ரொக்சன்-166, சு.நிலவன்-165, ர.கிசோமி-164, சா.துசாந்தன்-164, உ.உசாந்தினி-163.

மன்னார்

மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி

அ.ஆன்தாரகா-181, நி.நிரஞ்சினி-179, எஸ்.ஹரினி-177, வி.ஏ.டிலைன்சி-175, அ.பிரித்திக்கா-173, ஜெ.அஸ்வினி-168, அ.தேஸ்னிக்கா-167, அ.ஏசியா-165, டெனிக்கொலின்-165, வி.சஞ்சனா-164, கெ.நிஸ்வின்-163, எம்.டி.பாத்திமா சகானா-162.

கிளிநொச்சி

கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை

கி.விதுர்சன்-177, ச.விதுசனா-176, ர.தமிழ்காவியா-173, க.சங்கீர்த்தனன்-168, சி.தமிழரசி-167.

கிளி/மத்திய ஆரம்ப வித்தியாலயம்

கே.கதிர்நிலவன்-195, சு.சகித்தியன்-192, ய.அபிநயன்-185, ச.கீர்த்தனா-183, பி.காந்தரூபன்-183, க.பரிதிமாறன்-180, உ.அறிவரசன்-177, பு.லாவண்யா-177, அ.ஆதித்தன்-176, க.பரிதிவேந்தன்-176, ஜெ.பிரதாயினி-176, இ.தேனுஜா-173, க.விக்ஸனாகா-172, சா.யதுசன்-171, பா.துளசிகா-171, ச.சபினா-170, ஜெ.நேருஜா-169, லோ.அபிநயா-168, றெ.சாள்ஸ் ஒளின்ராசாங்கரி-168, க.சுமேதா-168, ச.தர்ஷா-167, ஜெ.புரட்சியன்-167, வி.வல்லரசன்-165, கோ.பிரணவன்-165, தி.குபேரன்-165, ச.குளக்கதிர்-163.

கிளி/விவேகானந்த வித்தியாலயம்

கூ.சத்தியன்-191, இ.நிருசிகா-185, சி.கிருபாலினி-178, பு.சகிர்தன்-177, ந.கதீசனா-173, ஸ்ரீ.கலைமாறன்-172, உ.யதுசன்-171, மோ.நிரோயன்-170, பா.தர்மிதா-169, செ.கோபிதன்-168, அ.இனியவன்-168, சி.தமிழின்பன்-168, ர.கபிலன்-164, ச.சுயானி-164, பு.சகிந்தன்-163.

கிளி/ செல்வாநகர் அ.த.க.பாடசாலை

சி.கலையன்-165

கிளி/ஸ்கந்தபுரம் இல 02 அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

வி.தயா-175, நி.தமிழின்பன்-165.

கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்

ல.தசாந்-176, ர.நந்தீசன்-170, சி.லக்ஷன்-168, சி.அருண்கீரன்-169, செ.டினோகரன்-176, வி.டிதுர்சன்-169, க.தேனுஷன்-196, ய.யதுர்சன்-178, சு.தர்ஷாந்-165, சி.மகிழன்பன்-182, சு.மதுஷாங்கன்-166, ர.இயலவன்-165, சி.கோரூபன்-164, நி.தருஸ்சன்-165, ற.ரதீஷன்-167, க.துர்க்கா-171, வீ.கதுர்சிகா-172, ஞா.சுவேதா-178, ப.சுடரெழில்-182, ம.திவானி-178, ல.நபிதா-186, றொ.அல்சிகா-175, சி.சுகன்ஜா-191, உ.நிதர்சனா-165, சி.சாகித்தியா-169, ப.நர்த்தகி-169, அ.ஆரபி-165, இ.ஆபனா-184, ரா.ஷாதுர்ஜா-172, ச.சஞ்சிகா-163, க.கர்ணிகா-166, நா.தரணிகா-179, ப.பிரவினா-171, ய.திவ்யமகிழன்-178, ம.அபிமன்-178, லோ.சதுர்சிகன்-168, பி.அபிராமி-185, கு.தர்மிகன்-166, பா.தகையெழிவோள்-188, சு.அக்ஷயன்-177, க.கஜானன்-164, மா.சஞ்சீவன்-164, தெ.கதிர்-183, ஜெ.பிரேம் டிலக்ஷன்-193, வி.கலைமாறன்-184, ற.ஜதுலயன்-177, சு.ஜனகன்-193, சே.பகவான்-173, க.நேசிகா-181, ஜெ.தர்த்தனா-183, ஜெ.ஸ்ரீவஸ்ணவி-170, ச.அகநிலா-167, த.அர்ச்சனா-174, ஜெ.சௌமிதா-165, ஜெ.கஷ்யா-164.

(2-271-254-281)

'வனமாக்கள்' தேசிய நிகழ்ச்சித்திட்டமும் சுற்றாடல் மாநாடும் நேற்று மன்னாரில்

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது

(மன்னார்)

நீலப் பசுமை யுகத்தை நோக்கி அரசாங்கம் முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டத்திற்கேற்ப வருடாந்தம் மாவட்ட மட்டத்தில் இடம் பெறும் "வனரோபா" அதாவது வனமாக்கள் தேசிய நிகழ்ச்சித் திட்டமும் சுற்றாடல் மாநாடும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னார் மாவட்டத்தில் இடம் பெற்றது.

மன்னார் -மதவாச்சி பிரதான வீதியில் உள்ள தம்பனைக்குளம் பகுதியில் காலை 9.30 மணியளவில் "வனரோபா" தேசிய நிகழ்ச்சித்திட்டம் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் நடை முறைப்படுத்தப்பட்டது.

இதன் போது பாடசாலை மாணவர்கள், திணைக்கள பணியாளர்களை இணைத்து மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

அதனைத் தொடர்ந்து சுற்றாடல் மாநாடு ஜனாதிபதி தலைமையில் முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் நகர சபை விளையாட்ட ரங்கில் இடம் பெற்றது.

இலங்கையின் வன அடர்த்தியை 32 வீதமாக அதிகரிக்கும் இலக்கை அடைந்து கொள்ளும் நோக்குடன் சுற்றாடல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி எண்ணக்கருவின் அடிப்படையில் "வனரோபா" தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டம் நடை முறைப்படுத்தப்படுவதுடன், ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் தேசிய மர நடுகை மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் கீழ் அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன் இவ்வருடமும் ஒக்டோபர் 1 முதல் 31 ஆம் திகதி வரை இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் மன்னாரில் இடம் பெற்ற குறித்த நிகழ்வுகளில் அமைச்சர்களான நிசாத் பதியுதீன், வீர குமார, பிரதி அமைச்சர்களான காதர் மஸ்தான், அங்கஜன் இராமநாதன், பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மாகாண சபை உறுப்பினர்கள், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச் செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதி நிதிகள் உற்பட அழைக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது வருகை தந்தவர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-285)

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி முல்லை. மாவட்ட செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம்

(பனிக்கன்குளம்)

தமிழ் அரசியல் கைதி களை விடுதலை செய்யக் கோரியும் அவர்களது உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவளித்தும் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

வன்னிக்குநோஸ் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள், கிராம அமைப்புகள், விளையாட்டுக் கழகங்கள், வர்த்தகர்கள், கலைஞர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

நீண்டகாலமாக எதுவித விசாரணைகளுமின்றி சிறையில் உள்ள அரசியல் கைதிகள் தம்மை விடுவிக்கக் கோரி உணவுதவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் அவர்களுக்கு ஆதரவளித்தும் மாபெரும் கண்டனப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது. மேலும் இந்த கண்டனப் போராட்டத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனதிராசா உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் பொது அமைப்புக்களும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன் மாவட்டச் செயலகத்தில் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர். (2-281)

விக்ஸ்காடு காணிப்பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்பட்டது

(பனிக்கன்குளம்)

வவுனியா பாரதிபுரம் கிராம அலுவலர் பிரிவுக் குட்பட்ட விக்ஸ்காட்டு கிராமத்தில் நேற்று முன்தினம் பிரதேச செயலகத்தினால் பதிவு செய்யப்பட்ட 47 குடும்பங்களுக்கு காணி அளவீடு செய்யப்பட்டு வழங்கி வைக்கப்பட்டது.

பிரதேச செயலகமானது ஆரம்பத்தில் குடியேறிய 47 குடும்பங்களுக்கு காணி பெற்று தருவதாக வாக்களித்திருந்த நிலையில் நேற்று முன்தினம் காணிகள் அளவீடு செய்யப்பட்டு அம்மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் குடியிருக்காத ஏழு குடும்பங்களுக்கு காணி வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தி வைக்கப்பட்டதால் அக்குடும்பத்தினர் பிரதேச செயலகத்தின் காணி உத்தியோகத்தருடன் முரண்பட்ட நிலையில் நெளுக்குளம் பொலிஸாரின் பாதுகாப்புடன் காணிகள் அளவீடு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களிடம் பொலிஸார் மற்றும் பிரதேச கிராம உத்தியோகத்தர் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் குறித்த 47 குடும்பங்களில் எவராவது குடியேறாமல் இருந்தால் அக்காணியை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் காணிப் பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. (2-281)

ஒழுங்கற்ற வரவுகளைக் கொண்ட ஏழு சிறார்கள் நீதிமன்றில் ஆஜர்

(கண்டாவளை)

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதிகளில் பாடசாலைகளுக்குச் செல்லாத மற்றும் ஒழுங்கற்ற வரவுகளைக் கொண்ட ஏழு சிறார்கள் நேற்று முன்தினம் பிடிக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டதையடுத்து நான்கு சிறுவர்களை சான்று பெற்ற பாடசாலையில் தங்க வைக்குமாறும் ஏனைய மூன்று சிறுவர்கள் எச்சரிக்கப்பட்டு பெற்றோர்களிடம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதிகளில் பாடசாலைகளுக்குச் செல்லாது அல்லது ஒழுங்கற்ற வரவுகளைக்கொண்ட நிலையில் காணப்பட்டநிலையில் சிறுவர்களை மீளக்கற்றலில் இணைக்கும் வகையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் மாவட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர் நன்னடத்தை அதிகாரி உள்ளிட்டோர் கிளிநொச்சி நகரை அண்மித்த ஆனந்தபுரம், சாந்தபுரம் போன்ற பகுதிகளில் மேற்கொண்ட தேடுதலின்போது நேற்று முன்தினம் ஏழு சிறுவர்கள் பிடிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட ஏழு சிறுவர்களும் அன்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து நான்கு சிறுவர்களை சான்று பெற்ற பாடசாலையில் தங்க வைக்குமாறு உத்தரவிட்டுள்ளதுடன், ஏனைய மூன்று சிறுவர்களும் அவர்களது பெற்றோர்களும் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (2-315)

மாலைநேர விசேட வகுப்பு

(வவுனியா)

வவுனியா அறிவொளி சனசமூக நிலையம் முன்னெடுக்கும் "கல்விக்கு கரம் கொடுப்போம்" எனும் தொனிப் பொருளில் உமா உதவி திட்டம் கனடா நிதி அனுசரணையில் இலவசமாக இன்று சனிக்கிழமையிலிருந்து எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை மாலைநேர விசேட வகுப்பு ஆரம்பமாகவுள்ளது.

இதில் கணனி மற்றும் தமிழ், கணிதம், ஆங்கிலம், சமயம் ஆகிய வகுப்புகளை நடத்துவதற்கு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு க.பொ.த. சாதாரண தரத்தில் 6 பாடச்சித்தி, க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடச் சித்தியும் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரி எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர் ஜெகதீசன் 077 442 5678, சமூக ஆர்வளர்- அ.மாதவன்-077 835 1401 ஆகியோரின்தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2)

இன்று புரட்டாதி சனி 03

ஏழரைச்சனியில் நன்மை தருவன

வாடகை வீட்டுக்கு குடிமாறலாம்.
வெளியூர் வேலைக்கு செல்லலாம்.
பழைய கடன்களை அடைக்கலாம்.
மகப்பேறு செய்து கொள்ளலாம்.
இடமாற்றங்கள் போன்றவைகளைச் செய்யலாம்.
உயில்கள் எழுதி வைக்கலாம்.
தான தர்ம செட்டில்மென்ட் செய்யலாம்.
பழைய கோவில்களை திருத்திக் கட்டலாம்.
குலதெய்வ வழிபாடுகள் செய்யலாம்.
சீமந்தம், வளைகாப்பு செய்யலாம்.
சுபவிரயங்களுக்காக செலவிடலாம்.
பழைய கட்டடங்கள் புனருத்தாரண வேலை செய்யலாம்.
பழைய பொருட்களை விற்கலாம்.
புனித யாத்திரைகள் நன்கு செய்யலாம்.
நல்ல விரதங்களை கடைப்பிடிக்கலாம்.
தியானம், யோகா பயிற்சி செய்யலாம்.
அன்னம், வஸ்திரம் தானங்கள் செய்யலாம்.
வேறு வேலைக்கு செல்லலாம்.
அலுவலக இடமாற்றம் நல்லதாகும்.
குருகுலத்தில் இணைந்து பணியாற்றலாம்.
எளிமையாக வாழ்க்கையை நடத்தலாம்.
பலன் கருதாது பணிவுடன் பணியாற்றலாம்.

ஏழரைச் சனியில் கூடாதவை

புதிய முதலீடுகள் செய்யக்கூடாது.
புதிய நட்புறவுகள் ஏற்படக்கூடாது.
புதிய மனைபுகுதல் போன்றவை கூடாது.
திருமணங்கள் செய்யக்கூடாது.
தொழில் நிறுவனங்கள் ஆரம்பிக்கக் கூடாது.
தொழிலில் கூட்டு சேர்க்கக் கூடாது.
அஸ்திவாரங்கள் போடக்கூடாது.
பெயர் மாற்றங்கள் செய்யக்கூடாது.
கல்வியில் மாற்றங்கள் செய்யக்கூடாது.
உடைகளில் மாற்றங்கள் செய்யக்கூடாது.
தினசரி வேலைகளில் மாற்றங்கள் கூடாது.
பத்திரங்கள் பதிவு செய்யக்கூடாது.
பத்திரங்களில் கையெழுத்திடக் கூடாது.
புதிய நவீன மருந்துகள் உண்ணக் கூடாது.
புதிய சம்பந்தங்கள் செய்யக்கூடாது.
புதிய ஒப்பந்தங்கள் செய்யக்கூடாது.
கடன்கள் தருவதும் பெறுவதும் கூடாது.
மது போன்ற பழக்கங்கள் பழகிடக்கூடாது.
இரவில் அதிகமாய் விழித்திருக்கக்கூடாது.
மனதை திட்டங்களுக்காக அலைக்கழிக்கக்கூடாது.
புதிதாக அரசியலில் ஈடுபடக்கூடாது.
வாகனங்களை வேகமாக ஓட்டக்கூடாது.
அவசரமாக பதற்றமாய் செய்யக்கூடாது.

ஞான பரிகாரங்கள்

அறவழியில் என்றும் நடப்பது நன்று.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
இசைகளில் நல்லவை கேட்பது நன்று.
ஈகை குணத்துடன் இருப்பது நன்று.
உண்மைகளை மட்டுமே பேசுவது நன்று.
ஊருக்கு சேவைகள் செய்வது நன்று.
எளிமையாக இருப்பது என்றும் நன்று.
ஏழைகளை ஆதரிப்பது மிகவும் நன்று.
ஐக்கியங்கள் ஆகாதிருப்பது மிக நன்று.
ஒற்றுமையாய் வாழ்வதே மெத்த நன்று.
ஓசைகளை அளவாய் ஒலிப்பது நன்று.
ஔவை காட்டிய அருள்வழி நன்று.
கருணை காட்டுவது அன்புக்கு நன்று.
கல்வியை போற்றுவது என்றும் நன்று.
காலத்தை உணர்ந்து நடப்பது நன்று.
மருத்துவ உதவி மக்களுக்கு நன்று.
சத்தியத்தைக் காப்பது சந்ததிக்கு நன்று.
ஞானநூல்களை முறையாய் கற்பது நன்று.
நன்மைகள் மட்டுமே நினைப்பது நன்று.
வாக்கை காப்பது என்றுமே நன்று.
வாதங்கள் புரியாதிருப்பது என்றும் நன்றே

ஜோதிஷ விற்பன்னர் எஸ்.நிரோஷ்குமார்

ஏழரைச்சனிக்கு லௌகீக பரிகாரங்கள்

கோவில்களில் விளக்கு வழிபாடு நடத்தவும்.
அர்ச்சனைகளை சங்கல்பத்துடன் செய்யவும்.
புனித யாத்திரைகளை குழுவுடன் செல்லவும்.
குலதெய்வக் கோவிலுக்கு சென்று பூஜிக்கவும்.
ஜோதிடரிடம் ஆலோசனைகளைப் பெறவும்.
எள்ளெண்ணெய் விளக்கு போட்டு வரவும்.
எள்ளுசாதத்தை காக்கைக்கு வைக்கவும்.
சனிக்கிழமைகளில் சிறப்பாக வழிபடவேண்டும்.
சனிக்கிழமை அன்று விரதங்கள் இருக்கவும்.
சங்கடஹர சதுர்த்தி விரதம் அனுஷ்டிக்கவும்.
கந்தஷஷ்டி விரதம் தொடர்ந்து செய்யவும்.
திங்கட்கிழமை சிவாலயம் தரிசனம் செய்யவும்.
வெள்ளிக்கிழமை அம்பிகையை வணங்கவும்.
அமாவாசையில் அனுமனை பூஜிக்கவேண்டும்.
பௌர்ணமியில் சத்யநாராயணரை பூஜிக்கவும்.
சுவாதியன்று ஸ்ரீநரசிம்மரை தரிசிக்கவும்.
பிரதோஷ பூஜைகளில் கலந்து கொள்ளவும்.
ஏழைகளுக்கு அன்னதானம் செய்யவேண்டும்.
நல்ல வஸ்திரங்கள் இல்லாதவருக்கு தரவும்.
பெண்ணின் திருமணத்துக்கு உதவ வேண்டும்.
கல்வி தானங்கள் செய்ய வேண்டும்.
உடன்பிறந்தோருக்கு உதவிகள் செய்யவும்.
நோயாளிக்கு மருத்துவ உதவிகளைத் தரவும்.
ஊனமுற்றோருக்கு எல்லா நலனும் செய்யவும்.
வயோதிபர்களிடம் அன்பாக நடக்க வேண்டும்.
தாய்தந்தையரை தினசரி வணங்க வேண்டும்.
சற்குருநாதரை அடிக்கடி தரிசிக்க வேண்டும்.
நல்ல நண்பர்களுடன் இணைய வேண்டும்.
பிதுருக்களின் கருமங்களை நன்கு செய்யவும்.
அவ்வப்போது புனிதநீரில் குளிக்க வேண்டும்.
பண்டிகைகளை ஆடம்பரமில்லாது நடத்தவும்.
தீட்டுவீட்டு உணவை உண்ணாதிருக்கவும்.
போதைகள் தருவனவற்றை விலக்க வேண்டும்.
சரியான மருத்துவரை நாட வேண்டும்.
நல்ல எண்ணங்களோடு இருக்க வேண்டும்.
கோபம் முதலியவற்றை விட்டுவிட வேண்டும்.
ஆகாரத்தில் நல்ல நியமனங்கள் வேண்டும்.
சைவ உணவுகளை மட்டுமே உண்ண வேண்டும்.
வாகனங்களை மெதுவாக இயக்க வேண்டும்.
பந்துக்களை பகைக்காது இருக்க வேண்டும்.
தனது குலத்தின் ஆசாரப்படி இருக்க வேண்டும்.
அநாதைகளுக்கு உணவளிக்க வேண்டும்.
முதியோர்க்கு உடலால் சேவை செய்யவும்.
பழையதை உண்ணாதிருக்க வேண்டும்.
அரசமரத்து பிள்ளையாரை வலம் வரவும்.
பிள்ளையாருக்கு அறுகம்புல் வைக்கவும்.
முருகனுக்கு மகிழம்பூ மாலை சாற்றவும்.
அம்மனுக்கு செம்பருத்திப்பூ சமர்ப்பிக்கவும்.
சிவாலயத்துக்கு வில்வபத்ரம் தரவேண்டும்.
ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை போடவும்.
மகாலட்சுமிக்கு தாமரைப்பூ அணிவிக்கவும்.
மகாவிஷ்ணுவுக்கு துளசியை சமர்ப்பிக்கவும்.
சற்குருவுக்கு சேவைகள் செய்ய வேண்டும்.
குளிருக்கு கம்பளி தானம் தரவேண்டும்.
மழைகாலத்தில் கொடை தானம் தரவேண்டும்.
எறும்பு புற்றில் சர்க்கரையைப் போடவும்.
ஏழைக்கு வஸ்திர தானம் தரவேண்டும்.
கல்விக்கு உதவிகள் செய்யவேண்டும்.
முடிந்த அளவே தானம் தரவேண்டும்.
கடன்படாமல் இருக்க வேண்டும்.
கடமைகளை சரியாக செய்ய வேண்டும்.

நல்லொழுக்க தினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச நல்லொழுக்க தினம் ஒக்டோபர் 3 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT) "மது, புகை, போதைப் பொருள் பாவனையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்க முன் வருவோம்" என்ற தொனிப் பொருளில் கொடி வார நிகழ்வினை நிறுவன உத்தியோகத்தர்கள், நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் இணைந்து முன்னெடுத்து வருகின்றது.

இதில் நேற்று பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் மற்றும் பருத்தித்துறை சமூக சேவை அதிகாரிக்கு சம்பிரதாய முறையில் வழங்கி வைத்து ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து பருத்தித்துறை வியாபார நிறுவனங்கள், பருத்தித்துறை பொலிஸ் நிலையம் மற்றும் ஏனைய நிறுவனங்களிடம் கொடிகள் வழங்கப்பட்டு சர்வதேச நல்லொழுக்க தினம் நினைவு அனுஷ்டிக்கப்பட்டது. (இ-7)

கொழும்பில் சீனக் கடற்படை நீர்மூழ்கி ஆதரவுக் கப்பல்



(கொழும்பு)

சீன கடற்படையின் நீர்மூழ்கி ஆதரவுக் கப்பல் (Submarine Support Ship) நேற்று முன்தினம் கொழும்புத்துறைமுகத்துக்கு நல்லெண்ணப் பயணமாக வந்துள்ளது.இந்தக் கப்பலுக்கு இலங்கை கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர்.நான்கு நாட்கள் பயணமாக கொழும்பு வந்துள்ள, Type 926 ரகத்தைச் சேர்ந்த Ocean Island (864) என்ற சீனாவின் நீர்மூழ்கி ஆதரவுக் கப்பல்,135 மீற்றர் நீளத்தையும், 18.6 மீற்றர் அகலத்தையும் கொண்டது.

நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு வழித்துணையாக செல்லும் இந்தக் கப்பலில்- விநியோக ஆதரவு மற்றும் நீர்மூழ்கிகளைப்பழுதுபார்க்கும், செயலிழந்த நீர்மூழ்கிகளை கடலுக்கு அடியில் இருந்து மீட்கும், நவீன வசதிகள் மற்றும் அதற்கான நீர்மூழ்கி வாகனங்கள் போன்றவற்றையும் கொண்டுள்ளது.

கொழும்பில் இந்தக் கப்பல் தங்கியிருக்கும் போது, சீன மாலுமிகள் இலங்கை கடற் படையினருடன் இணைந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளனர். அதேவேளை, கடந்தமாதம்30 ஆம்திகதி கொழும்பு துறைமுகத்துக்கு வந்த ஜப்பானியக் கடற்படையின் ககா என்ற உலங்குவானூர்தி தாங்கி கப்பலும், இனா சுமா என்ற நாசகாரி கப்பலும், நேற்று முன்தினம்கொழும்புத் துறைமுகத்தில் இருந்து புறப் பட்டுச் சென்றன. (இ-7)

வீதியில் அநாகரிகம்

பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்த பொலிஸார்

9 ஆம் திகதி வரை விளக்கமறியலில்

(கொழும்பு)

வீதியில் அநாகரிகமான முறையில் நடந்துகொண்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை எதிர்வரும் 09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மத்துகம நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். தெவான பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவதாகக் கூறி தன்னால் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விடுதலை செய்தமைக்கு எதிராக குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தெவான சந்தியில் வைத்து தனது உத்தியோகபூர்வ துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுக் கொள்வதாக அச்சுறுத்தி எதிர்ப்பில் ஈடுபட்டிருந்தார். இதனையடுத்து சுமார் இரண்டு மணித்தியால போராட்டத்தின் பின் விசேட அதிரடிப்படையினரால் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மடக்கிப் பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.

மணல் அகழ்வு தொடர்பில் கைது செய்யப்பட்டவரிடம் சட்ட ரீதியான அனுமதிப்பத்திரம் இருந்ததால் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விடுவித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வீதியில் அநாகரிகமான முறையில் நடந்துகொண்டதால் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக சட்டம் மற்றும்ஒழுங்கு அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

தேர்தலை வேண்டுமென்றே அரசாங்கம் பிற்போடுகிறது

தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தல்களை, அரசாங்கம் வேண்டுமென்றே பிற்போடுகிறது என்று குற்றஞ்சாட்டியுள்ள, தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் காணப்படும் தாமதநிலை தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக, தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களை அடுத்த வாரம் சந்திக்கவுள்ளன.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் உரையாற்றிய , சுதந்திரமானதும் நீதியானதும் மானதேர்தல்களுக்கான இயக்கத்தின் (கபே) நிறைவேற்றுப் பணிப்பாளரான கீர்த்தி தென்னக்கோன், உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய மாகாணங்களுக்கான சபைகள், ஏற்கனவே தமது காலத்தை முடித்துள்ள நிலையில், வடக்கு, வடமேல், மத்திய மாகாண சபைகளும், இம்மாதம் 28ஆம் திகதியுடன் தமது காலத்தை முடிக்கவுள்ளமையைச் சுட்டிக் காட்டிய அவர், "அதன்படி, 9 மாகாண சபைகளில் 6 மாகாண சபைகள், ஒக்டோபர் 28ஆம் திகதியிலிருந்து இயங்காது" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

குரு பகவானை தேடிச் சென்ற நாமல்

(கொழும்பு)

குரு பகவான் நேற்று முன்தினம் இரவு 10.05 மணிக்கு துலாம் இராசியிலிருந்து விருச்சிக இராசிக்கு மாறும் நிகழ்வை உலகளாவிய ரீதியில் உள்ள இந்துக்கள் குரு பெயர்ச்சியாக வழிபட்டார்கள்.

இதை முன்னிட்டு அனைத்து இந்து ஆலயங்களிலும் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதுடன் அனைவரும் ஆலயங்களுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

குரு மாறும் போது ஒவ்வொரு இராசிக்குமான பலன்களும் மாறுபடும். சிலருக்கு நன்மை பயக்கும், சில இராசிக்காரர்களுக்கு மத்திமம் மற்றும் தீய பலன்கள் கிடைக்கும்.

இதற்கான பரிகாரங்களை செய்வதற்கு அனைவரும் பயபக்தியுடன் ஆலயங்களுக்குச் செல்வார்கள்.

அந்த வகையில் நேற்று முன்தினம் இலங்கையிலும் பலரும்ஆலயங்களை நோக்கி படையெடுத்தனர்.

இந்துக்கள் மட்டுமல்லாது ஏனைய மதத்தவர்களும் நேற்று முன்தினம் ஆலயங்களுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

அந்த வகையில், வெள்ளவத்தையில் உள்ள மயூரபதி அம்மன் ஆலயத்தில் குரு பகவானுக்கு நடைபெற்ற மாலை நேர விசேட பூஜை வழிபாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

விசேட பூஜைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அவருடன் ஏனைய முக்கியஸ்தர்களும்கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

பெண் திடீர் மரணம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-சரசாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மதியம் திடீரென உயிரிழந்துள்ளார். முதல் நாள் இரவு மழையில் நனைந்ததாகவும் அடுத்த நாள் மதியம் உணர்விழந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு உறவினர்கள் கொண்டு சென்றுள்ளனர்.

இருப்பினும் ஏற்கனவே அவரது உயிர் பிரிந்து விட்டதாக சாவகச்சேரி வைத்திய சாலை வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர். சரசாலையைச் சேர்ந்த ராஜதுரை ராஜலோஜினி (வயது-36) என்ற பெண்ணே இவ்வாறு திடீரென மரணித்துள்ளார். இவரது மரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-30)

பட்ஜெட்டில் தீர்வு உள்வாங்கப்படாவிட்டால் நாடு பாரிய நெருக்கடியை சந்திக்க நேரிடும்

பொருளாதார சபை உறுப்பினர் பேராசிரியர் லலித் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு 2019 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் குறுகிய கால மற்றும் நீண்டகால தீர்வுகள் உள்வாங்கப்பட வேண்டியது அவசியம். இல்லையேல் விரைவில் நாடு மீண்டுமொரு பாரிய நெருக்கடியை சந்திக்க நேரிடுமென்றும் தேசிய பொருளாதார சபை உறுப்பினர் பேராசிரியர் லலித் சமரகோன் எச்சரித்தார்.

உடனடி பிரச்சினையிலிருந்து வெளிவருவதற்கான குறுகிய கால தீர்மானங்கள் தற்போதைக்கு அவசியம் என்கின்றபோதும் இவற்றைஅடிப்படையாகக்கொண்டு 2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தை வடிவமைப்பது நாட்டின் ஸ்திரமான பொருளாதாரத்துக்கு பொருத்தமாக அமையாது என்றும் பேராசிரியர் விளக்கமளித்தார்.

அத்துடன் எதிர்காலத்தில் எந்தவொரு பொருளாதார நெருக்கடிக்கும் முகம் கொடுக்கும் வகையில் நாட்டுக்கென உறுதியான, நீண்டகாலத்தை மையமாகக் கொண்ட அடிப்படை பொருளாதார கொள்கை அவசியமென்றும் அவர் வலியுறுத்தினார்.

நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்டது. இதன்போது பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டம் எத்தகைய முக்கியத்துவத்தை கொண்டுள்ளதென ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பொருளாதார நெருக்கடிக்கு கொள்கையடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும். இதற்கு மேலும் காலம் தாமதிக்க முடியாது. தாமதித்தால் நாடு விரைவில் மீண்டுமொரு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடும். தீர்வுகள் தற்போதைக்கு குறுகிய காலத்தை அடிப்படையாக கொண்டிருந்தாலும் 2019 வரவு- செலவுத் திட்டத்திற்கு இவை பொருந்தமாட்டாது. எனவே எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் மத்திம மற்றும் நீண்டகால தீர்வுகள் உள்வாங்கப்பட வேண்டும்.

இதேவேளை, கடன் வழங்கிய முகவர் நிலையங்கள் வட்டி வீதத்தை அதிகரிப்பதற்கும் முதலீட்டாளர்கள் முதலீடுகளை மீளப்பெறுவதற்கும் காத்துக்கொண்டிருக்கும் இக்கட்டான சூழ்நிலையில் நாட்டின் பொருளாதார அத்திவாரம் ஸ்திரமடைய வேண்டும் என்றும் இல்லாவிட்டால் பாரிய பிரச்சினைகளுக்கு நாடும் மக்களும் முகம் கொடுக்க நேரிடுமென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான உடனடி தீர்வாக வரி அறவிடுதல், வெளிநாட்டு கையிருப்பை அதிகரித்தல், ஏற்றுமதியை அதிகரித்தல் ஆகிய விடயங்களில் தற்போது நிதி அமைச்சு, மத்திய வங்கி மற்றும் தேசிய பொருளாதார சபை ஆகியன இணைந்து பல்வேறு வேலைத்திட்டங்களை அமுல்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் நாடு மிகப் பெரிய கடனை திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளதனால் அடுத்த ஐந்து வருடங்களுக்கு கடனை திருப்பிச் செலுத்துவதற்கான தெளிவான செயல் திட்டமொன்று நாட்டுக்கு அவசியமென்றும் அவர் விளக்கமளித்தார்.

இன்றைய சூழ்நிலையில் வரி அறவிடுவது தவிர்க்க முடியாதது. என்றாலும் இந்த வரி சாதாரண மக்களை பாதிக்காத வகையில் உயர் மட்டங்களிலிருந்து அறவிடப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

தற்போது நாட்டில் 7.3 டொலர் பில்லியன் ரூபாவே கையிருப்பாக உள்ளது. இக்கையிருப்பை அதிகரிக்க அரசாங்கம்பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்துள்ளது. உடனடியாக சந்தையில் விடுவிப்பதற்காக மத்திய வங்கி 200 டொலர் பில்லியன் ரூபாவை தயாராக வைத்துள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் உள்ளூர் உற்பத்திக்கு சிறந்த சந்தை வாய்ப்பு இருக்குமானால்எந்தவொரு வெளித் தாக்கங்களும் நாட்டின் பொருளாதாரத்தை பெருமளவில் பாதிக்காதென்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கூடிய தேசிய பொருளாதார சபை நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் அதிலிருந்து மீள்வதற்கான வழிவகைகள் தொடர்பில் வங்கிகள், தனியார் துறையினர், வர்த்தக அமைப்புக்கள், சம்மேளனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடனும் பல்கலைக்கழகங்களின் பீடாதிபதிகளுடனும் விரிவாக கலந்துரையாடி பல்வேறு யோசனைகளை பெற்றுக் கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

பாரதம்

ஏழு தமிழர்கள் விடுதலை தொடர்பில் ஆளுநர் மௌனம் காப்பது ஏன்?

தமிழக வாழ்வுரிமை கட்சித்தலைவர் வேல்முருகன் கேள்வி

▲ முருகன் ▲ சாந்தன் ▲ பேரறிவாளன்

(சென்னை)

ராஜீவ் கொலை வழக்கில் சிறையில் உள்ள பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு தமிழர்கள் விடுதலை தொடர்பில் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் மௌனம் காப்பது ஏன் என, வேல்முருகன் கேள்வியெழுப்பியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை செய்தியாளர்களை சந்தித்த தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன் மேற்படி தெரிவித்தார். இதன் போது மேலும் கூறிய அவர்.

"பேரறிவாளன் மற்றும் நளினி, சாந்தன் உள்ளிட்ட ஏழு பேரையும் விடுதலை செய்யும் அதிகாரத்தை சட்டப் பிரிவு 1612 இன் கீழ் தமிழக அரசிடம் வழங்கியுள்ளது உச்சநீதிமன்றம்.

தமிழக அரசும் அவர்களை விடுதலை செய்யும் தீர்மானத்தை நிறைவேற்றி, அதற்கு அனுமதி பெறும் வகையில் தீர்மான கடிதத்தை ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளது.

ஆயினும்இதுவரை ஆளுநர் அந்த கடிதத்தில் கையெழுத்திடவில்லை என்பதோடு, அது தொடர்பில் மௌனம் காத்து வருகிறார்.

இந்நிலையில், தமிழக அரசும் அது தொடர்பில் கேள்வியெழுப்பாமல் இருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனவே இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரியுள்ளார். (7)

அமைதிக்கா இருவருக்கு ப

(ஒஸ்லோ)

2018ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு டென்னிஸ் முக்வேஜா மற்றும் நாடியா முராத் ஆகிய இருவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இயற்பியல், மருத்துவம், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் மகத்தான சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டு தோறும் நோபல் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது. அந்த வகையில், 2018ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நேற்று அறிவிக்கப்பட்டது.

கொங்கோ நாட்டை சேர்ந்த டென்னிஸ் முக்வேஜா மற்றும் ஈராக் நாட்டை சேர்ந்த நாடியா முராத் ஆகியோருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

கொங்கோ நாட்டை சேர்ந்த வைத்தியரான டென்னிஸ் முக்வேஜா, போர்களில் பெண்களுக்கு எதிராக நடத்தப்படும் பாலியல் வன்கொடுமைக்கு எதிராக போராடியவர். கொங்

இந்தியாவிலிருந்து 7 ரோஹிஞ்யா முஸ்லிம்கள் நாடு கடத்தப்பட்டனர்

(மணிப்பூர்)

சட்டவிரோதமாக இந்தியாவிற்கு பிரவேசித்த 7 ரோஹிஞ்யா முஸ்லிம்கள் நேற்று நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அவர்களை நாடுகடத்த இந்திய உச்ச நீதிமன்றம் அனுமதியளித்த நிலையில், மணிப்பூர் மியன்மார் எல்லைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அந்நாட்டு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தியாவில் சட்ட விரோதமாக தஞ்சமடைந்துள்ள 40 ஆயிரம் ரோஹிஞ்யா முஸ்லிம் அகதிகளை நாடு கடத்த இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ள நிலையில், அதற்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இவர்கள் நாடுகடத்தப்படுவதை எதிர்த்து, இந்திய உச்ச நீதிமன்றத்தில் அவசர மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு, அது நேற்று முன்தினம் விசாரணைக்கும் வந்தது.

பொதுநல வழக்குகளில் ஆஜராகி வரும் சட்டத்தரணி பிரசாந்த் பூஷன் இந்த மனுவை தாக்கல் செய்து அகதிகள் நாடுகடத்துவதை நிறுத்துமாறு கோரினார்.

எனினும், ரோஹிஞ்யா அகதிகளை தங்கள் நாட்டு குடிமக்கள் என மியன்மார் அரசு கூறியிருப்பதாகவும், தங்கள் நாட்டிற்கு திரும்ப அழைத்துக் கொள்ள ஒப்புதல் அளித்திருப்பதாகவும் இந்திய மத்திய அரசு தெரிவித்தது.

இந்நிலையில், குறித்த 7 அகதிகளும் நேற்றைய தினம், மியன்மார் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களின் நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து மியன்மார் நாட்டிற்கு அகதிகள் நாடு கடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும். (7)

இந்தோனேசியாவி உயிரிழப்பு 1560



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமி தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1560 ஆக அதிகரித்துள்ளது.

இன்னும் ஆயிரக்கணக்கான மக்கள் மண்ணுக்குள் புதையுண்டிருக்கலாமென அஞ்சப்படுகின்ற நிலையில், மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக சுலவேசி தீவின் முக்கிய நகரான பலுவில் மாத்திரம் 2,400 கட்டடங்கள் தரைமட்டமாகியும், மண்ணுக்குள் புதையுண்டும் போயுள்ளன. இந்நிலையில், அங்கு வாழ்ந்த மக்களின் நிலை குறித்து இன்னும் எவ்விதத் தகவலும் வெளியிடப்படவில்லை.

நிலநடுக்கத்தில் சுமார் 2500இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இவர்களுக்கு ஆங்காங்கே கொட்டகைகள் அமைத்து சிகிச்சையளிக்கப்படுகின்றது.

சுலவேசி தீவின் இயல்பு நிலை படிப்படியாக மாறி வருகின்றதோடு, சர்வதேச நிவாரணங்கள் நேற்று முன்தினம் முதல் குறித்த தீவை நோக்கி அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

இந்தியாவுக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் வருகை

செங்கம்பள வரவேற்பு

(டில்லி)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள நிலையில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தியா-ரஷ்யா பங்கேற்கும் 12 ஆவது உச்சி மாநாடு, தலைநகர் டில்லியில் நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இந்தியாவைச் சென்றடைந்தார்.

டில்லி விமான நிலையத்தைச் சென்றடைந்த புடினை, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நேரடியாகச் சென்று வரவேற்றார்.

இதன்போது, அவருக்கு இராணுவ மற்றும் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனை அடுத்து, விளாடிமிர் புடின் டில்லியில் அமைந்துள்ள இந்திய பிரதமரின் இல்லத்துக்கு சென்றார்.

அங்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி புடினை வரவேற்று அழைத்துச்சென்றதுடன், விசேட சந்திப்பிலும் ஈடுபட்டார்.

குறிப்பாக ஐந்து பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியிலான ஏவுகணை கொள்வனவு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேளை இந்தியா-ரஷ்யாவிற்கிடையிலான ஏவுகணைக் கொள்வனவு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படக்கூடாது என்றும், இந்தியா ரஷ்யாவிடமிருந்து ஏவுகணை வாங்கக் கூடாது என்றும், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (7)

வெளிநாடு

...ன நோபல் ...பகிர்ந்தளிப்பு

கோவில் போரினால் பாலியல் வன் கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட பெண்க ளுக்கு சிகிச்சை அளித்தும் வந்தார். ஒருநாளுக்கு 18 அறுவைச்சிகிச்சை களை அவர் செய்து வந்துள்ளார்.

பல ஆண்டுகளாக அமைதிக்கான நோபல் பரிசுக்கு இவர் பரிந்துரைக் கப்பட்டு வந்த போதும் இந்த ஆண்டு தான் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக் நாட்டைச் சேர்ந்த நாடியா முராத், ஈராக்கில் உள்ள சிறுபான்மை இனத்த வரான யாஷிதி இன பெண்க ளின் உரிமைக்காக போராடி யவர். யாஷிதி இன பெண்க ளுக்கு எதிரான அநீதிகள் மற்றும் அடக்குமுறைகளை ஐக்கிய நாடுகளின் சபையில் பேசி உலக நாடுகளின் கவ னத்தை ஈர்த்தார்.

பல்வேறு கொடுமைகளு க்கு உள்ளான யாஷிதி இன பெண்களுக்காக போராடிய தற்காக நாடியா முராத்க்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நாளை மறுதி னம் 8ஆம் திகதி பொருளா தாரத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட உள்ளது குறிப் பிடத்தக்கது. (இ-7)

...வில் நிலநடுக்கம்

...0 ஆக உயர்வு

1988ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற இயற்பியல் விஞ்ஞானி காலமானார்

(வோஷிங்டன்)

'கடவுளின் துகள்' கண்டு பிடித்த அமெரிக்காவை சேர் ந்த பிரபலமான இயற்பியல் விஞ்ஞானி லியோன் லெடர் மேன் காலமானார்.

அமெரிக்காவை சேர்ந்த பிரபலமான இயற்பியல் விஞ் ஞானி லியோன் லெடர்மேன் நேற்று காலமானார்.

அவருக்கு வயது 96. இடாஹோ மாகாணத்தில் ரெக்ஸ்பர்க் நகரில் உள்ள வைத்தியசாலையில் அவர் உயிரிழந்தார்.

அவர் 'முவான் நியுட் ரினோ' கண்டுபிடிப்புக்காக, வேறு 2 விஞ் ஞானிகளு டன் இணைந்து 1988 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற் றார்.

'கடவுளின் துகள்' என்று பிரபலமாக அழைக்கப்படும் கண்டுபிடிப்பையும் இவர் தான் நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

அமெரிக்காவின் அணுசக்தி பிரிவு தலைவர் பதவிக்கு இந்தியப்பெண்

ஜனாதிபதி ட்ரம்ப் பரிந்துரை

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அணு சக்தி பிரிவு தலைவர் பதவி க்கு இந்திய வம்சாவளியை சேர்ந்த பெண் அதிகாரி ரீட்டா பரன்வாலை ட்ரம்ப் பரிந்து ரைத்துள்ளார்.

அமெரிக்காவின் அதிநவீன அணு உலைகளின் மேம் பாட்டுக்கான புதிய சட்டம் ஒன் றில் ஜனாதிபதி ட்ரம்ப், கட ந்த வாரம் கையெழுத்திட் டார். இதன்தொடர்ச்சியாக அமெ ரிக்காவின் எரிசக்தி துறை யின் கீழ் உள்ள அணுசக்தி பிரிவுக்கு புதிய தலைவர் தெரிவு நடைபெற்று வருகிறது.

இந்த பதவிக்கு இந்திய வம்சாவளியை சேர்ந்த பெண் அதிகாரி ரீட்டா பரன்வாலை ட்ரம்ப் பரிந்துரைத்துள்ளார். இவரை செனட் உறுப்பினர் கள் வாக்குப்போட்டு தெரிவு செய்வார்கள்.

இதில் அவரது நியமனம் உறுதியானால், அமெரிக்கா வின் அணுசக்தி தொழில்நு ட்ப ஆய்வு, மேம்பாடு மற்றும் நிர்வாகத்துக்கு ரீட்டாவே பொறு ப்பாவார் என வெள்ளை மாளிகை செய்தி வெளியிட்டு ள்ளது.

இவர் தற்போது அமெரிக்க அணுசக்தி துறையில் விரை

வான கண்டுபிடிப்புக்கான திட்டத்தின் இயக்குநராக பணியாற்றி வருகிறார் என் பது குறிப்பிடத்தக்கது. (7)

இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்காவின் உதவியை நாடிய பாகிஸ்தானின் முயற்சி தோல்வி

(வோஷிங்டன்)

இந்தியா உடன் பேச்சு வார்த்தை நடத்த உதவி செய் யுமாறு அமெரிக்காவிடம் பாகிஸ்தான் விடுத்த கோரி க்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் புதிய பிர தமராக பொறுப்பேற்ற இம் ரான் கான், இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தவிரு ம்புவதாக பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியிருந்தார். இதனை அடுத்து, பாகிஸ்தானின் கோரி க்கையை ஏற்ற இந்தியா, அமெரிக்காவில் இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்து பேச ஒத்துக்கொண் டது.

ஆனால், அதற்கு அடுத்த நாளே காஷ்மீரில் மூன்று பொலிஸார் பயங்கரவாதிக ளால் கடத்தி கொல்லப்பட்ட னர். இதனால், பாகிஸ்தான் உடன் பேச்சுவார்த்தை நட த்தக்கூடாது என பல தரப்புக ளில் இருந்து மத்திய அரசு க்கு அழுத்தம் அதிகரித்தது.

இதனால், பேச்சுவார்த் தையை இந்தியா ரத்து செய் தது. இதனால், பாகிஸ்தான் சற்றே அதிர்ச்சியடைந்தது.

இந்நிலையில், பாகிஸ் தான் வெளியுறவு அமைச் சர் குரேஷி அண்மையில் அமெரிக்க வெளியுறவு அமை ச்சர் போம்பியோ மற்றும்தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜான் போல்டன் ஆகியோரை சந்தி த்து பேசினார். அப்போது, அமெரிக்கா - பாகிஸ்தான் இடையே உள்ள பிரச்சினை கள் விவாதிக்கப்பட்டன.

பேச்சுவார்த்தையின்போது, இந்தியா உடன் சமரசம் செய்து வைத்து மீண்டும்பேச்சு வார்த் தையை தொடங்க உதவ வேண்டும்என குரேஷி கோரிக்கை விடுத்ததாக கூற ப்படுகிறது. ஆனால், குரேஷி யின் இந்த கோரிக்கையை அமெரிக்கா மறுத்து விட்டது.

ஏற்கனவே, இந்தியா - பாகிஸ்தான் பிரச்சினையில் மூன்றாம் நாடுகள் தலையீடு தேவையில்லை என இந்தியா பலமுறை கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

இலங்கையில் மீண்டும் இனக்கலவரம் தமிழ் - முஸ்லிம் தலைவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்

கூட்டு எதிரணி கூறுகிறது

(கொழும்பு)

இலங்கையில் மீண்டு மொரு இனக்கலவரத்தை ஏற்படுத்துவதற்கு சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க தெரி வித்தார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற் பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பொறளை என். எம். பெரேரா நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க ஊடக வியலாளர் சந்திப்பில் கலந் துகொண்டு கருத்துத் தெரி விக்கையிலேயே மேற்கண் டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் மீண்டுமொரு இனக்கலவரத்தை ஏற்படுத் துவதற்கு சூழ்ச்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது. அது குறித்து மக்கள் அவதானத் துடன் இருந்துகொள்ள வேண்டும்.

மேலும் பாராளுமன்றத் தில் அங்கம் வகிக்கும் தமிழ், முஸ்லிம் உறுப்பினர் கள் உட்பட அனைவரின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும்.

அத்துடன் அளுத்கம கல வரம் தொடர்பில் உடனடி யாக ஆணைக்குழு அமை த்து சுயாதீன விசாரணை மேற்கொள்ள வேண்டும்" எனக் கூட்டு எதிர்க்கட்சி அர சாங்கத்தைக் கோரியுள்ள தென அவர் மேலும் தெரி வித்தார். (இ-7)

ரோபோ தொழில்நுட்பத்துடனான களஞ்சியம் விரைவில் இலங்கையில்

அமைச்சர் விஜித் விஜயமுனி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நோர்வேயில் காணப்ப டும் ரோபோ தொழில் நுட் பத்துடன் கூடிய களஞ்சிய மொன்றை நிர்மாணிப்பதற் கான பின்புலம் உருவாகி யுள்ளதாக கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவி ருத்தி மற்றும் கிராமிய அபி விருத்தி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா சுட்டிக் காட்டினார்.

நோர்வே நாட்டுக்கான தனது உத்தியோகபூர்வ விஜ யத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிர மசிங்க ஓஸ்லோ நகர எக்ஸ் எக்ஸ் எல் (XXL) களஞ்சிய வளாகத்தில் ரொபோ தொழில் நுட்பம் மூலம் செயற்படுத் தப்படும் களஞ்சிய நடவடிக் கைகளை கடந்த புதன் கிழமை பார்வையிட்டார்.

எலிமன்ட் லொஜிக்ஸ் மற்றும் டிக்ரி (TIQRI) ஆகிய தொழில்நுட்ப நிறுவனங்க ளின் வழிகாட்டலுடன் இந்த ரோபோ தொழில்நுட்பச்செயற் பாடுகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுவதுடன், இதனூடாக மிகவும் விரை வாகவும் வினைத்திறன் மிக்க வகையிலும் களஞ் சியப்படுத்துவதற்கும் அவற் றைப் பொதியிட்டு மீண்டும் கப்பலேற்றுவதற்குமான சந் தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

ஆடைகள், ஏனைய தயா ரிப்புகள், மீன்கள், மரக்கறிகள், பழங்கள் என்பவற்றையும் இவ் வாறு களஞ்சியப்படுத்தவும் பொதியிடவும் முடியும் என இதன்போது பிரதமருக்கு எடுத்துக் காட்டப்பட்டது.

மீன்பிடித்துறையின் அபி விருத்திக்கு இவ்வாறான களஞ்சியங்களை நிறுவு வது தொடர்பாக ஏற்கனவே அடிப்படைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இந்நிலையிலேயே இந்த நிறுவனங்களுடன் இணை ந்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் இலங்கையிலும் இவ் வாறான ரோபோ தொழில்நுட் பத்துடன் கூடிய களஞ்சிய மொன்றை நிர்மாணிப்பதற் கான பின்புலம் உருவாகியுள்ள தாக கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி மற்றும் கிராமிய அபிவிருத்தி அமை ச்சர் விஜித் விஜயமுனி சொய்சா சுட்டிக் காட்டினார்.

இந்த நிகழ்வில் பேராசி ரியர் மைத்திரீ விக்கிரம சிங்க, பாராளுமன்ற உறு ப்பினர்களான காவிந்த ஜெய வர்த்தன, ஹேஷா விதா னகே உட்பட இலங்கைப் பிரதிநிதிகள் இந்தக் கண் காணிப்பு விஜயத்தில் கல ந்துகொண்டனர். (இ-7)

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சுவிஸ் தூதுவர் இடையே சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான சுவிட் சர்லாந்து தூதுவர் ஹான்ஸ் பீற்றர் மொக் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவை சந்தித்து கலந்துரையாடியுள் ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இச்சந் திப்பு இடம்பெற்றது.

இந்நிலையில் குறித்த சந்திப்பின் போது, சுவிஸ் தூதரகப் பாதுகாப்பு ஆலோ சகரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

இன்று ஒரு தகவல்

புகார் செய்யும் முன்

பொலிஸாரிடம் செய்யப்படும் புகார் களைப் பற்றி நான் இங்கே சொல்லப் போவதில்லை.

ஒரு வீட்டு வாசலில் காவல்காரர் ஒரு வரைச் சற்றே அவமரியாதையா கப் பேசிவிட்டார். வந்தவருக்குக் கோபம். வீட்டு க்காரரிடம் போய் ஏகமாய்ப் புகார் செய்ய காவல்காரரின் சீட்டு அன்றே கிழிக்கப் பட்டது.

நம்மால் உருவாக்கித் தரமுடியாத ஒரு வேலையை ஒருவரிடமிருந்து பறிப்பா னேன்? அவரது வேலை பறிபோகும ளவு அது அவ்வளவு பெரிய கௌரவப் பிரச்சினையா என்ன?

வாகனத்தில் முழு டாங்க் பெற்றோல் பிடிக்கச் சொன்னார் வாடிக்கையா ளர். பெற்றோல் பிடித்த பையன் கொஞ் சம் வேடிக்கை பார்த்த காரணத்தால் கீழே சிந்தி விட்டான். ஈரைப் பேனாக்கி பேனைப் பெருமாளாக்கும் சுபாவமுள்ள அந்த வாடிக்கையாளர் பையனின் வேலை போகுமளவிற்கு விடயத்தை ஊதி விட்டார்.

இந்த இரு சந்தர்ப்பங்களிலுமே வேலை பறிபோகுமளவு நடந்து கொண்டிராமல் எச்சரிக்கை செய்து விட்டுவிடுங்கள் என்கிற அளவில் புகார் செய்து நிறுத் தியிருக்கலாம். தங்களுடைய செல்வா க்கை இப்படித் தானா? சீரழிக்க ஒருவர் பயன்படுத்த வேண்டும்.

புகார் செய்யும் முன் கவனிக்க வேண் டிய விடயங்கள் சில உண்டு. முதலாவது அந்தப் புகாரில் மிகைப் படுத்தல் இல் லாத உண்மைகள் கலந் திருக்கின் றனவா என்பது.

இரண்டாவது நல்லது நடக்க வேண் டும் என்கிற நோக்கம் தான் எனக்கு முக்கியம் என்பது மற்றவர்களுக்கு உணர்த்தப்பட வேண்டும்.

அது உணர்ச்சிபூர்வமான புகார் அல்ல. அது அறிவு சார்ந்த நிதான மான மன நிலையுடன் செய்யப்பட்டது தான் என் பதைத் தங்களுக்குத் தாங் களே ஒரு முறைக்குப் பல முறை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்பது மூன்றாவது நிபந்தனை.

யார் அந்தச் சம்பவத்தைக் கேள் விப் பட நேர்ந்தாலும் புகார் செய்த வரின் பக்கமே அசைக்க முடியாத நியாயம் இருப்பதாக நம்ப இடமிருக்க வேண்டும். இரு பக்கமும் தவறு இருப் பதாக பிறர் நினைத்தால் அந்தப் புகார் ஓர் அர்த்த மற்ற புகாரே.

புகார் செய்யும் போது நம்முடைய தரா தரம் பற்றியும் கொஞ்சம் யோசிக்க வேண்டும். ஆற்றல் குறைவானவர்க ளுடனும் தரங்கெட்ட மனிதர்களுடனும் மோதக்கூடாது.

எல்லாவற்றிற்கும் மேலாக புகார் செய்து நாம் ஒரு விடயத்தை கிளப்பப் போக நமக்கு எதிராக வேறு புகார் புறப் பட்டு விடாமல் இருக்குமா என்பதையும் உறுதி செய்து கொள்வது மிகவும் நல்லது.

லேனா தமிழ்வாணன்

குருப்பெயர்ச்சிப் பலன்கள்

4.10.2018 முதல் 28.10.2019 வரை

வார்த்தைகளால் பிறரை வசப்படுத்தும் ஆற்றலைப் பெற்ற கடக இராசி வாசகர்களே!

சிந்திக்கும் ஆற்றலை வரவழைத்துக் கொடுக்கும் சந்திரனின் ஆதிக்கம் பெற்ற இராசியைக் கொண்டவர்கள் நீங்கள். அறிவுபூர்வமாக எதையும் சிந்தித்துச் செயற்படுத்துவீர்கள். மூளை பலம் உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். கற்பனைத் திறன் பெற்ற நீங்கள் மற்றவர்களுக்கு அற்புத ஆலோசனைகளை வழங்குவீர்கள். தெய்வ பலமும் உங்களுக்கு கைகொடுக்கும். தன்னம்பிக்கையும் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும். சந்தேகம் உங்களுக்கு உடன்பிறப்பைப் போல் இருந்தாலும் மற்றவர்களை நம்பிச் சில பொறுப்புகளை ஒப்படைக்க எளிதாக உங்கள் மனம் இடம் தராது. சந்தர்ப்பங்களைச் சாதகமாக மாற்றிக் கொள்ள வேண்டுமென்று சொல்பவர்கள் நீங்கள்.

உங்கள் வாசல் தேடி வருகிறது குருப்பெயர்ச்சி. புரட்டாதி 18 முதல் வசந்தகாலம் வரப்போகின்றது. இதுவரை அசதியிலிருந்த நீங்கள் இனி வசதியோடு வாழ வழிபிறக்கும். 4 ஆம் இடத்தில் கடந்த ஓராண்டாக சஞ்சரித்து வந்த குரு பகவான் அஷ்டாஷ்டம குரு என்ற நிலையிலிருந்து மாறி இப்பொழுது பஞ்சம ஸ்தானத்தில் அடியெடுத்து வைப்பதால் மிஞ்சும் பலன்கள் உங்களுக்கு வரப்போகின்றது. அஞ்சிய நிலை மாறும். அடுக்கடுக்காக நல்ல பலன்கள் வந்து சேரும்.

புரட்டாதி 18 இல் குரு பகவான் தன்னுடைய நட்சத்திரக் காலில் வியாழக்கிழமை அன்று பெயர்ச்சியாவதால் மிகுந்த பலம் பெற்றவராக விளங்குகின்றார். அவரது பார்வைக்கும் மிகுந்த பலன் உண்டு. சமுதாயத்தில் நல்ல அந்தஸ்தை வழங்குவார். வேலை நிரந்தரமாகும். வீடு கட்டும் யோகம் முதல் வெற்றிக்கொடி பறக்கும் யோகம் வரை, குரு பகவான் உங்களுக்கு நன்மைகளைக் கொடுப்பார்.

விருச்சிக குருவின் சஞ்சாரம்!

விருச்சிக இராசியில் சஞ்சரிக்கும் குருபகவான் 4.10.2018 முதல் 28.10.2019 வரை பஞ்சம ஸ்தானத்தில் வீற்றிருந்து பல வழிகளிலும் உங்களுக்கு நன்மைகளை வாரி வழங்கப் போகிறார். இடையில் 13.3.2019 இல் தனுசு இராசிக்கு அதிசாரமாகச் செல்கின்றார். பிறகு 10.4.2019 இல் தனுசு இராசியிலேயே வக்கிரம் பெறுகின்றார்.

மீண்டும் 19.5.2019 இல் விருச்சிக இராசியில் சஞ்சரித்து வக்கிர கதியிலேயே இருக்கின்றார். 7.8.2019 இல் விருச்சிக குரு வக்கிர நிவர்த்தியாகின்றார். 28.10.2019 இல் தனுசு இராசிக்கு முறையாகச் செல்கின்றார்.

குருப்பெயர்ச்சியின் போது 1, 9, 11 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். எனவே அஷ்டலட்சுமி கடாட்சம் உங்கள் இல்லத்திற்கு வரப்போகின்றது. மனக்கலக்கம் அகலும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

குரு பார்வை தரும் பலன்கள்!

குருப்பெயர்ச்சிக் காலத்தில் குரு பகவான் பெயர்ச்சியானவுடன் உங்கள் இராசியைப் பார்க்கின்றது. "ஐந்திலே குரு தான் வந்தால் அனைத்திலும் வெற்றிகிட்டும் வையகம் போற்றும் வாழ்வும் வளமுடன் வந்து சேரும்" என்பது முன்னோர் வாக்கு. எனவே ஜென்மத்தைக் குரு பார்க்கும்பொழுது முன்னேற்றத்தின் முதல்படிக்குச் செல்ல வாய்ப்புகள் கைகூடி வரும். தொழில் சீராக நடைபெறும். தொல்லை தந்த எதிரிகள் விலகிச் செல்வார்கள். நல்லவர்களோடு நட்புக் கிட்டும். கடந்த சில மாதங்களாக நடைபெறாமல் இருந்த கட்டடப் பணி முதல் மற்ற பணிகள் அனைத்தும் விறுவிறுப்பாக நடைபெறும் நேரமிது. குறிப்பாக பாயில் படுத்தவர்கள் கூட பம்பரமாகப் பணியாற்றும் நேரமிது.

"ஒன்பதைக் குருதான் பார்த்தால் உன்னத நிலைதான் வாய்க்கும்" என்பார். இதன் விளைவாக தந்தை வழி ஆதரவு கிடைக்கும். பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். மண், மனை வாங்கும் யோகமும் உண்டு. மங்கல நிகழ்ச்சிகள் உங்களுக்கும் நடைபெறலாம், உங்கள் உடன்பிறப்புகளுக்கும் நடைபெறலாம். பூர்வீக சொத்துப் பிரச்சினை அகலும். என்றைக்கோ வாங்கிப் போட்ட சொத்தை இப்பொழுது விற்பதன் மூலம் பெரிய தொகை ஒன்று கைக்குக் கிடைக்கும். வெளி மாநிலம் அல்லது வெளிநாடு செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும்.

"பதினொன்றை குருதான் பார்த்தால் பணத்தேவை பூர்த்தியாகும்" என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. எனவே பொருளாதார மேம்பாடு அதிகரிக்கும் நேரமிது. கடன் சுமை குறையப் புதிய வழி பிறக்கும். பழைய தொழிலைக் கொடுத்து விட்டுப் புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இதுவரை தாமதப்பட்டு வந்த பதவி உயர்வு இப்பொழுது தானாக வந்து சேரும். அந்நிய தேசம் சென்று சம்பாதிக்க வேண்டும் என்று எண்ணியவர்களுக்கு வாய்ப்புகள் கைகூடி வரும். புண்ணிய காரியங்களுக்குச் செலவிடுவீர்கள். விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர்.

உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் கேதுவும் சனியும் இணையும் நேரத்தில் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை. உறவினர் பகை உருவாகலாம். ஊர் மாற்றங்கள், இட மாற்றங்கள் தானாக வந்து சேரும். பிறருக்கு நன்மை செய்தால் கூட தீமையாகத் தெரியலாம். எதிரிகளின் தொல்லை மேலோங்கும். உத்தியோகத்தில் சக பணியாளர்களின் ஒத்துழைப்புக் குறையலாம். திசா புத்தி பலம் இழந்தவர்களுக்கு பணி நிரந்தரமாகவில்லையே என்ற கவலை மேலோங்கும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு திடீரெனப் பொறுப்புகள் மாற்றப்படலாம்.

குரு பாதசாரப் பலன்கள்!

குரு பெயர்ச்சியாகும் பொழுது தனது சுய சாரத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே வெற்றிக்கனியை எட்டிப்பிடிக்கும் நேரமிது. எதிர்பார்த்த பணவரவுகள் வந்து இடையூறுகளை அகற்றும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

நனவாக்குவீர்கள். மேற்படிப்பு படிக்க வெளிநாடு செல்ல வேண்டும் என்று விரும்பிய பிள்ளைகளுக்கு அதற்குரிய கடமைகளைச் செய்து கொடுப்பீர்கள். கட்டடப்பணியில் இருந்த தொய்வு அகலும்.

21.10.2018 முதல் 19.12.2018 வரை அனுச நட்சத்திரக்காலில் குரு சஞ்சரிக்கின்றார். சனி சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது எந்தக் காரியத்தையும் உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. நண்பர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்துகொள்ளமாட்டார்கள். பிறரிடம் ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே திரும்பி வரலாம்.

பிறஇனத்தாரின் ஒத்துழைப்போடு தொழில் முன்னேற்றம் காண்பீர்கள். பழைய பங்குதாரர்கள் விலகலாம். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை குறையலாம். உறவில் விரிசல் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

20.12.2018 முதல் 12.3.2019 வரை மற்றும் 18.5.2019 முதல் 27.10.2019 வரை கேட்டை நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கின்றார். புதன் காலில் குரு சஞ்சரிக்கும் பொழுது புதிய திருப்பங்கள் பலவும் உருவாகும்.

பயணத்தால் பலன் கிடைக்கும். பாகப்பிரிவினைகளில் இருந்த சிக்கல்கள் அகலும். நீதிமன்ற வழக்குகள் சாதகமாக முடியும். புதிய வாகனங்கள் வாங்க வேண்டுமென்ற ஆவல் நிறைவேறும்.

குருவின் வக்கிர காலம்!

இந்தக் குருப் பெயர்ச்சிக் காலத்தில் விருச்சிக இராசியிலும் தனுசு இராசியிலும் குரு வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலத்தில் அடுக்கடுக்காக பிரச்சினைகள் வந்து சேரலாம். அருகில் இருப்பவர்கள் வீண் பழிகள் சுமத்தலாம். கோபத்தைக் குறைத்துக்கொண்டு செயற்படுவது நல்லது. குழப்பங்களில் இருந்து விடுபட, சான்றோர்கள் மற்றும் அருளாளர்களின் ஆலோசனை கைகொடுக்கும். கொள்கைப் பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்வது நல்லது. வியாபார விரோதங்களை வளர்த்துக் கொள்ள வேண்டாம். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வதன் மூலம் பிரச்சினைகள் குறையும்.

செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!

உங்கள் இராசிநாதன் சந்திரன் என்பதால் திங்கள் தோறும் தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபாடு செய்வதோடு சதுர்த்தி விரதமிருந்து விநாயகரையும் வழிபடவும். புதுக்கோட்டை மாவட்டம் பில்லமங்கலத்தில் உள்ள மகிஷாசுரமர்த்தினியின் அவதாரமான பொன்னழகியம்மனை வழிபட்டு எந்த நாளையும் இனிய நாளாக அமைத்துக் கொள்ளுங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

கடக இராசியில் பிறந்த பெண்களுக்கு, இந்த குருப்பெயர்ச்சி நன்மை தரும் விதத்திலேயே அமையும். கல்யாணக் கனவு நனவாகும்.

பஞ்சம ஸ்தானத்தில் குரு பார்வை! நெஞ்சம் மகிழும் வாழ்வமையும்!

பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலும் பெருமை கூடும். கணவன்-மனைவிக்குள் உறவு பலப்படும். பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்படும். பழைய நகைகளைக் கொடுத்து விட்டுப் பதிய நகைகளை வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளின் கல்வி முன்னேற்றமும் கல்யாண வாய்ப்பும் எதிர்பார்த்தபடியே அமையும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும் விதத்தில் சேமிப்பை உயர்த்தினாலும் சுபவிரயங்கள் அதிகரிக்க நேரிடும்.

சொத்துக்கள் உங்கள் பெயரில் வாங்கும் யோகம் உண்டு. தாய்வழி ஆதரவும் சகோதர வழி ஒத்துழைப்பும் சீராகவே இருக்கும். பணிபுரியும் பெண்களுக்கு ராகு-கேது பெயர்ச்சி காலத்தில் பணி மாற்றங்களும் ஏற்படலாம். மேலதிகாரிகளை அனுசரித்துக் கொள்வது நல்லது.

அம்பிகை வழிபாடும் குரு வழிபாடும் செய்வதோடு ராகு-கேதுக்களுக்குரிய சிறப்புப் பரிகாரங்களைச் செய்தால் செல்வ நிலையும் உயரும். செயற்பாட்டிலும் வெற்றி கிடைக்கும்.

(தொடரும்)

முருங்கைக் கீரையை அவித்து உண்ட தம்பதியினர் உண்மையில்லை என்கிறது ஜனாதிபதி ஊடகப்பிரிவு

(கொழும்பு)

அநுராதபுரம் கலேன் பிந்துனுவெவ பிரதேசத்தில் ஒரு தம்பதியினர் உணவுக்கு வழியின்றி முருங்கை கீரை அவித்து உண்பதாக ஊடகங் களில் வெளியான செய்தி யில் உண்மையில்லை என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் செய்தி சம்பந்த மாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன கவனம் செலு த்தியிருந்ததுடன். அது சம் பந்தமாக விசாரணை நட த்த.குழு ஒன்றை நியமித்து. விசாரணைக்கான உத்த ரவை பிறப்பித்திருந்தார்.

உண்மையை உறுதிப்ப டுத்தாமல் அந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

உண்மையில்லாத இந்த செய்தி வெளியாகியதன் கார ணமாக நாட்டுக்குள் ஏற்பட்ட சிக்கலான நிலைமை தொட ர்பில் கவலையடைவதாக வும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (இ-7)

32 பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மட்டுவில் மோக னதாஸ் சனசமூக நிலையத் தின் ஜரோப்பிய கிளையின் அனுசரணையில் 32 பய னாளிகளுக்கு தலா 3000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் அண் மையில் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வு சனசமூக நிலையத்தலைவர் சி.செல் வராசா தலைமையில் இடம் பெற்றது.

இதில் சாவகச்சேரி பிர தேசசபை தவிசாளர் க.வாம தேவன் மற்றும் ஜே/315 சந்திரபுரம் கிராம உத்தி யோகத்தர் எஸ்.சுபாஸன் மற்றும் ஜே/ 314 மட்டுவில் கிழக்கு கிராம உத்தியோ கத்தர் சு.உமாயோகினி ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பொருட் களை வழங்கினர். (இ)

வில்பத்து காட்டை அழித்தவர் அமைச்சர் குற்றத்தை வெளிப்படுத்தியவர் நீதிமன்றில்

ஞானசாரதேரர் புலம்பல்

(கொழும்பு)

வில்பத்து காட்டை அழித் தவர்கள் அமைச்சுப் பதவி களை வகிப்பதாகவும், அதனை வெளிப்படுத்தியவர் கள் நீதிமன்றம் நீதிமன் றமாக அலைந்து திரிவதா கவும் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

உண்மையை வெளிப் படுத்தியவர்களுக்கு இலங் கையில் இதுதான் ஏற்படும் நிலை எனவும் தேரர் சுட் டிக்காட்டினார்.

வழக்கொன்றுக்காக நேற்று முன்தினம் நீதி மன்றத்தில் ஆஜராகிவிட்டு மீண்டும் சிறைச்சாலைக்குச் செல்லும் போது ஊடகங்க ளிடம் கருத்துத் தெரிவிக்கை யிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த வழக்கு மீண்டும் எதிர்வரும் டிசெம்பர் 13 ஆம் திகதி விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்படும் எனவும் கோட்டே நீதிமன்ற நீதிபதி லங்கா ஜெயரத்ன நேற்று முன்தினம் உத்தரவு பிறப் பித்துள்ளார். (இ-7)

பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

பிறப்பு எண் 7 விதி எண் 3

கேது குரு ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் பொது அறிவும், சுய அறிவும் நிர ம்பியவர்கள். கவர்ச்சியான முக அமைப்பும் உடைய வர்கள். குறுகுறுப்பான தன்மையும் கொண்டவர் கள். ஓரளவு உயரமான தோற்றம் உடைய இவர் கள் பழைமையும், புதுமை யும் கலந்து வாழ்க்கை நடத்துவார்கள். தர்மம், நீதி போன்ற நியதிகளின் படியே வாழ்க்கை நடத்து வார்கள். அநீதியைத் தட் டிக் கேட்கக் கூடியவர்கள். சமூக வளர்ச்சிப் பணிக ளில் ஆர்வமுடையவர்கள். அனைத்துத் துறைகளைப் பற்றியும் நன்கு ஆராய்ச்சி செய்வார்கள். தன்னுடைய இரகசியத்தைப் பற்றி ஒரு போதும் வெளியில் காட் டிக் கொள்ளவே மாட்டார்கள்.

மிகவும் திறமைசாலி கள். வசீகரமான முகம் உடையவர்கள். ஓரளவு உயரம் உடையவர்கள். மேலேறிய நெற்றியும், கூர் மையான பார்வையும் உடையவர்கள். இறை பக் தியும் கலையார்வமும் மிக்கவர்கள். முன்கோபம் அதிகம். நல்ல நண்பர்களை வஞ்சிப்பார்கள். பிறர் தன் னைவிடவும் முன்னேறி விடக் கூடாது என்பதில் மிகவும் தீவிரமாக இருப் பார்கள். அன்புடன் பழகு வது போலக் காட்டிக் கொள்வார்கள். சிறந்த நடி கர்கள். கற்பனையில் மிதப் பார்கள். ஆழ்ந்த சிந்தனை யிருக்கும். அதிகமான சிந்தனை வயப்பட்ட இவர் கள், செய்யும் ஒவ்வொரு செயலும் சமுதாயத்தில் நீடித்து இருக்க வேண்டு மென்று எண்ணுவார்கள். சிலருடன் நகமும் சதையும் போல நட்பு வைத்துக் கொள்வார்கள். முன் கோபி களான இவர்கள் யார் தவறு செய்தாலும் தட்டிக் கேட்பார்கள். சுட்டிக்கா ட்டிப் பேசுவார்கள். தனி மையை விரும்புவார்கள்.

தியானம், மந்திரம், யோகம், அஷ்டமாசித்துக்கள் கைவல் யமாகும். தியானமே இவர் களின் மனதைப் பெரிதும் கவர்ந்திழுக்கும் தன்னு டைய இன்பங்கள், வெற்றி, தோல்விகளைப் பற்றி யாரிடமும் வெளிப்படை யாகக் கூறாமல் மனதிற்குள் போட்டுக் குழப்பிக் கொள் வார்கள். ஐம்புலன்களையும் அடக்கியாளும் திறமை படைத்தவர்கள். இவர்களில் சிலர் இளமை முதலே கலை களில் தேர்ச்சியடைவார் கள். தீவிரமான கலை ஆர் வத்துடன், ஆன்மீக நெறி யையும் பின்பற்றி நடப்பார் கள். பலவிதமான நண்பர் களைப்பெற்று வளமுடன் வாழ்வார்கள். இன்னும் சிலர் கம்பியூட்டர், விஞ் ஞானம், இரசாயனம் போன்ற துறைகளில் சிறந்து விளங் குவார்கள். தேபக்தி மிக்க வர்கள். கதை, காவியம், ஓவியம், சிற்பம், நடனம், நாட்டியம், ஆடல், பாடல், நடிப்பு, இயக்கம் என்று அனைத்திலும் சிறந்து விளங் குவார்கள். பேச்சும், எழுத் தும் பெரும்பணம் ஈட்டும். திரைப்படத்துறையில் கொடி கட்டிப் பறப்பார்கள். சினி மாத் துறையில் பல அரிய சதனைகள் செய்வார்கள். உலக நாயகர்களாக வலம் வருவார்கள்.

இரகசியக் கலைகள் கற்றவர்கள். இளமை முதலே தாய் மீதும், தாய் நாட்டின் மீதும் மிகுந்த பற்றுடை யவர்கள். அரசியலில் புரட் சிகள் செய்வார்கள். தேச நலனுக்காக எந்தவொரு தியாகத்தையும் செய்வார் கள். அரசியல் நுட்பங்கள் தெரிந்தவர்கள். இராஜ குண ங்கள் இருக்கும். வலுவான பெரிய கட்சிகளில் சேரா மல் வலுவிழந்த சிறிய



எதிர்க்கட்சிகளில் சேர்ந்து இவர்களின் பேச்சுத் திற மையால் வலுமிக்க கட்சி யாக மாற்றி விடுவார்கள். புதிய கட்சிகள், இயக்கங் கள் ஆரம்பித்து பெரிய சாதனைகள் செய்வார்கள். எதையும் எதிர்த்தே வாதம் செய்வார்கள். சூழ்ச்சியான பேச்சுக்கள் இருக்கும். எதையும் எதிர்ப்பதே இவர் களுக்கு உற்சாகமாக இருக் கும். நியாயமான வெற்றி களே இவர்களுக்குப் பிடிக் கும். துன்பம் நேரும்போது தீவிரவாதத்துடன் செயற் படுவார்கள். இவர்கள் அடை யும் படிப்படியான வெற்றி களைக் கண்டு மற்றவர்கள் பொறாமைப்படுவார்கள்.

கலை, காவியங்களில் சிறப் படைவார்கள். குருவருள் மிகுந்து காணப்படும்.

முன்னோர்களைப் பின் பற்றி நடப்பார்கள். கடின மான உழைப்பாளிகள் நாண யம் மிக்கவர்கள். கூர்மை யான அறிவும், உழைப்பும் இயற்கையிலேயே பெற்ற வர்கள். எக்காரியத்திலும் நிதானமாகவே செயற்பட்டு வெற்றி பெறுவார்கள். அமைதியை விரும்புவார் கள். இவர்கள் மேல் உள்ள நம்பிக்கையில் பலபேர் தங் களுடைய உடைமைகளை இவர்களிடம் ஒப்படைப் பார்கள். தனக்கு ஏற்பட்டு ள்ள சிக்கல்களை வெளியில் காட்டிக் கொள்ளாமல் மறைத்து வாழ்வார்கள். இவர்களில் சிலபேர் எப் போதும் எதையாவது எழு திக் கொண்டேயிருப்பார் கள். பிறருடைய உண்மை யான மனநிலையை அறி ந்த பின்னரே நட்பு வைத் துக் கொள்வார்கள். எதை யும் வருமுன் யூகிக்கக் கூடியவர்கள். நேர்மையை ஆதரிப்பார்கள். நண்பர் களிடம் கருத்து வேறுபா டுகள் தோன்றி மறைந்து விடும். மக்கள் மத்தியில் புதுப்புதுக் கருத்துக்களைப் புகுத்தக் கூடிய இவர்கள் ஆராய்ச்சி அறிவுடையவர் கள்.

மிக எளிதில் எல்லாத் துறைகளையும், தொழிலை யும் கற்றுக் கொள்வார்கள். நல்ல வாழ்க்கைத் துணை அமையும். இளமைக் காதலை நினைத்து வருந்துவார்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்கள். மனதில் தான் ஏதோ பெரிய மனிதர் என்ற நினைப்புகள் இருக்கும். மேதாவிகள் போலக் காட்டிப் கொள் வார்கள். பேச்சு இராஜ தோரணையில் இருக்கும். இவர்களின் நடிப்பு மற்ற வர்களிடம் செல்லாது. சில ருக்குப் பெண்களிடம் பழ குவதால் சிக்கல்கள் உண் டாகும். ஆடம்பரமாகக் காட்சியளிக்கும் இவர்கள் திடீரென்று எளிமையாகக் காட்சியளிப்பார்கள்.

அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்

3,12,21,30,1, 10, 19, 28, 5,14,23.

துரதிர்ஷ்ட திகதிகள்

6,15,24,8,17,26,7,16,25.

அதிர்ஷ்ட நிறங்கள்

மஞ்சள், வெளிர்நீலம், ரோஸ், ஒரேஞ், சத்தரிப்பு நிறம்.

துரதிர்ஷ்ட நிறங்கள்

கறுப்பு, சிவப்பு, இரு ண்ட நிறங்கள்.

அதிர்ஷ்ட இரத்தினங்கள்

முத்து, ஓபல், வைடூரி யம், கனகபுஷ்பராகம், தங்க புஷ்பராகம், எமி திஸ்ட்.

(தொடரும்....)

இலங்கையில் தமிழர்

ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

62

வாஸ்கொடகாமா கிறிஸ்தோபர் கொலம்பஸ்

பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தமிழ் மக்கள் வரலாற்றில் ஒரு பெரும் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. தென்னாசியாவில் தமிழருடைய அயலாராக வாழ்ந்த சிங்கள மக்கள், கேரள மக்கள், கன்னட மக்கள், தெலுங்கு மக்கள் ஆகியோரைப் போன்று தமிழ் மக்களும் ஐரோப்பியர் வருகையால் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இதுவரை காலமும், பெரும்பாலும் மேற்கூறிய அயலாருடன் கொண்டிருந்த உறவுகளே தமிழ் மக்களின் சமயத்தையும் பண்பாட்டையும் சமூகத்தையும் பொருளியலையும் அரசியலையும் பலவகையாலும் நெறிப்படுத்தி நின்றன.

இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை ஒருபுறம் சிங்கள அரசுடனும் மறுபுறம் தமிழ்நாட்டு மற்றும் கேரள அரசுகளுடனும் கொண்டிருந்த தொடர்புகள் பதின்மூன்றாம், பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டின் வரலாற்றுப் போக்கினை நிர்ணயித்தன.

ஆனால் பதினாறாம் நூற்றாண்டு தொடங்கியபோது, திடீரெனப் புதிய தாக்கங்கள் தமிழர் வரலாற்றின் போக்கைத் திசை திருப்பின. உண்மையில் உலக வரலாற்றிலேயே அக்காலகட்டம் ஒரு திருப்பு முனையாக அமைகின்றது.

இதனால் பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து ஒரு புதிய யுகம், சிறப்பாக நவீனயுகம் தொடங்குவதாகப் பலர் கருதுவர். இதற்கெல்லாம் காரணமாகப் பதினைந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஒரு முக்கிய சம்பவம் ஐரோப்பாவில் நடைபெற்றது.

ஐரோப்பாவில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக மிக உன்னதமான, செல்வம் நிறைந்த பெரு நகராகவும், உரோமப் பேரரசின் தலைநகராகவும் விளங்கிய கொன்ஸ்தாந்திநோபிள் (இன்றைய இஸ்தான்புல்), 1453 மே 29 இல் துருக்கியப் படைகளால் கைப்பற்றப்பட்டது.

அந்நிகழ்ச்சி ஒரு நகரின் வீழ்ச்சியாக மட்டும் அமையாது ஐரோப்பாவிலும், அப்பாலும் பல்வகைப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சியாகக் காணப்பட்டது. ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு மேலாக ஐரோப்பிய வர்த்தகர்கள் (யவனர் முதல் பிற்பட்ட இத்தாலியர் வரை) இந்தியாவுடன் நடத்திய வர்த்தகம் கொன்ஸ்தாந்திநோபிள் வீழ்ச்சி அடைந்ததன் விளைவாகத் தடைப்பட்டது.

இந்தியாவிலிருந்து வாசனைப் பொருட்களைப் பெற்றுச்சென்று பெருஞ் செல்வத்தை அனுபவித்த ஐரோப்பிய வர்த்தகர்கள் துருக்கியப் பேரரசைக் கடந்து இந்தியாவுக்குச் செல்ல முடியவில்லை. ஐரோப்பிய வர்த்தகர்கள் நடத்திய வர்த்தகம் இஸ்லாமிய வர்த்தகர்கைக்கு மாறியது.

இஸ்லாமிய வர்த்தகர்கள் இந்திய வாசனைப் பொருட்களை எடுத்துச் சென்று பெரும் இலாபத்தை ஈட்டினர். இதுவரை இவ் வர்த்தகத்தால் செல்வத்தை ஈட்டிய ஐரோப்பிய வர்த்தகர்கள், சிறப்பாக இத்தாலிய வர்த்தகர்கள், பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இந்தியாவுக்குச் செல்ல வேறொரு கடல் மார்க்கத்தைக் கண்டுபிடிக்க முடியும் என்ற இவர்கள் நம்பிக்கையுடன் இவர்கள் அத்திலாந்திக் சமுத்திரக் கரையை நாடினர்.

அத்திலாந்திக் சமுத்திரத்தின் கரையோர நாடுகளாகிய ஸ்பானியாவும், போர்த்துக்கல்லும் இந்தியாவுக்குச் செல்லப் புதிய வழியொன்றைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் முன்னின்று உழைத்த நாடுகள். இதன் விளைவாக, 1492 இல் முதன்முறையாக ஐரோப்பிய மாலுமிகள் கொலம்பஸ் தலைமையில் அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து அமெரிக்கப் பிரதேசங்களைக் கண்டுபிடிக்க உதவினர்.

கொலம்பஸ் அவ்விடங்களை முதலில் இந்தியா என எண்ணினார். போர்த்துக்கீச மாலுமிகள் ஆபிரிக்க கரை வழியாக இந்தியாவுக்குச் செல்ல எடுத்த முயற்சிகள் இறுதியில் வாஸ்கொடகாமா தலைமையில் 1498 இல் ஒரு புதிய வழியைக் கண்டுபிடிக்க உதவின. கேரளத் துறையாகிய கள்ளிக் கோட்டையில் வாஸ்கொடகாமா (Vascoda Gama) வந்திறங்கியதுடன் ஒரு புதிய யுகம் உதயமாகியது.

வர்த்தகத்தைப் பிரதான நோக்கமாகவும் கூடவே கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் நோக்குடனும் போர்த்துக்கீசர் ஆசிய நாடுகளை நோக்கி கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் தமது கடல் மார்க்கப் பிரயாணத்தை மேற்கொண்டனர். இம் முயற்சியில் பத்தலமேயு டயஸ் (Bartolomeu Dias) என்ற போர்த்துக்கீசன் முதலில் 1487களில் தென்னாபிரிக்காவில் உள்ள நன் நம்பிக்கை முனையை அடைந்து (Cape of Good Hope), மீண்டும் போர்த்துக்கல் திரும்பினான்.

அவனைத் தொடர்ந்து, தேசப்பற்றும், எதற்கும் அஞ்சாத தீவிர குணமும் உடைய வாஸ்கொடகாமா என்னும் போர்த்துக்கீச இராணுவத்தளபதி ஆசிய நாடுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியின் விளைவாக 1498இல் இந்தியாவிலுள்ள கள்ளிக் கோட்டை (Calicut) என்ற மேற்குத் துறைமுகத்தில் 180ற்கும் அதிகமான போர்வீரர்களுடன் மூன்று கப்பல்களில் வந்து இறங்கினான்.

இந்நிகழ்வு, ஐரோப்பாவிற்கும் ஆசிய நாடுகளுக்கும் இடையேயான கடல்வழிப் பாதைகளைத் திறந்து விட்டதோடு ஆசியாவில் குறிப்பாக இந்தியாவில் போர்த்துகீசரின் ஆதிக்கப் படர்ச்சியின் தொடக்கமாகவும் அமைந்தது.

மேலும், போர்த்துக்கீசரின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு மிக முக்கியம் வாய்ந்த இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையமான இலங்கை, குறிப்பாக மேற்குக் கரைத் துறைமுகமான கோட்டை, மிக முக்கியமாகக் காணப்பட்டது.

அத்தோடு இலங்கையில் அளவுக் கதிகமாகக் காணப்பட்ட வாசனைத் திரவியமான கறுவா மற்றும் மிளகு, இஞ்சி போன்றவைகளும், முத்து, மாணிக்கம் போன்ற விலை மதிப்பற்ற பொருட்களும், காட்டு யானைகளும் போர்த்துக்கீசரை இலங்கைக்கு ஈர்த்த காரணிகளுள் முக்கியமானவையாகும்.

அத்தோடு போர்த்துக்கீசரின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு கள்ளிக் கோட்டையில் தடையாக இருந்த முஸ்லிம் வர்த்தகர்கள் கொழும்பில் தமது பலமான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

போர்த்துக்கீசர், இம் முஸ்லிம் வர்த்தகப் போட்டியாளர்களைத் தடுத்தி நிறுத்திடக் கோட்டை தமது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் எனத் தீர்மானித்தனர். இதன் விளைவாக லோறன்சோ டீ அம்மெய்டா (Lourenco. D. Almeida) 1506 இல் கோட்டைத் துறை முகத்தை அடைந்தான்.

போர்த்துக்கீசர் முதன்முதலில் இலங்கைக்கு வந்தது 1505 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதி எனப் பல வரலாற்று ஆசிரியர்கள் குறப்பிட்டுள்ளனர். மூலாதாரங்களின் அடிப்படையில் ஆய்வு செய்யும்போது 1056ஆம் ஆண்டு நடுப் பகுதியில் தான் போர்த்துக்கீசர் இலங்கைக்கு வந்தார்கள் என அறிய முடிகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கோட்டைக்குவந்த போர்த்துக்கீசர் அங்குள்ள வாசனைத் திரவியங்களையும் விலைமதிப்பற்ற மாணிக்கக்கற்களையும் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். உடனடியாகக் கோட்டை மன்னன் விஜயபாகுவுடன் வர்த்தக உடன்படிக்கை செய்ய முனைந்தனர். கோட்டை மன்னன், போர்த்துக்கீசரின் பலம் பொருந்திய படை பலத்தைக் கண்டும் கண்டி மன்னனின் எதிர்ப்பிலிருந்து தன்னைக் காப்பாற்றும் நோக்கம் கொண்டும் உடன்படிக்கைக்கு இணங்கியிருக்க வேண்டும். 150 பஹாஸ் (Bahars - பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில் கிழக்கில் எங்கும் பயன்படுத்தப்பட்ட நிறை அளவு அலகு பொதுவாக 400 லிருந்து 500 இறாத்தல்) கறுவா வருடந்தோறும் கோட்டை மன்னன், அல்மெய்டாவுக்கு தருவதாக உடன்படிக்கை செய்யப்பட்டது. (தொடரும்)

> “இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை ஒரு புறம் சிங்கள அரசுடனும் மறுபுறம் தமிழ்நாட்டு மற்றும் கேரள அரசுகளுடனும் கொண்டிருந்த தொடர்புகள் பதின்மூன்றாம், பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டின் வரலாற்றுப் போக்கினை நிர்ணயித்தன. ஆனால் பதினாறாம் நூற்றாண்டு தொடங்கியபோது, திடீரெனப் புதிய தாக்கங்கள் தமிழர் வரலாற்றின் போக்கைத் திசை திருப்பின” 99

போர்த்துக்கீசர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களின் அழிவும் (கி.பி. 1505-கி.பி. 1658)

நாளொன்றுக்கு 105 விபத்துக்கள்

8 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் நாளாந்தம் வாகன விபத்துக்களால் 7 முதல் 8 பேர் வரை உயிரிழப்பதாக போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் பாதுகாப்புப் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நாளாந்தம் பதிவாகும் 100 முதல் 105 வரையிலான விபத்துக்களிலேயே இந்த உயிரிழப்புக்கள் பதிவாவதாகவும் மேலும் 20 பேர் வரையில் நாளாந்தம் விபத்துக்களால் காயமடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரச நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சில் நேற்று முன்தினம் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையில் நடைபெற்ற விஷேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை வெளிப்படுத்தினார்.

நாட்டில் நாளாந்தம் 100 முதல் 105 வாகன விபத்துச் சம்பவங்கள் பதிவாகின்றன. அதில் ஒரு நாளைக்கு சராசரியாக 7 முதல் 8 பேர் உயிரிழக்கின்றனர். 20 பேர் வரையில் காயமடைகின்றனர். அப்படி பார்க்கும் போது வருடத்துக்கு வாகன விபத்துக்களால் சுமார் 3000 பேருக்கும் அதிகமானோர் உயிரிழக்கின்றனர்.

ஒரு உயிரிழப்பை ஏற்படுத்தும் விபத்துச் சம்பவம் ஒன்று தொடர்பிலான முழுமையான விசாரணைகளுக்கு அரசாங்கம் ஒரு மில்லியன் ரூபாவை செலவழிக்கின்றது. அப்படியானால் வருடத்துக்கு 3000 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி விபத்துக்களின் பின்னரான நடவடிக்கைகளுக்காக செலவிடப்படுகின்றது. விசாரணையாளர்கள், நீதி மன்ற விசாரணை, அரச இரசாயன பகுப்பாய்வு என இதில் செலவுகள் உள்ளடங்கும்.

இவ்விபத்துக்களை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளோம். தண்டப்பணம் அறவிடும் முறைமையை இலத்திரனியல் முறையில் செயற்படுத்தவும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். கடனட்டைகள், தொலைபேசிகள் ஊடாக தண்டப்பணம் அறவிடும் வகையில் இந்நடவடிக்கையினை நாம் திட்டமிட்டுள்ளோம்.

அதேபோன்று சி.சி.ரி.விகள் ஊடாக அவதானித்து போக்குவரத்து குற்றங்களை முன்னெடுப்போர் தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பது குறித்தும், போக்கு வரத்து குற்றங்களில் ஈடுபடுவோரின் சாரதி அனுமதிப்பத்திரத்தில் புள்ளி முறையில் செயற்படுவது குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

பேர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனத்திடம் 25லட்சம் பெற்ற சட்டத்தரணிகள் சங்கம்

பிரதியமைச்சர் ரஞ்சன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அர்ஜுன் அலோசியஸின் பேர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனத்திடமிருந்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் 25 இலட்சம் ரூபாயை பெற்றுக்கொண்டுள்ளதாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் செய்திருந்த முறைப்பாடு ஒன்று தொடர்பில் நேற்று முன்தினம் வாக்கு மூலம் அளிப்பதற்காக சென்றிருந்த போது ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் பேர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனத்திடம் இருந்து 25 இலட்சம் ரூபாயை பெற்றுள்ளது. நீதிமன்றங்களும் சட்டத்தரணிகளும் திருடர்களைப் பிடிக்க உள்ளனர். எனினும் திருடர்களை பிடிக்க வேண்டிய சட்டத்தரணிகள் சங்கம் பேர்பெச் சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனத்திடம் கடந்த 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 இலட்சம் ரூபாயைப் பெற்றுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி எமது நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. மத்திய வங்கியின் பிணை முறி மோசடி 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி, மார்ச் மாதமளவில் நடந்துள்ளது.

பேர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனம் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள நிறுவனம் என்பது முழு உலகத்திற்கும் தெரியும். அந்த நிறுவனத்திடம் இருந்து சாதாரணமாக ஒருவர் பணத்தைப் பெற்றிருந்தால், அவர்களை மன்னித்து இருக்கலாம்.

எனினும் இலங்கையில் பழுத்த அரிவாளிகளை கொண்ட இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், அலோசியஸ் உள்ளிட்ட குழுவினரிடம் 25 இலட்சம் ரூபாயை பெற்று ள்ளது.

இந்த சம்பவம் குறித்து நான் தகவல் வெளியிட்டதும் அந்த பணத்தை திருப்பி கொடுக்கத்தயார் என சட்டத்தரணிகள் சங்கம் கூறியது. எனினும் இன்னும் திருப்பிக்கொடுக்கவுமில்லை.

எவருக்கு மன்னிப்பு வழங்கினாலும் சட்டத்தரணிகள் சங்கத்தை மன்னிக்க முடியாது எனவும் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார். (இ-7)

இளைஞன் மீது துப்பாக்கிச்சூடு; இரு பெண்கள் உட்பட 11 பேர் கைது

(பேருவளை)

பேருவளை பன்னில பகுதியில் இளைஞன் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு பெண்கள் உட்பட 11 பேரை கைதுசெய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கான முங்ஹேன பகுதியைச் சேர்ந்த 26 வயதான இளைஞர் பயணித்த மோட்டார் சைக்கிளைத் திருடுவதற்காக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்துக்கு பயன்படுத்தப்பட்ட ரி56 ரக துப்பாக்கி, 27 தோட்டாக்களுடன் கூடிய மகசின், துப்பாக்கிச் சூட்டை நடத்த வந்த கார் மற்றும் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் என்பன சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1522

Search for people, places and things

மூர்த்தி

ஒருவேளை உணவிற்காகத்தான்
இவ்வளவு போராட்டம்

உணவை வீண் செய்யும் முன் யோசியுங்கள்...
பசியின் வலி உங்களுக்குப் புரியும்

குமரன்

ஒரு கிலோ தேனை பெறுவதற்காக தேனீக்கள்
நான்கு மில்லியன் பூக்களை சந்திக்கிறது

அற்ப மனிதன் ஒரு தோல்விக்கே
துவண்டு விடுகிறான்...

கதிர்

தூரத்தில இருந்து பார்க்க 5000 ரூபா
மாதிரி இருந்துச்சு

எடுக்கலாம்னு வேகமா பக்கத்துல
போய் பார்த்த லக்ஸ் சோப் கவர்

ஜீவா

சொந்தக்காரங்களை
பேஸ்புக்ல வச்சிக்கிறதும்

சொந்த செலவில சூனியம் வச்சிக்கிறதும்
ஒண்ணு... என்னமா போட்டுக் குடுக்கிறாங்க

கண்ணன்

உண்மையைச் சொன்னா நிறைய
கறுக்குக் கேள்வி கேட்கிறாங்க

ஆனா பொய் சொன்னா எந்தக் கேள்வியும்
கேட்காம அப்படியே நம்புறாங்க...
என்னடா உலகம் இது

பாண்டியன்

ஒருவன் எப்படி இருந்தாலும் அவனைக்
குறைச்சு எடை போடாத



ஒரே இடம் " வெயிட் மெஷின்" தான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

திரைப்படத் துறையின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் தாமதமின்றி நடைமுறைப்படுத்தப்படும்

ஜனாதிபதி மைத்திரி வாக்குறுதி

(கொழும்பு)

திரைப்படத் துறையையும் கலைஞர்களையும் பாதுகாப்பதற்கு தேவையான தீர்மானங்களை மேற்கொள்ள அரசாங்கம் ஒருபோதும் பின்னிற்கப் போவதில்லை என்றும் அத்துறை சார்ந்த சகலரது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கருத்திற் கொண்டு சினிமாத்துறையின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் தாமதமின்றி நடைமுறைப்படுத்தப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற திரைப்படத் துறையினர் தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பான விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதேஜனாதிபதிமேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரைப்பட விநியோக நடவடிக்கைகள் தொடர்பாக

வும் இக்கலந்துரையாடலின் போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

திரைப்படங்களை காட்சிப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான சட்டங்கள் கவனத்திற் கொள்ளப்படாமையினால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும் தரமான திரைப்பட தயாரிப்புக்கும் அவற்றை காட்சிப்படுத்துவதற்கும் அரச அனுசரணை இன்றியமையாதது எனவும் இதன்போது குறிப்பிடப்பட்டது. (இ-7)

மகிழ்வூட்டும் மாலை நாளை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஸ்மார்ட் கிட்ஸ் முன்பள்ளியினால் மகிழ்வூட்டும் மாலை- 2018 எனும் நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கோண்டாவில் இராஜேஸ்வரி மஹால் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுநிலை அதிபர் அ.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வேதநாயகம் தபேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-7)

மத்தளவில் தரையிறங்கிய சீன விமானம்

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக நேற்று முன்தினம் சீனாவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்த பயணிகள் விமானங்கள் மத்தள விமான நிலையத்திற்கு திருப்பியனுப்ப விமான நிலைய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

சீனாவிலிருந்து வந்த விமானம் நேற்று முன்தினம் இரவு 09.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்க முற்பட்டபோது அசாதாரண காலநிலை காரணமாக நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் மத்தள விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளதாக மத்தள விமான நிலைய கடமை நேர பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

விமான நிலையத்திற்கு வருகை தந்த பயணிகள் விமானத்திலிருந்து வெளியேறாத நிலையில் குறித்த விமானம் மத்தள விமான நிலையத்தில் விமானத்திற்கு தேவையான எரிபொருள் ஏற்றப்பட்டு நேற்று அதிகாலை 1.10 மணியளவில் மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

விடுதலைப்புலிகள் போன்ற ஒரு அமைப்பு 100 ஆண்டுகளில் உருவாக முடியாது

பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளைப் போன்ற ஒரு அமைப்பு வடக்கில் எழுச்சி பெறுவதற்கு இன்னும் 100 ஆண்டுகளில் வாய்ப்பே இல்லை என்று சட்டம், ஒழுங்கு பிரதி அமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார். கொழும்பில்நேற்று முன்தினம் சட்டம், ஒழுங்கு அமைச்சில் நடந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில்வடக்கில்செயற்படும்ஆவா குழு தொடர்பாக, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்னாண்டோ விளக்கமளித்தார்.

'ஆவா குழுவினால் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில், நான்கு பொலிஸ் பிரிவுகளில் மாத்திரம் அது செயற்படுகிறது. இணுவில், கோப்பாய் பகுதிகளிலேயே அதிக சம்பவங்கள் இடம்பெறுகின்றன. ஆவாகுழுவினரின் வாள்வெட்டுகளால் சிறியளவிலான காயங்களே பெரும்பாலும் ஏற்பட்டுள்ளன.

வெளிநாட்டுக்குச் சென்ற தமது சகோதரர்கள் அனுப்பும் பணத்தைக் கொண்டு, தவறாக வழிநடத்தப்படும் இளைஞர்கள் சிலரே இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றனர். சிலர், மாலை வேளைகளில் மது அருந்தி

விட்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

உள் மோதல்களை அடுத்து பலரும் வெளியேறுவதால், 'ஆவா குழு படிப்படியாக சிதைந்து வருகிறது." என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி துண்டுப்பிரசுர விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இன்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ். நகரின் பிரதான பேருந்து நிலையத்திலிருந்து அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் துண்டுப்பிரசுர விநியோகம் அரசியல்கைதிகளின் விடுதலையை வலியுறுத்துகின்ற யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

அண்மைய நாட்களில், யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு விதமான போராட்டங்கள், கவனயீர்ப்பு நிகழ்வுகள், உண்ணாவிரதம் ஆகியவற்றின் மூலமாக அரசியல் கைதிகளின் உயிர்களைக் காக்க வேண்டும், அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையற்ற வகையில் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விலக்கிக்கொள்ள வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்ற இவர்களின் இன்னொரு வெகுஜனச் செயற்பாடாக இத் துண்டுப்பிரசுர இயக்கம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

ஞானசார தேரரின் விடுதலையை வலியுறுத்தி களனியில் விசேட பூஜை

(கொழும்பு)

ஆறு வருடகால கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரரின் விடுதலையை வலியுறுத்தி களனியில் நேற்று பேரணியொன்று நடத்தப்பட்டுள்ளது. அத்துடன், களனி விகாரையில் ஆசீர்வாத பூஜையும் நடத்தப்பட்டுள்ளது.

களனியில் உள்ள உத்பலவர்ன ஸ்ரீவிஷ்ணு கோயிலில் இருந்து ஆரம்பமான பேரணி, களனி ரஜ மகா விகாரைக்கு சென்று அங்கு ஆசிர்வாத பூஜை நடத்தப்பட்டுள்ளது.

பொதுபல சேனா உள்ளிட்ட மேலும் சில அமைப்புக்களின் பிரதி நிதிகளால் இந்த பேரணியும், பூஜை யும் நடத்தப்பட்டுள்ளது. (இ-7)

மாகாண தேர்தலை சந்திக்க சுதந்திர கட்சிக்கு அச்சம்

முன்னாள் முதல்வர் நஸிர் தெரிவிப்பு

(ஏறாவூர்)

மாகாணசபை தேர்தலை சந்திக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே தயக்கம் காட்டுகின்றது. ஏனைய பிரதான கட்சிகள் அனைத்தும் தயார் நிலையிலேயே இருக்கின்றன என கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் நஸிர் அஹமட் தெரிவித்தார்.

மாகாண சபை தேர்தல் காலம் கடந்து செல்வது தொடர்பாக அவரிடம் கருத்துக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள கருத்தில் நாட்டிலுள்ள பிரதான கட்சிகள் அனைத்தும் பழைய முறைமையிலேயே தேர்தலை நடத்த வேண்டும் என தம்மிடம் கோரிக்கை விடுத்து வருகின்றன எனவும் எந்நேரத்திலும் தாங்கள் தேர்தலை சந்திக்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். இந்த நிலைப்பாட்டையே குறிப்பாக சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் கொண்டுள்ளன.

எந்த நேரத்தில் தேர்தல் நடத்தப்பட்டாலும் அதனைச் சந்திக்க ஐக்கிய தேசிய கட்சி, கூட்டு எதிர்கட்சி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட முக்கிய கட்சிகள் தயார் நிலையில் உள்ளன.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியே தயக்கம் கொண்டுள்ளது. இதன் காரணமாகவே மாகாண சபை தேர்தல் காலம் கடத்தப்படுகின்றது என எண்ணத் தோன்றுகின்றது.

நாட்டில் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் தமக்கான வெற்றி வாய்ப்பு சிறப்பானதாக அமைய மாட்

டாது என்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஐயமே மாகாண சபை தேர்தல் தள்ளிப்போகக் காரணமாக அமைகின்றது என்பதை திட்டவட்டமாக கூற முடிகிறது. எது எப்படியிருப்பினும் இனியும் காலம் தாழ்த்தாது மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	கொழுகாமம்	சாவகச்சேரி	கிளிநொச்சி	மருதனார்மடம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	60	80	60	80	60
உருளைக்கிழங்கு	100	90	100	100	95
பச்சைமிளகாய்	80	75	100	140	70
தக்காளி	20	20	30	50	30
மரவள்ளிக்கிழங்கு	40	40	50	60	50
கோவா	80	60	100	100	70
கரட்	120	130	140	200	160
பூசணி	40	40	40	60	40
புடோல்	60	30	40	80	100
வாழைக்காய்	60	50	80	100	80
சின்ன வெங்காயம்	120	80	100	80	80
பெரிய வெங்காயம்	100	90	100	100	100
பாகற்காய்	160	130	120	160	180
வெண்டிக்காய்	80	40	30	80	50
கருணைக்கிழங்கு	50	60	60	80	70
பயற்றங்காய்	100	70	80	160	180
லீக்ஸ்	80	70	100	80	90
பீற்றூட்	50	60	60	60	60
கறிமிளகாய்	80	80	100	120	100
முருங்கைக்காய்	140	80	40	80	80
போஞ்சி	120	120	120	160	140
கத்தரிதம்புள்ள	40	50	60	60	40
கீரை-1பிடி	40	30	40	40	30
தேசிக்காய்	250	300	240	200	200
தேங்காய் ஒன்று	60	50	60	30-50	60
இராசவள்ளி	130	110	160	180	140
வெங்காயப்பூ	140	90	130	160	100
முள்ளங்கி	50	30	60	80	30
பொன்னாங்காணி	40	20	50	30	40
வல்லாரை	20	20	20	20	50
ஈரப்பலா	50	110	40	100	80

சிறுவர் அரங்கம்

வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2018

சோம்பேறி வானம்பாடி

கதை

ஒரு காட்டில் வானம்பாடிக் குருவி ஒன்று பாடிக்கொண்டிருந்தது. அப்போது அந்த வழியால் ஒரு விவசாயி ஒரு பெட்டி நிறையப் புழுக்களுடன் போய்க்கொண்டிருந்தான். அவனை நிறுத்திய வானம்பாடி நீ அந்தப் பெட்டியில் என்ன வைத்திருக்கிறாய்? அதைக் கொண்டு எங்கே போகிறாய்? என்று கேட்டது. அதற்கு விவசாயி 'என்னிடமுள்ள இந்தப் பெட்டியில் நிறையப் புழுக்கள் இருக்கின்றன. அவற்றை நான் சந்தையில் விற்றுவிட்டு சில இறகுகளை வாங்கப் போகிறேன்' என்று பதிலளித்தான். அதற்கு வானம்பாடி என்னிடம் நிறைய இறகுகள் இருக்கின்றன. நான் அதிலொன்றை உனக்குத் தருகிறேன். நீ அதற்குப் பெறுமதியான புழுக்களை எனக்குக் கொடு என்று கூறியது.

விவசாயியும் இறகை வாங்கிக் கொண்டு சில புழுக்களை வானம்பாடிக்குக் கொடுத்தான். அடுத்த நாளும் வானம்பாடி ஓர் இறகைக் கொடுத்துவிட்டு புழுக்களை வாங்கியது. இதனால் அதற்குப் புழுக்களைத் தேடிப் பறந்து திரியவேண்டிய தேவை இருக்கவில்லை. இறகைக் கொடுத்து புழுக்களை வாங்கி உண்டுவிட்டு ஆனந்தமாகப் பாடிக் கொண்டிருந்தது. தொடர்ந்து ஒவ்வொரு நாளும் இவ்வாறே நடந்தது. இறுதியாக வானம்பாடி தன்னிடமிருந்த அனைத்து இறகுகளையும் கொடுத்து விட்டது. இனிமேல் கொடுப்பதற்கு வானம்பாடியிடம் இறகுகள் இல்லை. அதனால் விவசாயி வானம்பாடிக்குப் புழுக்களைக் கொடுக்கவில்லை. இப்போது இரைதேடிப் பறப்பதற்கும் சிறகுகள் அற்ற வானம்பாடியால் முடியவில்லை. அது தோற்றத்திலும் அசிங்கமாகக் காட்சியளித்தது. பாடுவதையும் நிறுத்திவிட்டது. அது நாளடைவில் பசியாலும் துக்கத்தாலும் இறந்துபோய்விட்டது.

கதை கூறும் கதை

இந்தக் கதை உங்களுக்குக் கூறும் கதை என்னவென்றால், கஷ்டப்படாமல் எதையாவது பெற நினைத்தால் ஈற்றில் முடிவு இவ்வாறுதான் அமையும். சோம்பேறித்தனமாய் வாழ நினைப்பவர்களின் முடிவு சோகமாகவே அமையும்.

சில மாணவர்களுக்கு ஓர் பழக்கம் உண்டு. பரீட்சை நேரங்களில் அருகிலுள்ள மாணவர்களிடம் கேட்டு அல்லது பார்த்து எழுதுவார்கள். இவ்வாறு பார்த்து எழுதியே அதிக மதிப்பெண் பெறுவர். இதை நம்பியே படிப்பில் கவனம் செலுத்த மாட்டார்கள். இவர்கள் மீது ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் நல்ல மதிப்பு வந்துவிடும். ஆனால் இவர்களுக்கு இறுதிப் பரீட்சைகளில் (புலமைப் பரிசில், O/L அல்லது A/L) பார்த்தெழுவதற்கு வாய்ப்புக் கிடைக்காது. பரீட்சை மண்டபம் புதிதாக இருக்கும். அங்கும் இம்முயற்சியில் ஈடுபட்டால் மாட்டிக் கொள்ள நேரிடும். தனக்கும் பாடசாலைக்கும் அவமானத்தைத் தேடிக் கொடுத்தவராகுவர். எனவே இவர்கள் பார்த்தெழுத முடியாமல் பரீட்சையில் தோல்வி அடைவர். இவ்வாறு இறுதிப் பரீட்சையில் தோல்வியைத் தழுவி எல்லோருக்கும் ஏமாற்றத்தைக் கொடுப்பதுடன் தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டதாக முடியும்.

தவணைப் பரீட்சைகளில் தான் கேட்கும்போது சொல்லித் தரவில்லை என்றும் எழுதிய விடைத்தாளைப் பார்த்து எழுதத் தரவில்லையென்றும் சக மாணவர்களை வசைபாடும் பிள்ளைகளும் இருக்கிறார்கள். தமக்கு உதவ மறுப்பவர்களாக அவர்களைச் சித்திரிப்பார்கள்.

இவ்வாறு பார்த்து எழுதுவதையே பழக்கமாக்கியதன் விளைவு பிள்ளைகளின் எதிர்காலத்தைச் சூனியமாக்கிவிடும். எனவே உங்கள் பிள்ளைகளை சரிவரக் கண்காணித்து அவர்களிடமுள்ள சோம்பேறித்தனத்தை நீக்குங்கள். முயற்சியுடையவர் ஆக்குங்கள்.

சோம்பேறித்தனமும் போதை போன்றது. அதுவும் பழக்கப்பட்டால் மாற்றிக் கொள்வது கடினம்.

School என்ற ஆறு எழுத்து சொல்லிற்கு விளக்கம் தெரியுமா?

- S - Sincere – உண்மை
- C - Charecter – நடத்தை
- H - Health – ஆரோக்கியம்
- O - Obedient – கீழ்ப்படிவு
- O - Order – ஒழுங்கு
- L - Learn – அறிவு

ஆசிரியரின் மகிமை

- T - Tact – சாமர்த்தியம்
- E - Education – கல்வியறிவு
- A - Ability – திறமை
- C - Character – நன்னடத்தை
- H - Health – ஆரோக்கியம்
- E - Enthusiasm – ஊக்கம்
- R - Regularity – ஒழுங்குமறை

அம்பலத்தில் பினா

அம்பலம் என்பது பாதையோரத்தில் உள்ள வழிப்போக்கர்களின் தங்குமிடமாகும். பினா என்பவன் அத்தகைய அம்பலம் ஒன்றில் சீவித்து வந்தான். அவன் ஒரு நாள் ஒரு தொகைப் பானைகளை அம்பலத்திற்கு எடுத்துக் கொண்டு வந்தான். இதைக்கண்ட அங்கிருந்த ஒரு மாட்டிற்கு ஒரே குதூகலம். அந்தக் குதூகலத்தில் மாடு குதித்து ஆடி அந்தப் பானைகளை எல்லாம் உடைத்து விட்டது. இந்த நிகழ்ச்சி பெரும் விநோதமாக அமைந்து விட்டது. இதைப் பற்றி எல்லோரும் இப்படி பாடினார்கள்.

''அம்பலத்திற்கு பினா கொண்டு வந்தான் பானை அதை உடைத்தது மாடு வந்தது எனக்கு சிரிப்பு''

உங்களுக்குத் தெரியுமா?

கர்ணன் தாய் குந்தியிடம் ஆறிலும் சாவு, நூறிலும் சாவு என்று சொல்லும் பகுதியைப் பற்றிய பாடம் போய்க்கொண்டிருந்தது.

"இதற்கு அர்த்தம் என்ன? என்று குரு கேட்டார்."

மாணவன் ஒருவன் தெளிவாக புரிகிறதே குரு... ஆறு வயதிலும் சாவு நூறு வயதிலும் சாவு வரும் அதுதானே அர்த்தம்? என்றான்.

குருவும் சிரித்துக்கொண்டே விளங்கினார். இந்த உரையாடலை கர்ணன் தன் தாயிடம் சொல்கிறான்...

அம்மா பஞ்சபாண்டவர்களாகிய ஐவரோடு சேர்ந்து ஆறாவதாக நான் இணைந்தாலும் போரில் மடிய வாய்ப்புண்டு. நூறு பேர் கொண்ட துரியோதனன் படையில் இருந்தாலும் எனக்கு மரணம் நிச்சயம். மரணத்தை எவராலும் தடுக்க இயலாது என்கிறான்.

தொகுப்பு:-
கொக்குவில் பொது நூலகம்

உன் கண்ணில் நீர் வடிந்தால்
என் கண்ணில் உதிரம் கொட்டுதடி...
– மகாகவி பாரதியார்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை போயகலாப் பொல்லா வினை

2018ஆம் ஆண்டில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் களின் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முற்பகல் வேளை வெளியாகியது.

நேற்றைய நாள் சர்வதேச ஆசிரியர் தினம் என்பதால் அனைத்து பாடசாலைகளும் ஆசிரி யர் தினக் கொண்டாட்டத்தில் சுறுசுறுப்பாக இருந்தவேளை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட் சைப் பெறுபேறு வெளியானதால் பதற்றமும் பதகளிப்பும் பாடசாலைகளைத் தொற்றிக் கொண்டன.

ஆசையோடுகட்டிக்கொண்டுவந்தமாலையை ஆசிரியர் கழுத்தில் அணிவிப்பதா? அல்லது வெட்டுப்புள்ளியைத் தொட்டுவிட முடியவில் லையே என்ற கவலையில் கண்ணீர் விடு வதா? என்ற ஏக்கம் பச்சிளம் பாலகர்களைத் பற்றிக் கொண்டது.

சித்தியடைந்த மாணவர்கள் மகிழ்ச்சியில் மிதந்தனர். அதிலும் உச்சப்புள்ளி எடுக்கவில் லையே என்ற கவலையும் சிலரிடம் வந்து போனது.

அதேநேரம் வெட்டுப்புள்ளியை எட்டமுடி யாத மாணவர்கள் பலரும் கண்ணீர் விட்டு அழுதனர். இது கண்ட ஆசிரியர்கள் தாமும் கழிவிரக்கம் கொண்டனர்.

ஆசிரியர் தினத்தில் அப்படியொரு களேபரம். ஏன்தான் இப்படிச் செய்கிறார்கள் என்ற முணு முணுப்போடு, ஆசிரியர் தினக் கொண்டாட்டம் சோபை இழந்து போனது.

இப்படித்தான் ஒருமுறை சர்வதேச சிறுவர் தினமாசிய ஒக்டோபர் முதலாம் திகதி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றை வெளி யிட்டு சிறுவர்களை அழவைத்து சிறுவர் தினத் தையே சிதைத்தனர்.

இப்போது சர்வதேச ஆசிரியர் தினமாகிய ஒக்டோபர் ஐந்தாம் திகதியாகிய நேற்றைய தினம், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட்டு மாணவர்களைக் கலக்கமடையச் செய்து ஆசிரியர்களைக் குழப்பி எல்லாவற்றையும் களேபரமாக்கியுள்ளனர்.

பத்து வயதுப் பாலகர்களின் மனநிலையை அறிந்து அதற்கேற்றாற்போல் பரீட்சைப் பெறு பேற்றை வெளியிடக்கூடத் தெரியாத மத்திய கல்வி அமைச்சும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களமும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாற்றீடான வழிமுறையைக் கண் டறியும் என்று யார் நினைத்தாலும் அதை விட்ட மடமைத்தனம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

சரி, சர்வதேச ஆசிரியர் தினம் ஐந்தாம் திகதி யாக இருந்தபோதிலும் இலங்கையில் ஒக் டோபர் 6ஆம் திகதி ஆசிரியர் தினம் என்று யாரேனும் எதிர்வாதம் புரிந்தால்,

ஐந்தாம் திகதி புலமைப்பரிசில் பரீட்சைப் பெறு பேற்றை வெளியிட்டுவிட்டு மறுநாள் ஆசிரியர் தினத்தை கொண்டாடினால் தரம் ஐந்தில் 15 வீதமான மாணவர்கள் மட்டும்தான் அந்நிகழ் வில் கலந்து கொள்வர் என்பதையாவது மத் திய கல்வி அமைச்சு கணக்கிட்டுக் கொள்ள வேண்டும்.

எதுஎவ்வாறாயினும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை என்ற துன்பம் போயகலாத பொல்லா வினை என்றறிவதைத் தவிர வேறேது மில்லை.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் குற்றச்செயல்கள் தற்போது குறைவு

சட்டம், ஒழுங்கு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸார் வினைத் திறனுடன் செயற்பட்டு வரு கின்றபோதும், மக்களுக்கு மேலும் சிறந்த சேவையைப் பெற்றுக் கொடுக்க பொலிஸ் சேவையை மறுசீரமைப்பத ற்கான திட்டம் தயாரிக்கப் பட்டிருப்பதாக பொதுநிர்வாக மற்றும் சட்டம், ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் குற்றச் செயல் கள் குறைந்திருப்பதுடன், அவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸார் முழு அளவி லான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியிருப்ப தாகவும் அமைச்சர் தெரி வித்தார்.

பொதுநிர்வாக மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெ ற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார மேற் கண்டவாறு தெரிவித்தார். பொலிஸ் மாஅதிபர் மற்றும் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஒருவர் உட்பட பொலிஸார் மீது தொடர்ச்சியான குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான சம்பவங்களால் பொலிஸார் அதிருப்திக்கு உள்ளாகியுள் ளனரா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் வழங் கும் வகையிலேயே அமைச் சர் இவ்வாறு தெரிவித்தார்.

எந்தவித அரசியல் தலை யீடுகளும் இன்றி சுயாதீன மாக தமது பணிகளை முன் னெடுப்பதற்கான சூழல் தற் பொழுது பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி அவர களின் சம்பளங்கள் 40 வீதத்தால் அதிகரிக்கப்பட் டுள்ளன. ஒருசில குறைபாடு கள் இருந்தாலும் பொலி ஸார் வினைத்திறனான சேவையை வழங்கி வரு கின்றனர்.

பொலிஸாரின் வினைத் திறனை மேலும் அதிகரிக் கும் வகையில் மறுசீரமைப் பதற்கு திட்டமிட்டுள்ளோம். இது தொடர்பில் ஆராய்வத ற்கு குழுவொன்றை நிய மித்திருந்தேன். இந்தக் குழு பல தரப்புக்களுடன் கலந் துரையாடல்களை நடத்தி அறிக்கையொன்றை தயாரி த்திருப்பதுடன், இதனை அமைச்சரவைக்கு விரை வில் சமர்ப்பிக்க விருப்பதாக வும் அமைச்சர் சுட்டிக்காட்டி னார்.

பொலிஸார் குறித்து தற் பொழுது குற்றம் சாட்டும் கடந்த ஆட்சியாளர்கள், அவர களின் ஆட்சியில் பொலி ஸாரை நடத்திய விதம் தொடர் பில் நினைத்துப்பார்க்க வேண டும். 19ஆவது திருத்தச் சட் டத்தின் ஊடாக பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கப் பட்டுள்ளது.

சாதாரண பொலிஸ்கான்ஸ டபிள் கூட இந்த ஆணைக்கு முவில் முறையிட்டு தீர்வொ ன்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேநேரம், கடந்த வரு டங்களுடன் ஒப்பிடுகையில் குற்றச் செயல்கள் குறைந் துள்ளன. 2013ஆம் ஆண்டு 556 படுகொலைச் சம்பவங் கள் இடம்பெற்றிருந்தன. இந்த எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டு 452 ஆகக் குறைந்துள்ளது. 2018ஆம் ஆண்டில் இதுவரை 320 படுகொலைச் சம்பவங்களே பதிவாகியுள்ளன. 2011ஆம் ஆண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை 72 எனினும், 2017ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 42 ஆகக் குறைந்துள்ளது. பொலிஸாரின் முயற்சியா லேயே குற்றச்செயல்களைக் குறைக்க முடிந்துள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்

மக்களின் உரிமைகளை மீறும் சட்டம்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது, பயங்கரவாத த்தை ஒழிக்கும் போர்வை யில், சாதாரண மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் ஒரு சட்டமாகுமென வும், இதற்குக் கீழே 106 அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளரெனவும், முன்னிலை சோஷலிஸக் கட்சியின் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்தார்.

அத்தோடு, தற்பொழுது இலங்கையில் காணப்படும் அரசியல் கைதிகள் 106 பேரில், 35 பேர் தண்ட னைகள் வழங்கப்பட்டு இரு க்கின்றனர் எனவும், 42 பேர் வழக்குத் தாக்கல் செய் யப்பட்ட வண்ணமுள்ளனர் என்பதோடு, 12 பேர் வழக் குகள் ஏதுமின்றி வருடக் கணக்காக தடுத்து வைக்கப் பட்டுள்ளனர் என்று குறிப் பிட்ட அவர், இச்சட்டத்தை ஒழிக்கும்படி, 1979ஆம் ஆண் டிலிருந்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவ தையும் சுட்டிக் காட்டினார்.

15 ஆண்டுகள் வரை, குறுகிய சாட்டுகளுக்கான வழக் குகள் எவையும் தாக்கல் செய்யப்படாமல், பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் பல கைதிகள் இருந்து வருகின்றனர் எனத் தெரிவித்த அவர், தற்பொழுது இருக்கும் அரசாங்கம், பயங் கரவாதத் தடுப்புச் சட்டத்தை இல்லாது செய்வதைக் காட்டி லும், மரண தண்டனையை மீளக் கொண்டு வருவது தொடர்பில் மும்முரமாகச் செயற்பட்டு வருகிறது எனக் குற்றஞ் சாட்டினார். (இ-7)

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைக ளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியிலி ருந்து மாலை 6 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** தொண் டைமானாறு, கெருடாவில், அக்கரை, வளலாய், மயி லியதனை, சிதம்பரா கல் லூரி, பாலாவோடை இணு வில், டச்சு வீதி, உடுவில், சங்குவேலி, மருதனார் மடம் ஒருபகுதி, சுன்னாகம் இலங்கை வங்கி பிரதேசம், அம்பலவாணர் வீதி, யாழ் பல்கலைகழக நுண்கலைப் பீட பிரதேசம், புலோப்பளை, அல்லிப்பளை, ஆக் வீதி உடுவில், சுன்னாகம் ஒரு பகுதி, மக்கள் வங்கி சுன் னாகம், கொத்தியாவத்தை, கந்தையா உபாத்தியார் வீதி, ஜெட்மோட்டர்ஸ், மல்லா கம், ஏழாலை, அலுக்கை, பன்னாலை, அளவெட்டி, அம்பனை, தெல்லிப்பழை, துர்க்காபுரம், கார்கில்ஸ் சுன்னாகம், மல்லாகம் நீதி மன்றம், கந்தரோடை, பிப் பிலி, கட்டுடை, சீரணி, சண் டிலிப்பாய், மாகியப்பிட்டி, பெருமாள்கடவை, துணவி, சங்கானை, தொட்டிலடி, பண்டத்தரிப்பு, விழிசிட்டி, தொல்புரம், சுழிபுரம், கள்ள வேம்படி, வடலியடைப்பு, சில்லாலை, சாந்தை, விளான, பெரியவிளான், இள வாலை, மாரீசன்கூடல், சேந்தாங்கு ளம், மாதகல், காஞ்சிபுரம், ஜம்புகோளபட்டிணம், குசுமாந் துறை, காட்டுபுலம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** பூந்தோட்டம் கிராமத்திலும் **மன்னார் பிரதேசத்தில்** மணல்கு ளம், இலந்தைமோட்டை, சூரியகட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்-2018

யாழ். கரணவாய் வேதராணியேல்வரா வித்தியாலயம்

ச.சுபன்-185 ச.கேதாரன் - 181, இ.தமிழோவியன்-174, கோ.கம்சிகன்-171, நா. மதிநேயன்- 169, தெ. பிரார் த்தனா-169, ஜெயஸ்மிகா-165.

யாழ். கரணவாய் தாமோதர வித்தியாலயம்

கு.அபர்ணா-193, பி.சுபா ங்கி-176, நே.தாயகன்-171, பி.ஆதீஸ்-171, ல.லக்சனா-170, து.தினோஜிகா-168, ர.பவிஷாயினி-168.

யாழ்.வதிரி திரு இருதயக் கல்லூரி

க.விகாஸ்-170, ர.லதுஷா யினி-166.

பட்டப்பகலில் வீட்டுக்குள் நுழைந்த இளைஞன் நேற்று மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

பட்டப்பகலில் வீட்டிற்குள் நுழைந்த இளைஞன் திருட் டுக் குற்றச்சாட்டில் ஊர்மக்க ளால் பிடிக்கப்பட்டு பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூ ரிக்கு அருகாமையிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள் ளது.

இந்தச் சம்பவம் தொடர் பில் மேலும் தெரியவருவ தாவது,

யாழ்.இந்து மகளிர் கல் லூரிக்கு அருகாமையி லுள்ள யாருமற்ற வீட்டிற் குள் மூவர் நுழைவதை அப் பகுதியில் நின்ற ஆட்டோச் சாரதி ஒருவர் அவதானித் துள்ளார்.

இதனையடுத்து அப் பகுதி மக்களுக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தப் பட்டபோது அந்தப் பகுதி யில் நின்ற இளைஞர்கள் குறித்த வீட்டிற்குச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் இளை ஞர்கள் வருவதை அவதா னித்த குறித்த நபர்களில் இருவர் இலக்கத் தகடு அற்ற மோட்டார் சைக்கிளில் தப்பி யோடியுள்ளனர். ஒருவர் வசமாக மாட்டிக்கொண்டார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் பிடிக்கப்பட்ட நபரை கைவி லங்கிட்டு பொலிஸ் நிலை யத்திற்குக் கொண்டு சென்ற னர். (இ)

படிப்பில் கவனம்...

- படிக்கும்போது வாய்விட்டுப் படிக்கவேண்டும். ஆழ்ந்து சிந்தித்து உணர்ந்து படிக்க வேண்டும்.
- புரியாதவைகளைப் பலமுறை படித்துப் பார்த்து புரிந்து கொள்ளல் வேண்டும்.
- கவனத்தைத் திசை திருப்பாது இருக்க வேண் டும். எழுதிப் பார்த்து தானே தவறுகளைத் திருத் திச் சரி பார்க்க வேண்டும்.
- சிந்தனைகளை ஒருநிலைப்படுத்தி படித்தால் வெற்றிக்கு ஏதுவாகும்.
- ஆசிரியர்களிடம் சந்தேகத்தைக் கேட்டு தெளிவு படுத்திக்கொண்டு சிறந்த மாணவ மணிகளாகத் திகழத் தயாராகுங்கள்.

றோயல் அணியை வென்று இறுதிக்குள் நுழைந்தது பாடும்மீன்

அரையிறுதியில் ஊரெழு றோயல் அணியுடன் மிகுந்த போராட்டத்தின் மத்தியில் பெனால்டி வரை சென்று வெற்றி பெற்று, தொடர்ந்து 3 ஆவது ஆண்டாக குருநகர் பாடும்மீன் அணி இறுதிக்குள் நுழைந்தது. றோயல் அணி, தொடர்ச்சியாக அதிர்ஷ்டம் இல்லாத அணியாக முக்கியமான போட்டிகளில் தோல்வியடைந்து வெளியேறியது.

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம், தமது நூற்றாண்டு விழாவையொட்டி 'வடக்கின் கில்லாடியார்" என்னும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

வருடாவருடம் யாழின் கில்லாடி என நடத்தப்பட்டு வந்த இந்தச் சுற்றுப்போட்டியானது, இந்த வருடம் வடக்கின் கில்லாடியாக மாற்றப்பட்டு, வடமாகாணம் தழுவிய வகையில் மொத்தம் 32 அணிகள் இந்தச் சுற்றில் பங்குபற்றின.

இந்தச் சுற்றுப்போட்டியின் இரண்டாவது அரையிறுதியாட்டம் கடந்த 4 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது.

போட்டி நேரத்தில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் போடவில்லை. தொடர்ந்து வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது. அதில் பாடும்மீன் அணி, 04:03 என்ற கோல்கள் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

இறுதிப் போட்டி 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சுற்றுப்போட்டியில் இரண்டு வருடங்களிலும் குருநகர் பாடும்மீன் அணி சம்பியனாகியிருந்தது. இந்நிலையில், மூன்றாவது ஆண்டிலும் பாடும்மீன் அணி இறுதிக்குள் நுழைந்துள்ளது.

இறுதிப்போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இந்த இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணி, இளவாலை யங் ஹென்றிஸ் அணியை எதிர்த்தாடவுள்ளது.

இன்று நடைபெறவுள்ள 3 ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து கிளிநொச்சி உருத்திர புரம் அணி மோதவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-26-106)

ஆனைக்கோட்டை யூனியனை வீழ்த்தி மல்லாகம் ஸ்ரார் அணி சம்பியன்

தாவடி வேத விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 7 பேர் 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் மல்லாகம் ஸ்ரார் அணி சம்பியனானது.

இறுதிப் போட்டியில் மல்லாகம் ஸ்ரார் அணியும் ஆனைக்கோட்டை யூனியன் அணியும் கிண்ணத்திற்கான பலப் பரீட்சையை நடத்தினர்.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற மல்லாகம் ஸ்ரார் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

துடுப்பெடுத்தாடிய மல்லாகம் ஸ்ரார் அணி 6 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகளை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

86 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆனைக்கோட்டை யூனியன் அணி 4.3 ஓவர்கள் நிறைவில் 49 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன்மூலம் 36 ஓட்டங்களால் மல்லாகம் ஸ்ரார் அணி அபார வெற்றி பெற்று தாவடி வேத விநாயகர் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. (க)

3,4 ஆம் திகதிகளிலும் வடக்கிற்கு பதக்கங்கள்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த 1 ஆம் திகதி முதல கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

3 ஆம் திகதி நடைபெற்ற 3 ஆம் நாள் போட்டிகளில்,

18 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் எஸ்.திசாந்த் 4.35 மீற்றர் உயரம் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

மகாஜனக் கல்லூரியின் சி.ஜாம்சன் மற்றும் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த விறொசாந்த் ஆகியோர் 3.80 மீற்றர் உயரம் தாண்டி வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றனர்.

4 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற 4 ஆம் நாள் போட்டிகளில் 18 வயதுப் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் என்.டக்ஸிதா 3.10 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார். அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த தனு சங்கரி 3 ஆம் இடத்தைப் பெற்றார்.

16 வயதுப்பிரிவு ஆண்களுக்கான தட்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மிதுன்ராஜ் 50.83 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கம் பெற்றார். (க-26)

தோட்டக்காணி விற்பனைக்கு

வடமராட்சி கிழக்கு,குடத்தனை சந்திக்கு அருகில் தொழிற்சாலைகள், பண்ணைகள் மற்றும் பாரிய தொழில் திட்டங்களுக்கு உகந்த 10 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

077 956 1525,077 193 0232

(சி-4059)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

ENGLISH MEDIUM

MATHS, SCIENCE, HELTH

Gr 6 தொடக்கம் G.C.E (O/L) தனியாகவோ, குழுவாகவோ ஒழுங்கு செய்யப்படுமிடத்து வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.

V.றமேஸ், பிறேம் Sir

077 644 4160

பாராட்டி வாழ்த்து

திருமதி கலாராணி இரத்தினசிங்கம்

எமது பாடசாலையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் திருமதி கலாராணி இரத்தினசிங்கம் அவர்கள் 2018ம் ஆண்டுக்கான குரு பிரதீபா பிரபா விருதினைப் பெற்றுக் கொண்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மு/கோம்பாவில் விக்னேஸ்வரா அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகம்.

(சி-4076)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி ஜெசிகரன் பத்மலோஜினி (B.A, P.G.D.E)

திருமதி டிலக்ஷா சண்முகராஜா (B.A)

05.10.2018 அன்று தேசிய மட்டத்தில் கௌரவிக்கப்பட்ட "குரு பிரதீபா பிரபா" விருதினைப் பெற்றமையினை இட்டு இவர்களை அகமகிழ்ந்து வாழ்த்துவதுடன் அவர்கள் மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகிறோம்.

கிளி/கண்ணகை அம்மன் வித்தியாலயம், ஆனையிறவு,

அதிபர், ஆசிரியர்கள்

(C-4068)

அரசியல்கைதிகளை...

விடுத்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில்

நடப்பு நல்லாட்சி தேசிய அரசாங்கத்தின் காலத்திலும் தங்களின் மென்போக்கு தலைமைத்துவ காலத்திலும் தான் தமிழர்களின் அவசர அவசிய பிரச்சினைகளுக்கு தீர்வினை காண முடியுமென்று அரசாங்கமும் நீங்களும் நம்புகின்றதுக்கு அமைய அரசியல் கைதிகளான நாமும் அதனை நம்புகின்றோம்.

அதற்கான சத்தியத்தை வெளிப்படுத்தும் பொறுப்பு உங்களில் தான் தங்கியுள்ளது என்று நம்பியே கடந்த காலத்தில் நீங்கள் வழங்கிய வாக்குறுதிகளை வேதமாக எண்ணி விடுதலைக்காக காத்திருந்தோம் இன்னும் காத்திருக்கின்றோம்.

வராலாற்றில் முதற் தடவையாக பெரும் பான்மை அரசியல் தலைமைகள் சிலர் எமது விடுதலை தொடர்பில் சாதகமான சமிஞ்சையினை பொது வெளிப்படுத்தி வருகிறார்கள் இச் சந்தர்ப்பம் முக்கியமானது என்பதை தாங்கள் அறிவீர்கள் எமது சமூகம் தக்க சந்தர்ப்பங்களை தவற விட்டதால் தான் இன்று வரை தீர்வுகளுக்காக போராடிக் கொண்டிருக்கிறது.

ஆகவே கனிந்து வரும் காலத்தை கையகப்படுத்தி கட்சி பிரதேச வேறுபாடுகளை களைந்து பாராளுமன்றத்தில் இருக்கின்ற அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து எமது விடுதலை தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரை ஒரு மேசையில் சந்தித்துப் பேச நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பேச்சு மேசையில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர், தேசிய நல்லிணக்க சமூக கலந்துரையாடல் அமைச்சர், சட்டமா அதிபர் ஆகியோரின் பிரசன்னம் அவசியம் இருக்க வேண்டும். குறித்த பேச்சு வார்த்தையானது அரசியல் தீர்மானம் ஒன்றின் மூலம் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கானதாக அமைய வேண்டும்.

இல்லையெனில் ஒரு தரப்பின் மீது மற்றைய தரப்பு பொறுப்பை சுமத்தி விட்டு சும்மா இருந்து விடும். வழக்கு விசாரணையை துரிதப்படுத்துகின்றோம். விசேட நீதிமன்றங்களை அமைக்கின்றோம். கோவைகளை ஆராய்கின்றோம். குழுக்களை அமைக்கின்றோம் என வழமையான வாக்குறுதி வழங்கும் வகையில் பேச்சு மேசை அமைந்து விடக் கூடாது.

இவ்வாறு அனைவருக்கும் அழைப்பு விடுத்து இவ் விவகாரத்தை கட்சிதமாக நிறைவேற்றும் தகைமை தங்களுக்கே இருக்கின்றமையால் காலம் தாழ்த்தாது இந்த முக்கிய வரலாற்று கடமையை செய்ய முன்வரவேண்டும். அதன்மூலம் வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மலையகம் உள்ளிட்ட நூறுக்கு மேற்பட்ட குடும்பங்களினதும் பல நூறு பிள்ளைகளினதும் கண்ணீரை நானான கவலையை போக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தினை அரசியல்கைதிகள் சார்பாக அவர்களது உறவினர்கள் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஊடாக சம்பந்தருக்கு அனுப்பியிருந்தனர். (ம-9)

அதிகார பகிர்வு...

இலங்கைக்கு சென்றுள்ள பிரித்தானியாவின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்கான அமைச்சர் மார்க் பீல்ட் நேற்று வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தனை சந்தித்துள்ளார். இந்த சந்திப்பின் போதே சம்பந்தன் இந்த விடயத்தை எடுத்து கூறியுள்ளார்.

கடந்த அரசாங்கத்தோடு ஒப்பிடுகையில் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளில் மாற்றம் உள்ளதாக இந்த சந்திப்பில், அமைச்சர் மார்க் பீல்டிடம், சம்பந்தன் எடுத்துரைத்துள்ளார்.

மேலும் காணி பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் ஆகிய விடயங்களில் குறிப்பிடத்தக்க தாமதம் நிலவுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த விடயங்கள் தாமதங்களின்றி செயற படுத்தப்பட்டிருக்க வேண்டியவை எனவும் சம்பந்தன், அமைச்சர் மார்க் பீல்ட்டிடம் எடுத்து கூறியுள்ளார்.

மேலும் உண்மையை கண்டறிவதற்கான ஆணைக்குழு இன்னமும் நிறுவப் படாமை கவனிக்கப்படவேண்டிய விடயம் எனவும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் அதிகாரப்பகிர்வு கோரிக்கையானது ஒரு அரசியல் யாப்பினூடாக தீர்க்கப்பட வேண்டியது அவசியம் எனவும் கூட்டமைப்பின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

பிளவுபடாத, பிரிக்கமுடியாத ஒருமித்த இலங்கையில் தீர்வொன்றை எதிர்பார்ப்பதாக சுட்டிக்காட்டிய சம்பந்தன், இதற்கு மக்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இந்த சந்திப்பில் கருத்து தெரிவித்த கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பில் அரச தலைவர்கள் மத்தியில் அரசியல் விருப்பு குறைவாக காணப்படுவதாக தெரிவித்தார்.

அதேவேளை அநேக விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டபோதிலும் இன்னும் ஒரு தயக்க நிலை அரச தலைவர்கள் மத்தியில் காணப்படுவதாகவும், சுமந்திரன் தெரிவித்தார்.

மேலும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் அரசாங்கம் பாரிய தாமதத்தை கொண்டுள்ளதாகவும் கூட்டமைப்பின் தலைவர் எடுத்துரைத்துள்ளார்.

சுமார் ஒரு மணித்தியாலம் இடம் பெற்ற இந்த சந்திப்பில் இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஜேம்ஸ் டோரிஸ் மற்றும் தூதரக அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். (ம)

சர்வதேச மட்டத்தில்...

உலகத்தை ஏமாற்றுவதற்காகவே தமிழ் தேசிய கூட்டமைப்பு கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டியும் நேற்று மாவட்ட செயலகத்திற்கு முன்னால் மாபெரும் கண்டன போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அதில் கலந்துகொண்டு கருத்துதெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்த நாட்டிலே ஜேவிபியினர் ஆயுதம் ஏந்தி அரசாங்கத்தை கவிழ்த்து ஆட்சியை கைப்பற்றுவதற்கு போராடிய காலத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் தமிழ் அரசியல் கைதிகள் என்ற காரணத்தினல் அரசாங்கம் புறக்கணித்துள்ளது. தமிழ் அரசியல்கைதிகளை விசாரணை நடத்த ஒரு விசேட விசாரணைக் குழுவை அரசு இதுவரை நியமிக்கவில்லை.

அவர்கள் எதற்காக போராடினார்கள் என்பதன் உண்மைகளை கண்டறிந்து அதற்கு தீர்வைக்காண முன்வரவில்லை.10 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்கைதிகளை வாட்டி வதைத்து அந்த இளைஞர்கள் தமது உயிர்களை பணயம் வைத்து சிறைக்குள்ளேயே உண்ணாவிரதப்போராட்டம் நடத்த இந்த அரசு வைத்துள்ளது. இவற்றை நாங்கள் தீவிரமாக கண்டிக்கின்றோம்.

அதே நேரத்தில் இந்த சிறைக்கைதிகள் நிச்சயமாக மிகவிரைவில் விடுவிக்கப்பட வேண்டும்.

அப்படி அவர்கள் விடுவிக்கப்படாத பட்சத்தில் நாங்கள் இவ்வாறாக கண்டண போராட்டங்களை கொழும்பிலும் தொடரவேண்டியிருக்கும் அவ்வாறு போராடுவது மட்டுமல்ல சர்வதேச ராஜதந்திரிகளிடத்தில் ஐ.நா மனித உரிமை பேரவை ஆணையாளர்களிடத்தில் முறையிடவேண்டியிருக்கும்.

ஏற்கெனவே பல நாட்டு தூதரகங்களில் இந்த விடயம் குறித்து நாங்கள் பேசியிருக்கின்றோம்.

கடந்த 2015ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவோம் கைதிகளின் விடுதலை தொடர்பில் பொருத்தமான முடிவுகள் எடுப்போம் என்று வாக்குறுதி அளித்து ஐ.நாவில் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றது.

ஆனால் கடந்த 25ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெற்ற ஐ.நா பொது கூட்டத்திலே ஜனாதிபதி உள்நாட்டிலேயே இந்தப்பிரச்சினைகளுக்கு தீர்வைகாணவேண்டும் என்று கூறியிருப்பது இந்த பிரச்சனைகள் உள்நாட்டில் தீர்க்கப்படவில்லை என்பதை நிரூபிக்கின்றது.

கடந்த கால அரசாங்கங்கள் ஒரு போரை ஏற்படுத்திய காரணத்தினால் அதன் விளைவுகளால் இன்று சர்வதேசம் தலையிட்டிருக்கின்றது.

2015ஆம் ஆண்டு ஐ.நாவில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐ.நாவில் ஒப்புக்கொண்ட அந்த தீர்மானத்திற்கு எதிராக இன்று ஜனாதிபதி உள்நாட்டிலேயே தீர்வு காணுவது என்று கூறுவதை எங்களால் ஏற்றுக்கொள்ளமுடியாது.

எங்களை மட்டுமல்ல இந்த உலகத்தை ஏமற்றுவதற்காகவே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டிருந்தால் இந்த ஆட்சிக்கு எதிராக ஜனாதிபதிக்கு எதிராக நாங்கள் ஆராய்ந்த நடவடிக்கையை சர்வதேச மட்டத்தில் எடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

3 ஆண்டுகளுக்கு பின்னரும் ஜனாதிபதி தமிழ்மக்களுடைய போராட்டங்களுக்கும் கைதிகளுடைய போராட்டங்களுக்கு எங்களுடைய கட்சிகளுடைய வேண்டுகோள்களுக்கு செவிசாய்க்காமல் இருக்கின்றது. உடனடியாக விரைந்து தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு குறிப்பாக தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும்.

புனர்வாழ்வு அளித்து பொதுமன்னிப்பில் அவர்கள் விடுவிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டு ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டும்.

நேற்று முல்லைத்தீவில் மக்கள் கூடி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். பல மாவட்டங்களில் இந்த போராட்டங்கள் தொடர்கின்றன இதற்கு ஜனாதிபதி செவிசாய்து தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும், என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும் இங்கு கூடியிருக்கின்ற தமிழ்மக்கள் சார்பிலும் நாங்கள் இந்த அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றோம் என்று தெரிவித்தார். (ம-281)

தரம் 5 புலமைப்...

வெயங்கொட-சென்.மேரிஸ் கல்லூரியின் குருகுலசூரிய சனுபா திமத் பெரேராவும் பெற்றுள்ளனர். இருவரும் 199 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தை பெற்றுள்ளனர்.

இதே வேளை, மினுவாங்கொட ரெஜி ரணதுங்க ஆரம்பப்பாடசாலை மாணவனான சென்ஜுய் அகித்ம ஹெட்டியாராச்சி, யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவனான எம்.திகழொளிபவன், சாவகச்சேரி ஆரம்ப பாடசாலை மாணவியான நவஸ்கன் நதி ஆகியோர் 198 புள்ளிகளைப் பெற்று தேசிய ரீதியில் 2ஆவது இடத்திலுள்ளனர். மூன் றாம் இடத்தில் ரெஜி ரணத்துங்க ஆரம்ப வித்தியாலயம்-மினுவாங்கொடையைச் சேர்ந்த ஹெட்டியாராச்சி செனுஜி அக்கித்ம ஹெட்டியாராச்சி பெற்றுள்ளார்.

இந்நிலையில் தமிழ் மொழியில் இரண்டாம் இடத்தை வவுனியா சிவபுரம் ஆரம்ப பாடசாலையை சேர்ந்த பாலக்குமார் ஹரித்திக்ஹன்சுஜா பெற்றுள்ளார். அவர் 197 புள்ளிகளை பெற்றுள்ள நிலையில் அகில இலங்கை ரீதியில் அவர் 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன் கனகலிங்கம் தேனுசன் 196 புள்ளிகளை மாவட்ட மட்டத்தில் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெடுங்கேணி மாமடு, பழம்பாசி அ.த.க பாடசாலை மாணவி துஷ்சாதனா 195 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் மன்/கருங்கண்டல் RCTMS பாடசாலை மாணவன் தி. திருக்குமரன் 187 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-9,281,250,271, 285,101)

அரசியல்கைதிகள் என...

யார் கூறுகின்றனர்?

கிறைச்சாலைகளில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் 2009ஆம் ஆண்டில் இருந்து இருப்பவர்களும் சிறையில் இருக்கின்றனர். அவர்களது வழக்குகள் இடம்பெற்று வருகின்றன.

மேலும் சிறையில் உள்ளவர்கள் உண்ணவுத்தவிர்ப்பில் ஈடுபடவில்லை மாறாக போராட்டத்தையே நடத்துகின்றனர் என தெரிவித்தார். (ம)

விடுதலையை வலி...

தேசிய அமைப்பின் ஏற்பாட்டில் அநுராதபுரம் மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று நண்பகல் 12.00 மணியளவில் இக் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசியல் கைதிகளை உடனே விடுதலை செய், புதிய சி.ரி.ஏ சட்டத்தினை உடனே நிறுத்து என்ற பல்வேறு வாசகங்களை தாங்கிய தமிழ் பதாதைகளுடனும் சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா மாவட்ட பொது அமைப்புக்கள், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், முற்போக்கு கூட்டணி, அநுராதபுர விவசாய அமைப்புக்கள் கலந்துகொண்டிருந்தன.

போராட்டத்தின் போது வீதி போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாமென போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் தள்ளியதினால் பொலிஸாருக்கும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கிடையே சிறு கருத்து முரண்பாடு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS

சந்தைப்படுத்தல் அலுவலர்கள்
marketing officers

- தகுதி– 18-25 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
- கல்வித்தகுதி எதுவும் எதிர்பார்க்கப்படமாட்டாது

சம்பளம் மாதம் 15'000/=

- வேலை செய்யும் திறமையைப்பொறுத்து மேலதிக கொடுப்பனவுகளும் உண்டு

49A சப்பல்லேன், யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்) 0768226236

கட்டார் வேலைவாய்ப்பு
வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

ஐந்து நட்சத்திர விருதுவென்ற ஒரே நிறுவனம்

Emerald Isle
Manpower & Travel Services
The SriLankan Recruitment Specialists
License No. 2268

இலவச பயணம்
சம்பளம் Rs.101,200/-

தொழில்நுட்பவியலாளர்கள்
மின்சாரம்/மெக்கானிக்/வெல்டர்/குளிர்திரளியம்/பிளம்பர்/HVAC

077 00 38 215 021 222 00 11

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS

UK– 550 /=Kg
கனடா–900 /=Kg
ஜேர்மனி– 700 /=Kg
நெதர்லாந்து–700 /=Kg
(பிரித்தானியாவுக்குட்பட்டது)

மானிப்பாய் 0768226240
யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
தெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

Business Info Skillful
Sessions will be conducted by professional Industrial Practitioners at your convenient times Call: 0212217997 or 0775587274 or 0779145159

கணனி, மடிக்கணனி திருத்தம்
உங்களின் அனைத்து விதமான கணனி, மடிக்கணனிகளின் பழுது நீக்கம், விண்டோஸ் இயங்குதளம் நிறுவுதல், வைரஸ் தடுப்பு மென்பொருள் நிறுவுதல் ஆகிய சேவைகளை எங்களிடம் மிக விரைவாகவும் தரமாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள எங்களை அணுகவும். இல.297A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: (திறந்த பல்கலைக்கழகம் அருகில்)
0770788877, 0212214300

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
அமெரிக்க கொத்தர் விசா (Green Card) பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உடனடியாக எம்மிடம் பதிவுகளை மேற்கொண்டு அமெரிக்கா செல்லும் வாய்ப்பினை பெற்றுநிற்கள்

அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | சங்கானை | ஊர்காவற்துறை | காரைநகர்
மீசாலை | கிளிநொச்சி | முல்லைத்தீவு | வவுனியா | தலைமன்னார்

ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்

வட்டுக்கோட்டை, சங்கரத்தை சந்திக்கு அருகில்.
திருமணத்தடை, புத்திரபாக்கியம்/ புத்திரபாக்கியத்தடை, தொழில் வியாபாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள்.
தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:
076 328 7119

கார் விற்பனைக்கு
Nissan Sunny N16 Super Saloon HU XXXX, Colour - Silver
Contact No: 0770155039

SB TRAVELS AND TOURS (PVT) ltd
விமான ரிக்கெட்டுக்களின் நேரடி முகவராகச் செயற்படும் SB TRAVELS AND TOURS (PVT) ltd தற்போது சென்னை சென்று வருவதற்கு ஆரம்ப விலையாக 19999/= இருந்தும் மதுரை 23500/=இல் இருந்தும் திருச்சி 35000/= இல் இருந்தும் விமான ரிக்கெட்டுக்களை வழங்கி வருகிறது.
மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான விமான ரிக்கெட்டுக்களை மிகக்குறைந்த விலைக் கழிவில் வழங்கி வருகின்றது. மேலும் இந்தியாவுக்கான விசாவினை நேரடியாக எமது நிறுவனத்தினூடாகவே விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:
Jaffna: 021 222 8555 Colombo 15: 011 254 0280
Nallur: 021 222 7666 Pettah: 011 233 3322
0771083481 Wellawatte: 011 236 1711

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

உடனடி வேலைவாய்ப்பு



இலங்கையின் முதற்தரம் வாய்ந்த கல்வி நிறுவனத்திற்கு கீழ்க்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு பணியாற்ற ஆண், பெண் இருபாலாரும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

இணைப்பாளர் (பெண் மாத்திரம்)
- A/L
- தேர்ச்சியான ஆங்கில அறிவு. (எழுதுதல் மற்றும் கதைத்தல்)
- கணனி அறிவு (MS Word and Excel)
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

சந்தைப்படுத்தல் பிரதிநிதிகள்
- ஆண், பெண் இருபாலாரும் தேவை. (யாழ்ப்பாணம், நெல்லியடி, வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு)
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிக்குரிய பெயரைக் குறிப்பிட்டு இவ் மின்னஞ்சல் முகவரிக்கு சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

British Way English Academy

தொடர்புகளுக்கு:
076 765 9415
jaffnabwea@gmail.com
முடிவுத் திகதி: 20.10.2018
HR. DIVISION

வேலைவாய்ப்பு
180 நாட்களில் நிரந்தர தொழில் வாய்ப்பு!
O/L பயின்றவர்கள் விண்ணப்பிக்கலாம் அனுபவம், கணனி, சகோதர மொழி மேலதிகத் தகைமைகளாக ஏற்றுக் கொள்ளப்படும்.
- தங்குமிடம் மருத்துவம் இலவசம்
- பயிற்சியின் போது குறைந்தது 22,000/= வரை பின்னர் 45,000/= க்கு மேல்
- 30வயதிற்கு உட்பட்ட வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் பிரதேசத்தினர் அழைக்க

தொடர்புகளுக்கு
076 7707759, 077 999 4807

பொஸ்...

கள் சித்தியடைந்துள்ளார்கள்.

இதில் யாழ். சென். பொஸ்கோ வித்தியாலயத்தில் 215 மாணவர்கள் பரீட்சையில் தோற்றியிருந்த நிலையில் 112 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் 279 மாணவர்கள் பரீட்சையில் தோற்றிய நிலையில் 103 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். (மு-9)

அரசிய...

செய்யப்பட்டிருக்கின்றதென நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

இதேவேளை, அவர்கள் தொடர்பில் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சி தலைவருடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

கண்டி நீதிமன்றில் நேற்று சட்டத்தரணிகள் சங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர்களால் கேட்கப் பட்ட கேள்விக்கு பதிலளித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் போராட்டத்தில் ஈடுபடுவது தொடர்பாக சிலர் கேள்வி எழுப்புகின்றனர். இந்த நாட்டில் அரசியல்கைதிகள்இல்லை. அரசியல் கைதிகள் இருப்பதாக 23

"ஓம் விராட் விஸ்வப்ரும்மனே நமஹ"

முதலாம் ஆண்டு திவச அழைப்பு

கடந்த ஆண்டு 17.10.2017 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர் உயர்திரு.
குழந்தை கணபதிப்பிள்ளை நடராசா
(முன்னாள் கிராமசபைத் தலைவர் - மண்டைதீவு)

முதலாவது ஆண்டு திவச நிகழ்வு நாளை (07.10.2018) ஞாயிறு காலை 9.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நண்பகல் 12 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

48, கன்னார வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். - குடும்பத்தினர்

(C-4047)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.